நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 34, 16 - 30 நவம்பர் 1993 விலை 7/=

**மலர் வளையம் அனுப்பிவைத்த மாண்பு!**

நீவிரறிவீரோ நெறி பிறழ்ந்தோர் ராணுவத்தார்
ஆவிகுடிப்போ ரென்றெல்லாம் அரற்றிடுவீர் - பாவியந்த
கிளாலிக் கதை சொன்ன கிறுக்கனுக்கு(ம்) அன்னார்
மலர் வளையம் அனுப்பி வைத்த மாண்பு

— ஈழமோகம்

# பத்திரிகையாளர் மீது
# கொலை மிரட்டல்!

## 'கிளாலிக்கான காணிக்கை இது'

**'ஒப்பிரேசன் யாழ்தேவி குறித்து எழுதியதற்கான காணிக்கை இது' எனக் குறிப்பிடப்பட்ட மலர் வளையத்துடனான கொலை மிரட்டல் ஒன்று இராணுவத்தினரால் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் விடுக்கப்பட்டிருக்கிறது. இக்பால் அத்தாஸ் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவால் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டதும் மீறினால் பழைய ரயர் தான் போட வேண்டிவரும் என எச்சரிக்கப்பட்டதும் ஏற்கனவே தெரிந்த விடயங்கள்.**

**இக்பால் அத்தாஸ் மீது ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்த கொலை மிரட்டலை கண்டித்திருந்த சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தின் செயலாளர் சமன் வஹாராய்ச்சியும், சமசமாஜக் கட்சித் தலைவர்களும் கூட இரகசியத் தொலைபேசி மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளனர்.**

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது. ஒக்டோபர் 6ம் திகதி மதியம் 1.30 மணியளவில் பொரளையில் உள்ள மலர்ச்சாலை ஒன்றிலிருந்து இராணுவத்தினரால் கொலை மிரட்டலுடன் கூடிய மலர் வளையம் ஒன்று இக்பால் அத்தாஸுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், 'முதலாம்,ஏழாம் சிங்க ரெஜிமன்ட் பொறுப்பதிகாரியாலும் ஏனைய சகல தர அதிகாரிகளாலும்' அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த அம் மலர் வளையத்தில் ''ஒப்பிரேசன் யாழ்தேவி குறித்து எழுதியதற்கான காணிக்கை இது'' எனவும் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

'சண்டே டைம்ஸ்'இன் இராணுவ விவகாரங்களுக்கான செய்தியாளரான இக்பால் அத்தாஸ் ஒக்டோபர் பத்தாம் திகதிய 'சண்டே டைம்ஸ்' இதழில் கிளாலி யுத்தத்தில் அரச படைகளின் தோல்வி குறித்து கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். (இக் கட்டுரையில் அத்தாஸ் 'ஒப்பிரேசன் யாழ்தேவி'யைத் திட்டமிடுவதில் இருந்த கோளாறுகளை சுட்டிக்காட்டியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது)

இக் கட்டுரை வெளியானதை அடுத்து இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன 'சண்டே டைம்ஸ்' நிறுவன உரிமையாளர் ரஞ்சன் விஜயவர்த்தனாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'இக்பால் அத்தாஸ் ஈழத்திற்கு ஆதரவானவர் என்றும், அவர் இராணுவத்தின் மனநிலையை சிதைக்கும் வகையிலேயே இக் கட்டுரையை எழுதியுள்ளார் என்றும் அவரை உடனடியாகவே 'சண்டே டைம்ஸ்' நிறுவனத்திலிருந்து நிறுத்திவிட வேண்டும்; இல்லாவிடின் ரயர் தான் போட வேண்டியிருக்கும்;' எனவும் ஏற்கனவே மிரட்டியிருந்தார் என்பது தெரிந்ததே.

இது தொடர்பாக சுதந்திரப் பத்திரிகை இயக்கம் கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளியிட்டதோடு (சுதந்திரப் பத்திரிகை இயக்கம் வெளியிட்ட அறிக்கை பெட்டிச் செய்தியில்) உடனடியாகப் பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடாத்தும் படியும் கோரியிருந்ததன் பின்னரே மீளவும் இந்த மிரட்டல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தவிர அத்தாஸ் மீதான கொலை மிரட்டலை கண்டித்த சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தின் செயலாளர் சமன் வஹாராய்ச்சியும் இரகசியத் தொலைபேசி மிரட்டலுக்கு உள்ளாகியிருக்கிறார். ''பழைய ரயர் ஞாபகம் இருக்கிறதா? ரயரில் எரிய விரும்பினால் சுதந்திரப் பத்திரிகை பற்றிக் கதை!'' என தொலைபேசிக் குரல் அவரை எச்சரித்திருக்கிறது.

அத்தாஸ் மீதான சிசில் வைத்தியரட்னவின் அச்சுறுத்தலைக் கண்டித்து எழுதியதற்காக சமசமாஜக் கட்சியின் தலைவர்களும் 'சமசமாஜ' என்கிற பத்திரிகையும் கொலை மிரட்டலுக்கு உள்ளாகியிருப்பதாக அதன் தலைவர் பேனாட் சொய்சா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்காச் சுதந்திரக் கட்சிக் காலத்தில் அல்ல; ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்திலேயே ஐம்பதுக்கும் மேற்பட்ட பத்திரி

→ 11




## அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

— சுதந்திரப் பத்திரிகை இயக்கம்

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ விவகாரங்களுக்கான செய்தியாளர் இக்பால் அத்தாஸுக்கு ('யாழ் தேவி இராணுவ நடவடிக்கை' என்ற தலைப்பில் இக்பால் அத்தாஸால் எழுதப்பட்டு ஒக்டோபர் பத்தாம் திகதி வெளியான கட்டுரை தொடர்பாக) இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவால் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கொலைப்பயமுறுத்தலையிட்டு சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் தனது கடுமையான எதிர்ப்பினையும், ஆட்சேபனையையும் வெளிப்படுத்தியிருக்கும் அதே வேளை இந்தப் பாரதூரமான விடயத்தையிட்டு அக்கறை கொள்ளாது இருந்துவிட முடியாதென்றும் தெரிவித்துள்ளது.

இக்பால் அத்தாஸால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தமக்கு கொலைப் பயமுறுத்தல் ஒன்று விடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவ விவகாரங்கள் தொடர்பாக செய்தி எழுதும் அல்லது அபிப்பிராயம் தெரிவிக்கும் ஒருவருக்கு நேர்ந்துள்ளதாகக் கூறப்படும் இந்த விடயம் சகலரது மனத்திலும் பெரும் பீதியினை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பத்திரிகையாளனது சுதந்திரத்திற்கும், அவனது வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் நேர்ந்துள்ள இப்பாரதூரமான தாக்குதல் குறித்து சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் ஜனாதிபதி விஜேதுங்காவை உடனடியாகவே இப்பிரச்சினை குறித்து பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடாத்துமாறு கோரியுள்ளது.

அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் இத்தகைய கொலை மிரட்டலை, அரசியலமைப்பினையும், ஜனநாயகத்தையும் உத்தியோகபூர்வமாகப் பாதுகாக்க வேண்டிய இராணுவ உயரதிகாரி ஒரு

→ 11

## நொச்சிமோட்டை சூனியப் பிரதேசம்:
## கரணம் தப்பினால் கால் போகும்!

நொச்சிமோட்டைப்பகுதியில், அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயுள்ள (No man's land) ''சூனியப் பிரதேசத்தை''க் கடந்து வருபவர்கள் சுமார் அரைமைல் தூரத்தை வயலில் -சேற்றுப்பாதையின் ஊடாகவே கடந்து வர வேண்டியுள்ளது.

''முழங்கால் ஆழமுள்ள இந்த அடிப் பாதையை விட்டு அங்குமிங்கும் சிறிது அரக்கினால் போதும்; அங்கு 'எங்கையோ மறைத்து வைத்துள்ள' மிதி வெடியிற் சிக்கி கால்களை இழக்க வேண்டி நேரிடும்'' என்று வடபகுதி பயணிகள் பெருமூச்சோடு தெரிவிக்கின்றார்கள்.

''உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கிளாலிக் கடலேரியைக் கடந்து முடிந்ததும் இனிப் பயமில்லை என்று மனதிற்கு ஓர் ஆறுதல் ஏற்படுகிறது. ஆனால் -இந்த நொச்சிமோட்டைச் சேற்று வயல் நடையில் வழுக்கி விழுந்து'' கொண்டு வரும் பேக்குகளை சேற்றில் நனையாமல் பாதுகாப்பது என்பது ஒரு பகீரதப் பிரயத்தனம் தான்'' என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சீரான-பிரதான நேர்ப்பாதை இருந்த போதிலும் பொதுமக்களோடு புலிகளும் கலந்து வந்து எம்மைத் தாக்க முயற்சிக்கின்றார்கள். இதனால் ஒரு பாதுகாப்பு முன்னேற்பாடாகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

→ 11

## 23 பேர் தற்கொலை !

இராணுவத்தை மேலும் பலப்படுத்துவதற்காக இன்னும் பத்து நிரந்தரமான படைப் பிரிவுகளையும் ஐந்து தொண்டர் படைப்பிரிவுகளையும் சேர்த்துக் கொள்ளவிருப்பதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில் வைத்தியரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் கிழக்குப் பிரதேசத்தில் பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாதொழித்து சுமூகமான நிலைமை ஒன்றின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தை இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடபகுதி யுத்தத்திற்கு கூடியளவு படையினரையும் இராணுவ தளபாடங்களையும் எடுத்துச் செல்வதற்காக எம்.ஐ 17 iv யுத்த ஹெலிகொப்ரர் மூன்றை வாங்குவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. ஏற்கனவே 'சொலாறிஸ்' என்ற ரஷ்ய நிறுவனத்திடமிருந்து எம்.ஐ.நிப் 6 ர்க ஹெலிகொப்ரர்கள் மூன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களுள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பத்தாயிரம்


→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கு தேர்தல் முஸ்தீபுகளில் ஐ.தே.க

ஒவ்வொரு அரசியல் கட்சியும், தமது கட்சியைப் பலப்படுத்துவதற்கு பலவிதமான உபாயங்களைக் கையாண்டு வருவதுண்டு. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னைப் பலப்படுத்துவதற்கு கையாண்டு வரும் முறை சற்று வித்தியாசமானது.



உள்ளூரில் உள்ள சில முக்கியஸ்தர்களின் சபலத்தைப் பயன்படுத்தி, அவர்களைக் கட்சிப் பணியில் ஈடுபடுத்துவதன் மூலம், பல தேவைகளுடன் வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் ஆதரவைப் பெற்று விடலாம் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர், மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர் முதலான அதிகாரிகளைத் தமது பிரச்சார மேடைகளில் அமர்த்தி ஐ.தே.க. மட்டக்களப்பில் ஒரு பலம்வாய்ந்த, பிரபல்யமான கட்சி என்ற மாயையை ஏற்படுத்த முயல்கின்றது.

தம்மை அணுகும் ஒவ்வொருவருக்கும் பதவியுயர்வு, வேலைவாய்ப்பு, இடமாற்றம் போன்றவை தரப்படும் என்று வாக்குறுதிகளை அளிப்பதுதான் மேற்கூறிய முக்கியஸ்தர்கள் செய்துவரும் 'கொள்கை பரப்பு' பணி.

மேற்கூறியவர்களை சார்ந்துள்ள திணைக்களங்களில் ஏற்படும் பதவி வெற்றிடம் பதவி உயர்வுகள், 'கண்ராக்ட்' என்பன இந்த முக்கியஸ்தர்களது ஜால்ராக்காரர்களும், அவர்களது உறவினர்களும் மட்டுமே அனுபவிக்கக் கூடிய உரிமைகள் என்பதால், அப்பாவி மக்கள் சந்தர்ப்பவசத்தால் இவர்களை அணுகியேயாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பலர் பலவந்தமாக ஐ.தே.க.இல் சேர்க்கப்படுகிறார்கள். இவர்கள், தங்கள் அரசியல் எதிரிகளையும், தங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களையும், பழிவாங்கும் முறை மிகவும் கீழ்த்தரமானது. தமது எதிரிகளின் உறவினர்களை பாதுகாப்பு படையினரைக் கொண்டு கைது செய்விப்பது இங்கு சாதாரணமாக நடைபெறும் செயல். (அண்மையில மட்டக்களப்பில் இருந்து மாற்றலாகிச் சென்ற சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் இப்படியான செயல்களில் மிகவும் கைதேர்ந்தவர் என்று கூறப்படுகிறது).

கைது செய்யப்படும் வாலிபர்களிடம் ஐ.தே.க.வுக்கு எதிராக நீங்களோ, உங்களைச் சார்ந்தவர்களோ செயற்படக் கூடாது என்று பாதுகாப்பு படையினர் கட்டளை இடுவார்கள். அவர்களை விடுவிக்க வரும் உறவிர்களிடம் கட்சி முக்கியஸ்தர்கள் சிலரின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள் மூலம் வந்தால் உங்கள் உறவினரை விடுவிக்க முடியும் என்று 'ஐடியா' கூறி அனுப்புவார்கள்.

இந்தக் கட்சி முக்கியஸ்தர்களின் சகபாடிகள் கூட தமது தனிப்பட்ட தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மேற்கூறிய வகையிலான அணுகுமுறைகளை கையாள்வதையும் சாதாரணமாக இங்கு காணமுடியும். பொலிஸார் ஆளும் கட்சியின் அடிவருடிகளாக செயல்படுவது தவிர்க்க முடியாத கடமை என்று கூறப்படுகின்றது.

இதனால், இப்படிப்பட்ட கட்சி பிரமுகர்களின் அடாவடித்தனமும், அதிகார துஷ்பிரயோகமும் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கின்றன. இவர்களது எதேச்சாதிகாரப் போக்கினால் பலர் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

விரைவில் நடைபெறப்போவதாகக் கூறப்படும் தேர்தலுக்கான ஆட்சேர்க்கும் பணியில் இடுபட்டுள்ள இவர்கள் 'அதிகாரிகள் சேர்க்கும் பணியில்' தான் கூடிய கவனம் எடுத்துள்ளார்கள். பொறியியலாளர் ஒருவரின் பெயரை நடைபெறாத மாநகரசபைத் தேர்தலின்; இல்லாத 'மேயர்'பதவி பட்டியலில், முதலாவதாகப் போட்டு அவருக்கும் அதிகார ஆசையை ஊட்டி, அவரையும் தம்மோடு சேர்த்துள்ளார்கள். அரசாங்க சுற்று நிருபத்தின்படி அரசாங்க கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்று தரத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் அரசியலில் ஈடுபட முடியாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஐ.தே.க.இற்கு இதில் விதிவிலக்கு உள்ளது போலும்.

இந்த நயவஞ்சகர்கள் கூட்டம் மக்களிடம் பேசும் போதும், மக்களை அணுகும் போதும் ''நாங்கள் புலிகளுடன் பேசி, அவர்கள் அனுமதியுடன்தான் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம் எனவே நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கவோ, பயப்பிடவோ தேவை இல்லை'' என்று கூறுவார்கள்.

மக்கள் படும் கஷ்டம் பற்றியோ, எமது இனம் அவர்கள் கட்சி தலைமைப் பீடத்தினால் ஏமாற்றப்படுவது பற்றியோ சிறிதும் கவலைப்படாமல், தங்களது பதவி ஒன்றையே கருத்திற்கொண்டு செயற்பட்டு வருகிறார்கள் இந்த அரசியல் முக்கியஸ்தர்கள்.

# சூழல் பாதுகாப்பு VS பாதுகாப்புக்காக காடழிப்பு.

– சத்தியேந்திரா

மட்டக்களப்பில் உள்ள பாலமீன்மடு கிராமத்தில் சூழல் பாதுகாப்புக் கூட்டம் நடாத்திக் கொண்டிருந்த போது அங்கு வந்த அரச படையினர், புலிகளுக்குப் பணம் சேர்த்துக் கொடுப்பதற்கான கூட்டம் நடாத்துவதாகக் கூறி கிராமசேவையாளர் ஒருவர், பெண் ஒருவர் உட்பட எட்டுப் பேரைக் கைது செய்து மிருகத்தனமான முறையில் சித்திரவதை செய்து பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி 80%மான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் கிராம மக்கள் தாங்களாக முன்வந்து செய்யும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை தடுப்பதன் மூலமும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோரை புலிகள் எனச் சாட்டுவதன் மூலமும் இராணுவம் உண்மையில் செய்ய நினைப்பதுதான் என்ன? இதில் வேதனையான விடயம் என்னவென்றால் பாலமீன்மடு கிராமத்தில் கைது செய்யப்பட்ட எட்டுப் பேரில் 60 வயதுடைய வயோதிபர் ஒருவரும் உள்ளடங்குகிறார். எல்லோரையும் விட இவர்தான் அதிகமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அத்தோடு கைது செய்யப்பட்டு நான்கு நாட்களுக்குப் பின்பே விடுதலை செய்யப்பட்டுள்ளார். உண்மையில் இவனரைக் கைது செய்த செயல் இவரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்துடனேயே திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. பணம் கொடுக்க மறுத்ததினால் பலமான முறையில் தாக்கப்பட்டுள்ளார். தமிழர்கள் கைது செய்யப்படுவதும் அவர்களிடம் பணம் பறிப்பதும் கொழும்பில் தான் என நினைத்தால் அது இங்கும் நடைபெறுகின்றது. இதை மக்கள் யாரிடம் போய் முறையிடுவது.

அத்தோடு கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படும்போது தாங்கள் எவ்விதத்திலும் துன்புறுத்தப் படவில்லை என வாக்குமூலம் அளிக்கப்பட்ட பின்பே விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்திலும், பொது மேடைகளிலும் சூழல் பாதுகாப்பு என அரசாங்கம் முழக்கமிடுவதெல்லாம் சிங்கள மக்களை மாத்திரம் கருத்திற் கொண்டு தானோ? அல்லது சூழலையும் அரசியலாக்கப் பார்க்கிறார்களோ?

# அகதி முகாம்கள் கலைப்பு! பின்னணியில் இந்து நிறுவனங்கள்?

(என்.எஸ்.குமரன்)

வருட இறுதிக்குள் கொழும்பில் உள்ள தமிழ் அகதி முகாம்கள் அனைத்தையும் மூடிவிடும் அரசின் திட்டம் எந்தவிதமான எதிர்ப்புமின்றி தொடரப் பட்டு வருகிறது.

கடந்த 22ம் திகதி சரஸ்வதி அகதி முகாமை கலைப்பதற்காக சமூக சேவைத் திணைக்களத்தினர் சகல ஆயத்தங்களுடன் சென்ற போதும் அகதிகளின் எதிர்ப்பின் காரணமாக டிசம்பர் மாதம் வரை முகாமை மூடுவது பின் போடப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்த முகாம்களில் இதுவே பெரிய அகதிமுகாமும் இறுதியான தமிழ் முகாமும் கூட. 168 குடும்பங்கள் (467 பேர்) உள்ள இம்முகாமை கலைப்பதை நிறுத்த முடியாததால் அகதிகள், மாணவர்களின் கல்வி பாதிக்கப் படாதிருப்பதற்காகவே டிசம்பர் வரை தவணை கோரியிருக்கின்றனர்.



இவர்களில் 55 இந்திய வம்சாவழிக் குடும்பங்கள் கொழும்பையும் அதனையண்டிய பகுதிகளிலிருந்தும் 83 இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு வட-கிழக்குப் பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்றவர்கள். மீண்டும் 90இல் யுத்தம் தொடங்கிய போது அங்கிருந்து மீளவும் அகதிகளாக கொழும்பை நோக்கி வந்தார்கள் ''தத்தங்களது இடத்தில் அகதிகளை மீளக்குடியமர்த்துவதாக கொண்டு செல்லும் அரசு ஏன் எங்கள் இடங்களில் எங்களை குடியமர்த்தாமல் மீண்டும் வட-கிழக்குக்கு கொண்டு செல்கிறது? யுத்தம் நடைபெறுகிற வட-கிழக்குக்கு நாங்கள் போகத் தயாரில்லை.எங்களுக்கு வேறெங்காவது இருக்க வசதிகள் செய்து தரட்டும்'' எனத் தொடர்ந்தும் அரசிடம் கோருகின்றனர்.

இதேபோல் ஒக்டோபர் 5ம் திகதி முகத்துவாரம் அகதிமுகாம் மூடப்பட்டு அங்கு இருந்தவர்களை மட்டக்களப்புக்கு பலாத்காரமாகக் கொண்டு செல்ல முயன்ற போது நியாயம் கோரி மட்டக்களப்புக்குப் போக மறுத்த இந்திய வம்சாவழிக் குடும்பங்கள் இருபத்தைந்தும் 5ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை முகாமுக்கு அண்மித்த தெருவோரத்தில் தங்கியிருந்தனர் எனினும் 15ம் திகதி அப்பிரதேசத்தவர்கள், அவர்களைத் தெருவோரத்திலிருந்தும் விரட்டி விட்டனர். தற்போது இவர்கள் தங்குமிடமுமில்லாமல், உணவு நிவாரணம் எதுவுமில்லாமல் பிச்சையேந்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வகதி முகாம்களைக் கலைப்பதில் இந்துமத நிறுவனங்கள் பின்னணியில் தொழிற்படுவது அறியப்படாத உண்மை. ஜூன் மாதம் 30ம் திகதி விவேகானந்தா சபை முகாமை கலைப் பதில் விவேகானந்தா சபையும், ஜூலை மாதம் பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் முகாமை மூடுவதில் கோயில் நிர்வாகமும், முகத்துவாரம் முகாமை மூடுவதில் இந்து பரிபாலன சபையும் பின்னணியில் தொழிற்பட்டிருந்தது. 'கோயிலின் புனிதத்துக்கு அகதிகள் பங்கம் விளைவிக்கிறது. எனவே முகாம்களை மூடி அகதிகளை வெளியேற்றி விடும்படியும்' கடித மூலம் அரசைக் கோரியதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை அரச பராமரிப்பின் கீழ் உள்ளதாகச் சொல்லப்படும் வாழைச் சேனைக்கு அருகிலுள்ள பேத்தாளை முகாமில் 385 குடும்பங்கள் உள்ளன. இது தவிர புனானை, மைலந்தனை, புல்லுமலை அகதிகளும் அங்கு கொண்டு அனுப்பப்பட்டுள்ளதால் இட நெருக்கடியையும், வசதியீனங்களையும் அவர்கள் எதிர்நோக்குகின்றனர். 118 குடும்பங்கள் இடவசதியற்ற நிலையில் மரத்தடிக்குக் கீழ் சமைப்பதும் உண்பதுமாக வாழ்க்கை நடாத்துகின்றனர். மீளக்குடியமர்த்தல் என்கிற பேரில் கொண்டு செல்லப்பட்ட இந்த மக்கள் அங்கும் மீளவும் அகதிகளாகவே வாழ்க்கை ஓட்ட வேண்டிய நிலை.

அரசு அகதிகளை மீளக்குடியமர்த்தி விட்டதால் அறிக்கை விடவும், அதை ஆமென்று தலையாட்ட சிலரும், அம்மக்களை வெளியேற்ற தூண்டிய இந்து மகா நிறுவனங்களும் உள்ளவரை அவர்கள் அகதிகளாகவே அலைவதைத் தவிர வழியேது?

# மலையகத்திலும் காணி பறிப்பு;

## தலவாக்கலை, கலிடோனியா பிரதேசங்கள் அணைக்கட்டுக்காக அரசால் அபகரிப்பு?

சி. மணிசேகரன்

மலையகம் இன்று அனைவரதும் கவனத்துக்குரிய பிரதேசமாக மாறியுள்ளது. தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள், சமூகசேவை திறுவனங்கள் மட்டுமல்ல, பேரினவாதிகளின் கவனமும் தான்.

வெற்றுக் கோசங்களும், வீர பிரதாபங்களும் பேசப்படுகின்றன. இவைகள் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகின்றது என்பது கேள்விக்குறி. ஏனெனில் இவர்கள் நின்று கூப்பாடு போடும் மலையகம் பறிபோய்க் கொண்டிருப்பதனை இவர்களும் சரி, மலையகத் தலைமைகள் என்று கூறிக் கொள்பவர்களும் சரி, உணர்வதாக இல்லை. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பதனை மறந்து விட்டார்கள்.

இன்றைய இனப் பிரச்சினை கூர்மையடைவதற்குத் திட்டமிட்டு அமைக்கப் பட்ட குடியேற்றங்களும் ஒரு பிரதான காரணம். அது வடக்கு கிழக்கில் மட்டுமன்றி மலையகத்திலும் தொடர்கின்றது. சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் எவ்வளவோ தரிசுநிலங்கள் வெறுமனே கிடக்க தமிழ் மக்கள் செறிவாக வாழும் தமிழ் மக்களின் பிரதேகங்களில் மட்டும் திட்டமிட் குடியேற்றங்கள் தொடர்கின்றன. மொனராகலை போன்ற மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வெறுமனே கிடக்க, நுவரெலியா மாவட்டத்தில் காணிப் பங்கீட்டைத் தொடர்கிறது அரசு.

இலங்கையில் மாறிமாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் காலத்திற்குக் காலம் இதனை முனைப்புடனே மேற் கொண்டு வந்தனர்; வருகின்றனர். ஆனால் இருவரின் அணுகுமுறைகளும் வித்தியாசமானது. எனினும் நோக்கம் ஒன்றே! நட்சா, சுவர்ணபூமி போன்ற திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்று விட்டன. அடுத்து துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் மேற் கொள்ளப்பட்டது. தொடரும் அதன் நடவடிக்கையாக தண்ணி மறிப்பு எனும் பெயரில் காணி பறிப்பு!

தலவாக்கலையிலும் கலிடோனியாவிலும்(திஸ்பனை) தண்ணீர் மறித்து நீர்த்தேக்கம் கட்டப் போவதாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் எதிரொலியாக சில அசம்பாவிதங்கள் கூட இடம்பெற்றன பின்னர் கைவிடப்பட்டு விட்டது போல மறைந்து விட்ட 'அணைக்கட்டு' எனும் பூதம் மீண்டும் தலை காட்ட ஆரம்பித்து சில சலசலப்புகளை இப் பகுதியில் ஏற்படுத்தியுள்ளது.

இதன் உண்மையான பின்னணி என்வெனில் தமிழர்களின் செறிவைக் குறைத்து அவர்களைப் பலவீனப்படுத்துவது என்பதே. இதற்குக் காரணம் என்னவென்றால் 1986ம் ஆண்டு மலையகத்தில் காடையர்களினால் கலவரங்கள் தலை தூக்கிய போது தலவாக்கலையும், மராயாவுமே பதிலடி கொடுத்த பிரதான பிரதேசங்களாகும். தலவாக்கலை, கலிடோனியா என்ற இரு பிரதேசங்களும் நீரில் மூழ்கப் போகின்றன. எனவே திட்டமிட்ட வண்ணம் ஒரு கல்லில் இரு மாங்காய்கள் வீழ்த்தப்படப் போகின்றன. இது நிறைவேற்றப்பட்டால் இதன் எதிரொலி எவ்வாறு இருக்குமென ஊகிக்க இயலாது.

இவ்வாறான காணிபறிப்பு மலையகத்தின் பலவிடங்களிலும் தொடருகின்றன. இது மலையகம் எனும் பிரதேசம் மாயமாய் மறைந்த பின்பே நிற்கும் போலுள்ளது. இது மலையக மக்களுக்கு மட்டுமல்ல பாரிய இழப்பு. மலையகத்தை மேடையாக எண்ணி கோசம் போடுபவர்களுக்கு நாளை மேடையில்லாமல் போகலாம், மலையகத்தை வியாபாரம் பண்ணி இலாபமீட்டுபவர்களுக்கு வியாபார தலம் இல்லாமல் போகலாம், பாரிய தொழிலாளர் கூட்டங்களின் சந்தாப்பணத்தை நம்பியிருக்கும் தொழிற்சங்கங்களுக்கு சந்தாப்பணம் இல்லாமல் போய்விடும்.

எனவே இவர்கள் தங்களின் சுயலாபங்களையாவது கவனத்தில் கொண்டு காரியமாற்றினால் அனைவருக்கும் நலமாக இருக்கும். ஏனெனில் இன்று மலையக மக்கள் எல்லாப் பக்கமும் உருளும் பகடைக்காய்களாகவே உள்ளார்கள். சரியான தலைமைத்துவம் இன்மையால் யாரும் தலைமை தாங்கலாம் எனும் போக்கும் காணப்படுகின்றது. இது மலையகத்தின் ஏமாளித் தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது. இவை எவ்வளவு காலத்திற்கு தொடரும். உருளும் மலையகம் ஒருநாள் உருக்கொள்ளும். அந்நாள் எந்நாளோ?

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு-03
தொலைபேசி:574047

## அக்கினிக் குஞ்சும்

# அழியப்போகிற காடும்

'பயங்கர வாதம்' என்ற பூச்சாண்டி இன்று எல்லோருக்கும் வசதியான ஒன்றாகப் போய்விட்டது.

'வடக்கு கிழக்கில் இருப்பது பயங்கரவாதம்' என்கிறார் ஜனாதிபதி.

பயங்கரவாதத்தை அரசியல்ரீதியாகத் தீர்க்க முடியாது; அதை ஆயுதமேந்திய யுத்தத்தால் மட்டுமே செய்ய முடியும் என்பது அவரது முடிந்த முடிவு.

கொழும்பு ஆங்கில/சிங்களப் பத்திரிகைகளும் இதை வழிமொழிந்து எழுதித் தள்ளுகின்றன.

பயங்கரவாதத்தை வெறும் மனநோயாளர்களின் அல்லது யுத்த வெறிபிடித்த, மனிதக் கொலையில் இன்பங் காணுகின்ற மனித உணர்வு பிறழ்ந்தவர்களின் செயல் என்பது போலத் திரும்பத் திரும்ப கூறி வருகின்றது அரசு.

புலிகளின், சிங்கள மக்கள் செறிந்து வாழும் கிராமங்கள் மீதான தாக்குதல், முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல்கள், பௌத்த மதகுருமார்கள் மீதான தாக்குதல்கள் என்பனவற்றை இந்தக் கருத்துக்கான உதாரணங்களாகக் காட்டி இவை 'நிர்வாண பயங்கரவாதம்' என்கிறது கொழும்புப் பத்திரிகை ஒன்று.

பயங்கரவாதம் என்பது புலிகளின் வடிவில் நாட்டை விழுங்கிக் கொண்டிருக்கின்றது என்ற படம் அவர்களால் சிங்கள மக்கள் மத்தியில் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது.

அடிப்படையான, யுத்தத்துக்கேற்ற விதிமுறைகள் அல்லது விழுமியங்களை தூக்கிவீசிவிட்டு மனிதப்படுகொலையில் புலிகள் ஈடுபடுகின்றார்கள் என்பது இந்தப் படத்தின் சாராம்சம்.

இவை எல்லாம் உண்மையின் கூறுகளைக் கொண்டிருக்கின்றன என்ற போதும், இவை சுட்டிக் காட்டுவது நிலவும் பிரச்சினையின் ஒரு பக்கத்தையே.

யானையைச் சுளகு என்றும், உலக்கை என்றும், உரல் என்றும் கண்ட குருடர்களைப் போல, ஒரு பக்கத்துப் பார்வைகளே.

இந்தப் பிரச்சினைக்கு இவர்கள் பார்க்க விரும்பாத, பார்க்க மறுக்கிற இன்னும் சில பரிமாணங்களும் இருக்கின்றன.

'வன்முறை' என்பது உலக அரசியல் வரலாற்றில் தொடக்கமுதலேயே இருந்து வரும் ஒன்றுதான் என்பதையோ ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் என இன ரீதியாகவோ மத ரீதியாகவோ, பால் ரீதியாகவோ, வர்க்க ரீதியாகவோ பிளவு பட்டிருக்கும் மக்களிடையே, ஒடுக்குமுறை 'வன்முறை' மூலமாகவே சாதிக்கப்பட்டு வருகிறது என்பதையோ சொல்லித்தான் புரியவேண்டும் என்பதில்லை

அரசு தன்னைக் காத்துக் கொள்ள ஆயுதம் ஏந்திய படைகளை வைத்திருக்கிறது. 'பரந்துபட்ட மக்களின் ஆட்சி' என்று வர்ணிக்கப்படும் இன்றைய ஜனநாயக ஆட்சியில், ஆயுதம் ஏந்தித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாத அரசு உலகில் எங்கும் இல்லை.

ஆக, வன்முறை ஒன்றும் புதியது அல்ல.

இந்த வன்முறையை சட்டரீதியாக அங்கீகரிக்கும் விதத்தில் சட்டங்கள் எழுதப்பட்டுள்ளதால், அது சரியானது என வர்ணிக்கப்படுகிறது.

அரசு நடாத்தும் தாக்குதல்கள், குண்டு போடுதல்கள், கொலைகள் என்பன மக்களின் பேரால், நீதியின் பேரால் செய்யப்படுவதாக கூறப்படுகின்றது.

அரசின் போக்கை எதிர்ப்பவர்கள் ஆயுதம் தூக்கும் போது அவர்கள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்படுகின்றனர்.

லெபனானில் அகதி முகாம்களை தகர்த்து. அங்கிருந்த மக்களை கொன்றொழித்த இஸ்ரேல், அந்த மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய பலஸ்தீன விடுதலை இயக்கத்தை கடந்த செப்டம்பர் மாதம் 13ம் திகதி வரை பயங்கரவாத இயக்கம் என்றே கூறிவந்தது.

லத்தீன் அமெரிக்காவில் பல்லாயிரக்கணக்கில் மக்களைக் கொல்கின்ற யுத்தங்களை திட்டமிட்டு மறைமுகமாக நடாத்திய/நடத்தும் அமெரிக்கா, கிரனடா போன்ற சின்னஞ்சிறிய நாடுகளை விழுங்கி ஏப்பம் விட்ட அமெரிக்கா, ஈராக்கிய சதாம் ஹுசைனைப் பயங்கரவாதி என்று கூறுகின்றது.

யாருக்கு யார் பயங்கரவாதி என்பது அவரவர் விருப்பைப் பொறுத்த விடயம் என்பதை உலக அரசியலைக் கவனிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

1983 ஜுலைப் படுகொலைகள், குமுதினிப்படகுக் கொலைகள், கிளாலிக் கொலைகள், கிழக்கில் கொக்கட்டிச் சோலை, மைலந்தனைப் படுகொலைகள் போன்றவற்றை அரசு சார்ந்த படைகள் செய்யும் போது அவற்றைப் பயங்கரவாதம் என்று இலங்கை அரசு சொல்வதில்லை.

அக் கொலைகள் யுத்தத்தின் எல்லைமீறல்கள்/தவறுகள் என்று முகபாவாடைக்குள் மறைக்கப்பட்டு விடுகின்றன.

'எதிரி செய்வதெல்லாம் பயங்கரவாதம்' என்ற பதமே இன்றைய யதார்த்த நிலையாக உள்ளது.

அவன் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதனால் எதிரியாகி விடுவதில்லை; ஆனால் எதிரி ஒருவன் பயங்கரவாதியாகி விடுகிறான்!

தனது சொந்த குர்திஸ் மக்களைக் கொன்றொழித்த சதாம் ஹுசைன் அமெரிக்காவின் கண்ணில் ஒரு போதும் பயங்கரவாதியாக இருக்கவில்லை, அவர் குவைத்தை ஆக்கிரமிக்கும் வரை.

1990 ஜுன் வரை கடந்த 14 மாதகால பேச்சுவார்த்தைகளின் போது அன்றைய பிரதமரான டி.பியாருக்கு பிரபாகரன் பயங்கரவாதியாகத் தெரியவில்லை.

ஆக, பயங்கரவாதம் தொடர்பாக காட்டுக் கூச்சல் போடும் இவர்கள் யாரும் பயங்கரவாதத்தின் எதிரிகள் அல்ல.

சொல்லப் போனால் அது இவர்களுக்கு அவசியமானதும் கூட.

உண்மையில், பயங்கரவாதம் அல்ல இவர்களது பிரச்சினை.

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை; அரசியல்.

பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதல் என்ற பெயரால் இவர்கள் எதிர்ப்பது அதைத்தான்.

உண்மையான பயங்கரவாதத்திற்கெதிரான ஒரு அரசியல்வாதி பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க அதன் வேரைக் காண முயல்வான்.

ஆனால், இவர்கள்.....

வேருக்குத் தண்ணீர் ஊற்றியபடி, மரத்தைப் பற்றி வாய் கிழியக் கத்துகின்றார்கள்.

ஆனால், உண்மையை நீண்டநாள் பொத்தி வைத்திருக்க முடியாது.

அக்கினிக் குஞ்சைப் பொந்துக்குள் ஒளித்தால் அழியப்போவது அக்கினிக் குஞ்சு அல்ல; காடு!

---

# "சொன்னதைச் செய்
# செய்வதைச் சொல்
# தோல்வி கிடையாது...."

## நாசமறுப்பான்

'ஜனநாயக வழிக்கு'த் திரும்பிய 'நம்மவர்களுக்கு' இப்போது 'ஒரு புதுப் பிரச்சினை' ஏற்பட்டிருக்கிறது.

புலிகளையே தமது நடவடிக்கைகளுக்குக் காரணமாகக் காட்டிக் கொண்டு 'வடக்கு-கிழக்குக்கு' வெளியே அஞ்ஞாதவாச அரசியலில் ஈடுபடுவது நீண்ட நாட்களுக்குத் தாக்குப்பிடிக்குமா என்பதே அவர்களுக்கு ஏற்பட்டுள்ள புதுப் பிரச்சினை.

புலிகள் இப்படியே இருக்கும் வரை தமது நிலையை நியாயப்படுத்திக் கொள்ளலாம் என்ற அவர்களது கணக்கு நெருக்கடிக்குள்ளாகியது ஒன்றும் புலிகள் திடீரென்று புல்லைத் தின்ன ஆரம்பித்ததால் அல்ல.

மாறாக, புலிகளை விட்டு விடுங்கள், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்ற கேள்வி இப்போதெல்லாம் நேரடியாகவே அவர்களை நோக்கிக் கேட்கப்படத் தொடங்கி விட்டது என்பதாலேயே.

அரசாங்கத்துடன் 'தனது வழியில்' போரிட்டுக் கொண்டிருக்கும் புலிகளை ஏற்றுக் கொள்ளாத, ஆனால் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு முடிவு என்ன என்று அங்கலாய்க்கிறவர்களிடமிருந்து இந்தக் கேள்வி எழுகிறது.

அவர்கள் யுத்தம், இறுதிப் போர், தாகம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு நிற்கிறார்கள். நீங்களோ ஜனநாயகம், அரசியல் தீர்வு என்று சொல்கிறீர்கள். அவர்கள் கிளாலிக்கு அப்பால் அதிகாரம் செய்கிறார்கள். நீங்களோ அரசாங்கத்தின் 'கோட்டே' வாசல்படியில் அரசியல் நடாத்துகிறீர்கள். அவர்களுக்குத் தெரிந்த மொழி துப்பாக்கி; இரத்தம்; போர்; தாகம் இத்தியாதி. நீங்களோ நாம் கேட்டுப் பழகிப் போன அரசியல் ஜனநாயகம் என்று பேசுகிறீர்கள்..... ஆக உங்களது பதில் தான் என்ன? நீங்கள் எதைத்தான் சொல்லுகிறீர்கள்.

கேள்விகள் இந்தப் பத்தியில் எதிரொலித்ததை எமது வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இப்போது 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்' புதிய கண்ணோட்டம் இதழ் நேரடியாக இல்லாவிட்டாலும் இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'மூன்றாவது திறவுகோல்காரர்களுக்கும் அந்தச் சாவிக்கொத்திலுள்ள ஏனைய திறப்புகளுக்கும்' என்று தலைப்பிட்டு தி.வே. வினாயகமூர்த்தி என்பார் அண்மையில் வெளிவந்த நவம்பர் (இரண்டாவது?) இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அக் கட்டுரையில் அவர் சில கேள்விகளை எழுப்புகின்றார். கேள்விகளை எழுப்பும் தோரணையில் அல்லாமல், நாசுக்காக கிண்டலடிக்கும் தோரணையில் அக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அவர் கிண்டலடிப்பது 'நாம் செய்வது சரியானது. நீங்கள் சும்மா அலட்டுகிறீர்கள்' என்று தமதுபக்கத்தை நியாயப்படுத்துவதற்காக செய்யப்பட்டிருக்கிறதாகவே எண்ணத் தோன்றுகிறது.

எப்படியோ, அவரது கேள்விகளுக்கு அவரே சொல்வது போல 'கோபித்துக் கொண்டு மறுப்பெழுதக் குந்தி விடா விட்டாலும்' எனது பக்கக்கருத்துகளை சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆயுதப் போராட்ட வழிமுறையிலும் சரி, ஜனநாயக வழியிலும் சரி இதுவரைகாலமாகப் போராட்டங்களை நடாத்தி வந்த இயக்கங்கள்/கட்சிகள் இன்று வரை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கும் வகையில் அவற்றை நடாத்தவில்லை என்பதே நாம் சுட்டிக்காட்டிய விடயம். விநாயகமூர்த்தி அவர்களுக்கு இந்த விடயம் ஒரு பிரச்சினையாக இல்லை. அது வெறும் 'நாசமறுப்பானின்' கற்பனை என்று அவர் கருதுகிறார் போலும். இப் பத்தியில் எழுதப்பட்ட விடயங்களில் சுட்டிக் காட்டப்பட்ட உண்மைகளை விட 'நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்களே சொல்லுங்கள் பார்க்கலாம்' என்று கெட்டிக்காரத்தனமாக மடக்கி விடுவதிலேயே அவரது கவ்னம் பெரிதும் செல்கிறது.

இன்றைக்கு நாம் செய்ய வேண்டியது; 'சாத்தியமாகக் கூடிய செயல்திட்டம் என்ன, நிறைவேறக் கூடிய தீர்வொன்று உருவாக என்ன செய்ய வேண்டும்' (அழுத்தம் எனது) என்று அறிந்து செயற்படலே எனக்கருதும் அவர், அதற்கு எமது தீர்வு என்ன என்று கேட்டுவைக்கிறார். (மாட்டுப்பட்டாய் போ என்ற எக்காளம்!)

தமிழ்க் கட்சிகளிடம் உள்ள குறைபாட்டின் அடிப்படையே மேலே தடித்த எழுத்தில் காட்டிய 'கூடிய' என்ற நிலைப்பாடுதான். இது பத்தியில் தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. எது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்று தாம் கருதுகிறார்களோ அந்த முடிவுக்காகப் போராடுவதுதான் 'விடுதலை இயக்கங்களின்' பணி என்பது எல்லா 'ஈழமக்களையும் போல எனதும்' அபிப்பிராயம். விநாயகமூர்த்தி அவர்கள் அப்படி நினைக்கவில்லை போலும். அவர் நினைக்கிறார், 'எது கிடைக்குமோ அதைப் பெற முயல வேண்டும்' என்று. ஒரு தரகனின் கண்ணோட்டத்தில் அரசியல் நடாத்துவது தான் சரி என்று அவர் கருதும் போது நான் எதைத்தான் சொல்ல முடியும்!

> **சரியான தீர்வு இதுதான் என்று தெரிந்தால் ஒரு பத்திரிகையாளனே அரசியல் கட்சியை அமைத்து விடுவான்; சரியான தீர்வைக் கண்டுபிடிப்பது அரசியல் வாதிகளின் வேலை. அது சரியாக இருப்பதற்காக அதிலே தென்படுகின்ற தவறுகளை சுட்டிக் காட்டுவது பத்திரிகையாளனின் கடமை. இதன் மூலம் ஒரு சரியான கட்சி முழுமையான முடிவை எடுக்க முடிகிறது.**

ஒரு விடயத்தை இந்த இடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும். நான் ஒன்றும் அரசியல்வாதியோ ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினரோ அல்ல. தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கின்ற சாதாரண பத்திரிகையாளன். பத்திரிகையாளர்களிடம் ஒரு அரசியல் கட்சியிடம் கேட்பது போல 'உனது தீர்வு என்ன' என்று கேட்பது எவ்வகையிலும் நியாயமானது அல்ல என்பதை விநாயக மூர்த்தி அவர்கள் அறியமாட்டாரோ என்னவோ?

பத்திரிகையாளர்கள் மக்களின் சார்பாக கருத்துச் சொல்பவர்கள். அவர்களுக்கு உள்ள பொறுப்புணர்வும் அக்கறையும் மக்களது நலன்கள் சம்பந்தப்பட்டவை. ஆயினும் கூட ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட முடியும்.

முதலில் இந்தத் தமிழ்க் கட்சிகள் தாம் என்ன தீர்வை முன்வைக்கிறோம் என்று சொல்லவேண்டும்; பிறகு அதை வென்றெடுக்கப் போராடியாக வேண்டும். எந்தத் தீர்வையும் முன்வைக்காமல் போராட முடியாது என்பது எனது அபிப்பிராயம். அதைத்தான் நான் எழுதினேன்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தான் அங்கீகரித்த 'மாகாண சபை'யையாவது திரும்ப நடைமுறைக்குக் கொண்டு வர பாராளுமன்றத்தில் பேசியதை விட உருப்படியாக எதையும் செய்யவில்லை என்பதே எனது குற்றச்சாட்டாக இருந்தது.

சரியான தீர்வு இதுதான் என்று தெரிந்தால் ஒரு பத்திரிகையாளனே அரசியல் கட்சியை அமைத்து விடுவான்; சரியான தீர்வைக் கண்டுபிடிப்பது அரசியல்வாதிகளின் வேலை. அது சரியாக இருப்பதற்காக அதிலே தென்படுகின்ற தவறுகளை சுட்டிக் காட்டுவது பத்திரிகையாளனின் கடமை. இதன் மூலம் ஒரு சரியான கட்சி முழுமையான முடிவை எடுக்க முடிகிறது.

> **"எல்லாமே முன்பு சொல்லப்பட்ட விடயங்கள் தான். ஆனால் யாரும் அதை கேட்காததனால் மீண்டும் பின்னாலே சென்று முதலில் இருந்து அதைச் சொல்லவேண்டி இருக்கிறது".**

எனது பணிவான அபிப்பிராயம் இது தான். ஆனால், விமர்சனங்கள் என்றாலே 'பேசுகிறவன், எழுதுகிறவன் எல்லோரையும் தூக்கி பங்கருக்குள் போடு எனும் தமிழ் ஆயுத அதிகாரத்துக்கு வழி வெட்டிக் கொடுப்பதாய்த்தான் அர்த்தப்படும்' என்று கருதும் வினாயக மூர்த்திக்கு இது எங்கே புரியப் போகிறது? 'திம்புவில் நீங்களும் சேர்ந்து முன்வைத்த நான்கு கோரிக்கைகளை அங்கீகரிக்கும்படி அரசுடன் போராடுங்கள்! என்று இப்போதைக்கு மனதில்படுவதை சொல்லி வைக்கலாம்.

அந்தப் போராட்டத்துடன் கைகோர்த்து நிற்கத் தயாராகப் பலர் இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாதவரை வேறெந்த 'பேச்சுவார்த்தை முயற்சியிலும்' அர்த்தமில்லை என்பது ஏற்கனவே சொல்லியாய் விட்டது. ஒரு தடவை இரண்டு தடவை அல்ல! பல தடவைகள்.

இது விநாயக மூர்த்தி அவர்களுக்கு சிலவேளை கிழவிகளின் புறுபுறப்பாக இருக்கலாம். அதற்குப் பதிலாக அதே இதழில் வேறொரு இடத்தில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் ஆந்திரே ழீட்டின் மேற்கோளை திரு. விநாயக மூர்த்தி அவர்களுக்கு சமர்ப்பிக்கலாம் என நினைக்கிறேன்.

"எல்லாமே முன்பு சொல்லப்பட்ட விடயங்கள்தான். ஆனால் யாரும் அதை கேட்காததனால் மீண்டும் பின்னாலே சென்று முதலில் இருந்து அதைச் சொல்லவேண்டி இருக்கிறது".

தமிழ்க் கட்சிகளுக்கு இன்று வந்துள்ள அரசியல் நெருக்கடியில் இருந்து 'தப்பிக் கொள்ள' சிறந்த வழி 'திறவுகோலாளர்களை மடக்குவதல்ல' கடையை மூடி ஒரு பெரிய பூட்டாகத் தொங்க விடுவதுதான்.

அப்படி இல்லை என்றால், சொல்வதற்காகப் போராட்டத்தில் இறங்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணம் இன்று - 12

இலங்கையின் தலையாக இருப்பது யாழ்ப்பாணம். தலைக்குள் தான் மூளை இருக்கிறது. அதனால் இலங்கையின் மூளை யாழ்ப்பாணம் என்கிறார்கள். இது யாழ்ப்பாணத்து மக்கள் தற்பெருமையடித்துக் கொள்கிற விடயம் தான். அவர்கள் அதற்கு நிறைய உதாரணமும் எடுத்துக் காட்டுவார்கள்

ஆனாலும் யாழ்ப்பாணத்து மக்கள் கல்வியை முதன்மைப்படுத்தினார்கள்.

யாழ்ப்பாணம் ஒரு வரண்ட பிரதேசமாக இருப்பதனால் அங்கு வேலை செய்ய முடியாது. இது மிக முக்கிய காரணம் கல்வி அபிவிருத்திக்கு எனும் கருத்து சமூக வியலாளர்களிடம் காணப்படுகிறது. ஆகவே யாழ்ப்பாணத்து மக்கள் கல்வியிலேயே முதலிடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு இது மிக முக்கியகாரணம்.


படிக்காத பிள்ளையை பெற்றோர் வெருட்டுவர்: ''உனக்கு நாலைந்து மாட்டை வாங்கித் தாறன். மேய்ச்சுக் கொண்டு திரி''

படித்தால் தான் உத்தியோகம் பார்க்கலாம். அல்லது ஆடு மாடுதான் மேய்க்க வேண்டும். வேறுதொழில் இல்லை. இவ்வாறு தான் பிள்ளைகளை அஞ்ச வைத்தார்கள்.

பாடசாலையும், கல்வியும் தான் யாழ்ப்பாணத்தின் உலகம். பாடசாலை தான் மாணவரின் ஆளுமையை வளர்த்தது; தீர்மானித்தது.

யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற கவிஞர் (மஹாகவி) சொல்கிறார்: பின்வரும் வரிகளைப் பாருங்கள்.

## வாணி.. உன்வீடும் வளவும் நானறிவேன்



''வாணி, உன் வீடும் வளவும் நான் அறிவேன் - அக்காணி முழுவதும் கலகலப்பு அல்லவோ''

இந்த யாழ்ப்பாணத்திற்கு இப்பொழுது என்ன நடந்தது?

பழைய, பல்கலைக்கழகப் பதிவேடுகளைப் புரட்டிப் பாருங்கள். யாழ்ப்பாணத்து மாணவர் முதனிலையில் நிற்பது புரியும்.

பல்வேறு அரச சார்பான, சார்பற்ற நிறுவனங்களில் யாழ்ப்பாண மாணவரே ஆட்சி செலுத்தினார்கள். அவர்களே நிறுவனத்தை இயக்கினார்கள்.

இந்த யாழ்ப்பாணம் இப்பொழுது கல்வியை இரண்டாம் மூன்றாம் நிலைக்குத்தள்ளி விட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டுப் பாடசாலைகள் முதல் தரத்தில் இருந்தன. (இப்போது தேசிய பாடசாலை, மூலாதரப்பாடசாலை எனவகைப்பாடுகள் வேறு.) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி, ஆகியன அவை. ஆனால் கொழும்பு மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளே அவ்வாறிருந்தன.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது என்ன நடக்கிறது?

கல்வி முக்கியத்துவப்படவில்லை.

சிறீலங்கா அரசு பாடசாலைகளை அழித்தது. பல பாடசாலைக் கட்டிடங்களை இராணுவத்தளமாக்கியது.

பல மாணவர்களும் ஆசிரியர்களும் அகதிகளானார்கள்.

அகதி முகாம்களில் விளக்குக் கொளுத்தவே மண்ணெண்ணெய் இல்லை. இருந்து படிக்கவா இடம் கிடைக்கும்? இடம் கிடைத்தாலும், அந்தச் சனத்துக்குள்ளும் சஞ்சாரத்துக்குள்ளும் எவ்வாறு படிக்க இயலும்?

கொப்பிகள் இல்லை. புத்தகங்கள் இல்லை. பாடசாலை இல்லை.

அகதிகளான மாணவர்களுக்கும் இரவினில் படிக்க வெளிச்சம் இல்லை.

தமிழ்ச் சினிமாக்களில் வருவது போல தெருவிளக்கில் படிக்கலாம். தெரு விளக்கும் இல்லை. ஊரே இருட்டு.

சந்தைகள் போல ரியூட்டறிகள் நிறைந்து வழிகின்றன தான். அங்கு படிக்கிறார்கள் தான். ஆனால், மாணவர் படித்ததை மீட்பதற்கு ஒரு நேரம் கிடைப்பதில்லை. கிடைக்கும் நேரம் இருளானவை.

படித்தென்ன? என்று யோசிக்கிறார்கள்.

அச்ச மூட்டுகின்ற சத்தங்கள் அடிக்கடி கேட்கின்றன. பொம்பர் வருகிறது; தலை கீழாகக் குத்திப் பறக்கிறது. ஹெலியின் சடசடப்பு அடிக்கடி கேட்கிறது. ஷெல் விண்ணைக் கூவியபடி விரைகிறது. மிக அயலில் குண்டுகள் வெடிக்கின்றன. துப்பாக்கியும் ஓய்வில்லாது குண்டுகளைப் பொழிகின்றது. பெரும் இரைச்சலோடு 'அவ்ரோ' வருகிறது. இப்போது சுப்பர் சொனிக்.

திடுக்கிட வைக்கிற இந்த ஒலிகளுக்கு மத்தியில் எதனைப்படிப்பது; எவ்வாறு படிப்பது?

ஒரே கட்டிடத்தில் காலையும் மாலையும் என இரு பாடசாலைகள் இயங்குகின்றன. உதாரணமாக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முதலில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரியில் மாலை வகுப்புகளை நடத்தியது. அளவெட்டியும் இராணுவ வசம் என்றான பிறகு இணுவில் சைவ மகாஜனா மகாவித்தியாலயத்தில் இயங்குகின்றது.

அளவெட்டியில் இருந்த மாணவர்கள் இப்போது உரும்பிராயிலும், வட்டுக்கோட்டையிலும் என அகதிகளாக அலைகிறார்கள்.

அவர்கள் தமது பாடசாலையான மகாஜனாக் கல்லூரிக்குச் செல்வதற்கு வட்டுக்கோட்டையிலிருந்து மதியம் ஒரு மணிக்கு இணுவிலிற்குச் சைக்கிள் மிதிக்க வேண்டும்.

சைக்கிள் ஓடத்தெரியாதவர்கள் எல்லோரும் இப்போது வேகம் கொண்டு சைக்கிள் மிதிக்கிறார்கள்.

சின்னப் பாடசாலையில் பெரிய கல்லூரி இயங்குகின்றது.

படித்தென்ன? என்று அவர்கள் கேட்பதற்கு இன்னொரு முக்கிய காரணம் பரீட்சைகள் ஒழுங்காக நடப்பதில்லை.

90 ஓகஸ்ட்டில் நடைபெற வேண்டிய உயர்தரப் பரீட்சை 91 ஏப்பிரலில் நடைபெற்றது. 91 ஓகஸ்டில் நடைபெற வேண்டிய பரீட்சை 92 ஏப்பிரலில் நடைபெற்றது. எண்ணிப்பாருங்கள் எட்டு மாத இடைவெளி, படித்ததை மறந்து போக இவ்வளவு மாதங்களும் போதும். படித்து என்ன பிரயோசனம் என்று விரக்திப்பட இவ்வளவு மாதங்களும் அதிகம். படித்தது அலுப்புத்தட்ட இவ்வளவு மாதங்களும் மிச்சம்.

நாங்கள் படித்த காலங்களை ஞாபகம் கொள்கிறேன்.

பாடசாலை, ரியூசன், படிப்பு எனப்பகல் கழியும். மதியம் குட்டித் தூக்கம். இரவு இரண்டு மணி வரை பிறகு படிப்பு படுக்கை.

ஆறு மணித்தியாலமாவது வீட்டுப் படிப்பிற்கு நேரம் ஒதுக்க முடிந்தது.

சாமத்தில் தேநீர் வைத்துத்தர அம்மாவும், விடியலில் எழுப்பி விட அப்பாவும் இருந்தனர். ''நீயாவது படிச்சு முன்னுக்கு வந்தால் தான் நாங்கள், உருப்படுவம்'' என்று மந்திரம் ஓத அக்கா இருந்தாள்.

இரவில் படிக்கிற போது ஷெல் விண்ணில் கடவாது. ஏப்பிரல் 10ம் திகதி பரீட்சைக்கு நம்பிப் போகலாம்.

சுற்றமும் சூழலும் படிப்பதற்கு வேண்டிய உற்சாகம் தந்தனர்.

படிப்பு என்பது நித்திய பூஜை. பரீட்சை என்பது யாகம், வேள்வி.

இப்போது அவ்வாறு அல்ல.

படித்தென்ன பிரயோசனம்? என சிறீலங்கா அரசு மாணவர்களை யோசிக்க வைக்கிறது.

புலிகள் அக்கறை காட்டுகிறார்களில்லை. படிப்பு முக்கியமில்லை என்பது அவர்கள் கருத்து. முதலில் சுதந்திரம். பிறகு படிக்கலாம் என்கின்றனர். இராணுவப் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துதல் இலாபம் என்பது அவர்கள் கணக்கு.

மாணவர்கள் தீர்மானிக்க வேண்டிய தருணம்.

சூழவர இராணுவம் இருந்து நிலத்தைப் பறித்துக் கொள்ள முனைகிற போது படிப்பெதற்கு என்று யோசிக்கிற மாணவர்கள் புலிகளிடம் இராணுவப் பயிற்சிக்குப் போகிறார்கள்.

மற்றவர்கள் படிக்க முனைகிறார்கள்.

இதுதான் யாழ்ப்பாணத்துக் கல்வியின் இன்றைய நிலை. நினைக்க வேதனை தருகிற நிலை.

வேதனை தருகிற விடயங்கள் நிறைய உண்டு.

வரும்

அருணா பரமேஸ்வரன்

# நாலு வார்த்தை எழுத விடு

சூரியா

## புது இரத்தம்

சென்ற மாதத்தின் இறுதி நாட்களில் சுதந்திர இலக்கிய விழா இளம் எழுத்தாளர்களுக்கான கவிதைப் போட்டியில் பங்கு கொண்ட அனைத்துக் கவிஞர்களின் கவிதைகளையும் பார்க்கிற சந்தர்ப்பம் கிட்டியது.

நூறு கவிதைகள் (சுமார்) இருக்கலாம். நூறு கவிதைகளிலும் தெரிந்தெடுத்தால், நாற்பது கவிதைகளாவது தொகுப்பாகப் பிரசுரிக்கக் கூடியளவுக்குத் தரமான கவிதைகள். இளம் எழுத்தாளர்களுக்கான போட்டியாகவே உணரமுடியவில்லை. அவர்கள் கவிதைகள் முதிர்வடைந்திருந்தன.

இளம் எழுத்தாளர்களின் கைகளில் கவிதைகள் வசமாகச் சிக்கிக் கொண்டுவிட்டன. கவிதை இனி வளம்பெறும்; பெறவேண்டும்.

குறிப்பாக எம்.எல்.எம். அன்ஸார், என்.ஆத்மா, எஸ்.எச்.என்.கதீர், நட்சத்திரன் செவ்விந்தியன் இவர்கள் கவிதைகளில் ஜாலம் புரிகிறார்கள். இவர்களது கவிதை மந்திரக்கோல். வாசித்து முடிக்கிற போது என்னமாதிரி உணர்வுகளைத் தட்டி எழுப்பி விடுகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில், ஈழத்துக் கவிதையின் பாதை தடம் மாறி விட்டது. வலுவான பாதையில் தன் பாதங்களைப் பதித்துச் செல்கிறது.

முன்னர் ஒரு கருத்து நிலவியது. ஈழத்துக் கவிதை புலம்பெயர்ந்து விட்டது. அவ்வாறு சொல்வதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

மஹாகவி, முருகையன், சண்முகம் சிவலிங்கம், நீலாவணன், நுஃமான் எனப் பல கவிஞர்கள் உலகளாவிய ரீதியில் தம் கவிதைக் கொடியை உயர்த்தினர். தமிழ்க் கவிதை என்றால் ஈழம்தான் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய கவிஞர்களாக வாழ்ந்தார்கள்.

பிறகும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை, சேரன், ஜெயபாலன், வில்வரத்தினம், ஊர்வசி, விஜயேந்திரன் எனக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய கவிஞர்கள் ஈழத்தில் எழுந்தனர். எண்பதுகளின் பொழுதுகளின் அவர்களின் பாடுபொருள்கள் மாறின. துப்பாக்கியும், சூடும், துயரமும், இழப்பும், குருதியும், அவலமும், போரும், வாழ்வும், மண்மீட்பும், மனித நேசிப்பும், இவையிடையேயான காதலும், நட்பும் எனப் பாடுபொருள்கள் பரந்த உலகைக் காட்டின.

ஒரு கவிஞர் கூறியது போல பலஸ்தீனத்தில் நடக்கக் கூடியது என நம்பியிருந்த அவலங்கள் ஈழத்திலும் நடந்தேறின. பலஸ்தீனத்தின் மஹ்முட் தர்வீஸ் போன்ற பல கவிஞர்கள் ஈழத்தின் இயல்பான போக்கில் எழுந்தனர். வெளிக்கிளம்பினர். தம் கவிதைத் திறத்தால், தம்மைக் கவிஞரெனப் பிரகடனப்படுத்தினர்.

குறிப்பிட்டுச் சொல்லாமெனில், 1986இன் பின்னர் (1986 டிசம்பர் மாதம் ஈ.பி.ஆர்.எல்.எப் புலிகளினால் அழிக்கப்பட்டது) ஈழத்துக் கவிதை புலம் பெயரத் தொடங்கிவிட்டது. ஜனநாயக மறுப்பு, அராஜகம், தான்தோன்றித்தனம் ஈழத்தில் நடைபெற்ற இத்தகைய நிகழ்ச்சிகள் கவிதையைப் புலம்பெயரச் செய்வதில் வெற்றி கண்டன. கவிஞர்கள் புலம் பெயர்ந்தார்கள்; கவிதையும் புலம்பெயர்ந்தது. ஈழத்துக் கவி உலகுக்கு அது நஷ்டம்தான். சேரன், ஜெயபாலன், விஜயேந்திரன் எனக் கவிஞர்கள் ஐரோப்பிய நாடுகளில். அவர்கள் கவிதையும் கவிப் பொருளும் அங்கு.

யாழ்ப்பாணத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். யாழ்ப்பாணத்தின் கவிதைகள் செத்து விட்டன. முருகையன், வில்வரத்தினம் போன்றோர் அங்கிருக்கின்றனர்தான். ஆனால் கவிதை செத்து விட்டது. அவர்கள் கவிதையில் அமைதியாகி விட்டார்கள்.

'இந்த மண் எங்களின் சொந்த மண் -இதன்
எல்லையை மீறி யார் வந்தவன்?'

என்று அர்த்தமற்று எதுகை மோனைக்காக சொற்களை அடுக்குகின்ற புதுவை இரத்தினதுரைதான் அங்கு ஆஸ்தான கவிஞர். அல்லது புலிகளைப் புகழ்ந்து பாட மட்டும் தெரிந்த நாக. சிவசிதம்பரமும் கவிஞர். வேறு பெயர்கள் யாழ்ப்பாண லிஸ்டில் வரமாட்டாது. புலிகளைப் புகழ்ந்து பாடத் தெரிந்திருக்க வேண்டும்.

இதுதான் ஈழத்துக் கவிதையின் இன்றைய நிலை என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால் அது பொய்யாயிற்று.

கிழக்கில் இருந்து முஸ்லீம் மண்ணிலிருந்து கவிதை வேர்கொண்டு ஒளி காட்டிப் புறப்பட்டது.

நம்பமுடியாத அளவுக்கு கவிதைச்சாரல் புது இரத்தத்துடனும் புத்தம்புது வடிவத்துடனும் தெறித்தது.

இது வெறும் புகழ் வார்த்தை அல்ல.

இத்தகைய புது இரத்தம் பாய்ச்சியவர் யாரென்று வினா எழுப்புகிற போது தவிர்க்க முடியாது வருகிற ஒருவர் சோலைக்கிளி.

பாரதியாரின்
'சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது'
எனத்தக்க கவிதை அங்கு உருவானது.

சோலைக்கிளிதான் இவ்வாறான கவிதையின் தொடக்கம் என நான் நினைக்கிறேன். சர்ரியலிசப் பண்பு வாய்ந்த கவிதைகள் இவருடையவை. இவரது கவிதைப்பொருளும், கவிதைத் தொனியும், அதன் தலைப்பும், இத்தகைய பண்பைக் கொண்டு விளங்குகின்றது.

சிந்தனையும், ஆழமும், படைப்பும், வீச்சும் ஒருங்கே இயைந்துவர, இவர் கவிதைகள், இரண்டு, மூன்று தரம் என வாசித்து மனநிறைவு கொள்ள வைக்கின்றன.

சோலைக்கிளியினது கவிதைகளின் பின்வரும் தலைப்புகளைக் கவனியுங்கள் 'கதிரையில் வந்தமர்ந்த பூமரம்'. 'மாடு சப்பிய சூரியன்' இத்தகைய தலைப்புகள் கூட, சோலைக்கிளியின் கவிதை பற்றிய தன் வடிவத்தை வெளிப்படுத்திவிடுகிறது. உண்மையில் இது தமிழுக்குப் புதுசு. காகம் கலைத்த கனவு எனும் அவரது கவிதைத் தொகுப்பிலும் அவரது புதிய வடிவத்தின் தரிசனத்தை நாம் காணலாம்.

எனது ஞாபகத்தில் இருக்கிற குறிப்புகளைக் கொண்டு (நானும் ஒரு பூனை என நினைக்கிறேன்) அவரது முதலாவது தொகுப்பிலேயே புது வடிவத்தைக் காண முடிந்தது.

'அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் உட்கலந்து வரும் படிமங்களுடன்' கூடிய கவிதைகளையே சோலைக்கிளி நெய்தார். ஒரு படிமக் கவிஞர் என்கின்ற பெயர் சோலைக்கிளிக்கும் பொருந்திப் போகிறது.

'சூரியனைச் சப்பிய மாடு/ வைக்கோலைத் தின்பதைப் போல அதன் கதிர்களை/ மாடு கடித்தது' என்பது சோலைக்கிளியின் வரி. 'பூமரம் வந்தமர்ந்தது கதிரையில்/ தன் குறையைச் சொன்னது' இதுவும் சோலைக்கிளியினது.

ஒரு புறத்தில் படிமம் நிறைந்து வழிகிறது போலத் தோற்றம் கொள்கிறது இவர் கவிதை.

தமிழுக்கு இது புதிய வடிவம் என்பதனைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.


வரும்

நன்றி - நூலகத்திட்டம்



# இயக்கவழி - 1

1987இல் இல-இந்திய ஒப்பந்தம் உருவானதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் மூலம் அல்ல பேச்சுவார்த்தை மூலமே தமிழ் பேசும் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணலாமெனக் கூறித் தமிழ் இயக்கங்கள் 'ஜனநாயக வழி'க்குத் திரும்பின. அவர்களது தீர்வுக்கான ஜனநாயக வழியில் ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. இந்த ஐந்து வருடப் பேச்சுவார்த்தை அரசியலில் தமிழ் பேசும் மக்களது பிரச்சினைக்கு என்னவ்வாறான தீர்வைக் கண்டார்கள்; காண முயன்றார்கள் என்பது தொடாபாக அவவமைப்புக்களை நேர்காண விரும்பி முதலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (E.P.D.P)யுடன் சரிநிகர் தொடர்பு கொண்டது. அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேள்விகளை எழுதி அனுப்பும்படியும் பதிலை தான் எழுத்தில் அனுப்புவதாகவும் கூறினார். அதன்படி சரிநிகரால் அனுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அனுப்பி வைத்த பதில்களும் அப்படியே பிரசுரமாகின்றன.



## "தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம் என்று நீங்கள் கூறுவது சரியானது அல்ல"

- டக்ளஸ் தேவானந்தா

**சரிநிகர்:** *'ஜனநாயக' வழிமூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக அரசுடன் ஒத்துழைத்து வருவதாகக் குறிப்பிட்டு வருகிறீர்கள். ஆனால் ஜனாதிபதி அவர்கள் 'இங்கு நிலவுவது இனப் பிரச்சினையே அல்ல வெறும் பயங்கரவாதம் தான்' என்று அண்மைக்காலமாக குறிப்பிட்டு வருவதைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

**டக்ளஸ்:** அவர் எவ்வாறான அர்த்தத்தில் அவ்வாறு கூறியிருக்கிறார் என்று தெரியவில்லை. வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். பயங்கரவாதப் பிரச்சினையை அரசியல் தீர்வால் நிவர்த்தி செய்ய முடியாது. இங்கு நிலவுவது வெறும் பயங்கரவாதப் பிரச்சினை என்று ஜனாதிபதி கருதியிருந்தால் அரசியல் தீர்வு பற்றி அவர் ஏன் அப்படிப் பேசியிருக்க வேண்டும்? எப்படி இருந்த போதும் இனப் பிரச்சினையே இந்த நாட்டின் பிரதான முரண்பாடாக இருப்பதும், அதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் முக்கியமான விடயங்களாகும்.

**சரிநிகர்:** *கடந்த மூன்று வருட 'ஜனநாயக' வழியில் தமிழ் பேசும் மக்களது பிரச்சினையில் ஏதாவது ஒன்றுக்குத்தானும் தங்களால் தீர்வுகாண முடிந்ததா? உதாரணமாக அதிகாரப் பகிர்வு, குடியேற்றம், வட-கிழக்கு இணைப்பு....*

**டக்ளஸ்:** ஜனநாயக அரசியல் அரங்கில் நமது கால்களை ஊன்றி எமது அரசியல் பலத்தை மேம்படுத்தி வருகிறோம். எனினும், நமது கட்சியால் மட்டும் குறுகிய காலத்தில் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகள் அல்ல அவை.

**சரிநிகர்:** *இவ்வாறான நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு நீங்கள் வழங்குவதென்பது தமிழ் பேசும் மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளது என்கிற கருத்துப்பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன?*

**டக்ளஸ்:** எக்கட்டத்திலும் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராக நாம் செயற்பட்டதுமில்லை. செயற்படப்போவதுமில்லை. புலிகளுக்கு எதிரான செயற்பாட்டில் நாம் அரசோடு இணைந்து நிற்கிறோம். இவ்வாறான ஒரு நிலைக்குப் புலிகளே காரணம். அவர்கள் ஏனைய சக அமைப்புக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே அவர்களை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**சரிநிகர்:** *இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின் வந்த பிரேமதாச அரசு உங்களையும் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தில் தம்முடன் இணைத்துக் கொண்டதன் மூலம் சர்வதேச அரங்கில் தனது பேரினவாத நிலையைப் பலப்படுத்தியுள்ளதோடு சுயநிர்ணயக் கோரிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளது என்பது பற்றி....*

**டக்ளஸ்:** தற்போதைய யுத்தத்தின் போக்கில் சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடிய வகையிலான நடைமுறைத் தவறுகளை நாம் சுட்டிக் காட்டியே வருகிறோம். எனினும் இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்று நீங்கள் கூறுவது சரியானதல்ல. அப்படியானால் புலிகள் தமிழர்களுக்காகப் போராடுகிறார்கள் என்ற கருத்தோடு நீங்கள் உடன்படுகிறீர்கள் என்றே அர்த்தமாகிவிடும். அவ்வாறான அடிப்படையில் இருந்து நீங்கள் விசயங்களைப் பார்க்கும் போது நம்மைப் பற்றிய தவறான முடிவுகளுக்குச் செல்கிறீர்கள்.

**சரிநிகர்:** *வடக்கு கிழக்கைப் பிரிக்கவும், கிழக்கு மாகாணத்தில் தேர்தல்களையும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையும் நடாத்த அரசு திட்டமிட்டு வருகின்றது. இந் நிலையில் வட-கிழக்குப் பிரிப்பு தொடர்பாகவும், கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பாகவும் தமிழ் பேசும் மக்களுக்குச் சார்பான நிலை எடுப்பீர்களா? அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்களா?*

**டக்ளஸ்:** வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தோடு நாம் எப்போதும் உடன்பாடு காட்டியதில்லை. நாம் எப்போதும் எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு முரணான பாதையில் செல்லமாட்டோம்.

**சரிநிகர்:** *அண்மைய தேர்தல்களில் போட்டியிடுகிற எண்ணம் உண்டா?*

**டக்ளஸ்:** நிலைமைகளை ஆராய்ந்து வருகிறோம். விரைவில் அது பற்றிய முடிவினை அறிவிப்போம்.

**சரிநிகர்:** *இலங்கை வானொலியில் 'மக்கள் குரல்' நிகழ்ச்சியையும், தமிழில் 'தினமுரசு', சிங்களத்தில் 'தூபத', முஸ்லீம்களுக்காக 'முஸ்லிம் குரல்' பத்திரிகைகளையும் நீங்கள் நடாத்துவதாகப் பேசப்படுகிறதே. அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? தினகரன் பத்திரிகையில் வெளிவந்த 'புல்லட் பொக்ஸ்' என்கிற பத்தி கூடத் தங்கள் அமைப்பைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டதாகப் பேசப்படுவதைப் பற்றி....*

**டக்ளஸ்:** மக்களின் குரல், புலிகளின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் ஒரு நிகழ்ச்சி என்ற வகையில் நாம் அதற்கு ஆதரவு வழங்குவது உண்மை தான். ஆனால் நீங்கள் குறிப்பிடும் பத்திரிகைகளில் நமக்குத் தெரிந்த நண்பர்கள் இருக்கிறார்கள். சரிநிகரிலும் நமக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அதற்காக அவற்றை நம்மோடு முடிச்சுப் போடுவது வேடிக்கையானது. குறிப்பாகத் தினமுரசு என்னும் பத்திரிகை நம்மைப் பற்றியும் விமர்சித்து வருகின்றது. நீங்களும் விமர்சித்திருக்கிறீர்கள். ஒரு கட்டத்தில் சரிநிகர் பத்திரிகைக்கு நாம்தான் பின்னால் நின்று ஆதரவு கொடுக்கிறோம் என்றும் சிலர் கூறினார்கள். உங்கள் பத்திரிகையோடு சம்பந்தப்பட்ட ஒரு இளம் கவிஞரே அதை எம்மிடம் தெரிவித்தார். எனினும், ஜனநாயகத் தன்மையுள்ள விடயங்களோடு நம்மை இணைத்துப் பேசுவது அவ்வாறு பேசுபவர்கள் நம் மீது கொண்டுள்ள நல்ல அபிப்பிராயத்தைக் காட்டுகிறது. புல்லட் பொக்ஸைப் பொறுத்தவரை அது நமது கருத்தையே பிரதிபலித்தது.


**சரிநிகர்:** *அகதி முகாமிலிருந்தும், வேறு இடங்களிலும் தங்கள் அமைப்பினால் கைது செய்யப்பட்டவர்களை தீவுப்பகுதியில் கொண்டு போய் வைத்துள்ளதாகவும், இவ்வாறான பல்வேறு மனித உரிமை மீறல்களுடன் தங்களது அமைப்புக்குச் சம்பந்தம் இருந்தாகப் பேசப்படுவது பற்றியும் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

**டக்ளஸ்:** அவ்வாறான ஒரு தவறான செய்தி தங்கள் பத்திரிகையிலும் முன்பு வெளியிடப்பட்டது. கொழும்பிலிருந்த அகதி முகாம்களில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இருந்தார்கள். நாம் பலவந்தமாக ஆட்திரட்டுவதாக வந்தால் அவர்களை எல்லாம் பலவந்தப்படுத்தி இருக்க வேண்டுமே. தமது சொந்த விருப்பின் பெயரில் அகதி முகாம்களில் இருந்த சிலர் நம்மோடு இணைந்து கொண்டார்கள். ஆனால் அவர்களது உறவினர்கள் சிலர் அவர்கள் இயக்கத்தில் சேருவதை விரும்பவில்லை. எனவே அவர்கள் கூறிய தவறான தகவல்களில் ஒரு சிலர் அவ்வாறு பேசிக் கொண்டார்கள்.

**சரிநிகர்:** *அண்மையில் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் அரச ஆதரவுடன் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்படுவது பற்றி... இதனைக் கூட உங்களால் தடுத்து நிறுத்த முடியவில்லையா?*

**டக்ளஸ்:** கொழும்பில் நாசகார வேலைகளை மேற்கொள்வதில் புலிகள் மேற்கொண்ட முயற்சிகள் வெளியாகி இருப்பதால் தேடுதல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு நாம் அரசாங்கத்தைக் கோர முடியாது. ஆயினும் அப்பாவிகள் என்று நமக்கு நன்கு தெரிந்தவர்கள் பாதிக்கப்படும் போது உரிய இடங்களில் பேசிப் பரிகாரம் கண்டே வருகிறோம்.

**சரிநிகர்:** *ஈ.பி.ஆர்.எல்.எப் இல் மக்கள் விடுதலைப் படைத் தளபதியாக இருந்த போது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஈழமே என்கிற அடிப்படையில் இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தீர்கள். அதே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு இதுவரை எந்த உருப்படியான தீர்வையும் அரசு முன் வைக்காத போதும் அக் கோரிக்கையை நீங்கள் கைவிட்டு விட்டீர்கள். அவ்வாறானால் ஈழக் கோரிக்கை தவறானது என்கிற உங்களது முடிவை இது அர்த்தப் படுத்துகிறதா?*



**டக்ளஸ்:** நம்மைப் பொறுத்த வரையில் இனவாத அடிப்படையில் ஈழக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஆனால் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டும் என்கின்ற முடிவு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னரே செய்யப்பட்டது. அந்த முடிவை மேற்கொள்ளும் போது இலங்கை அரசோடு எமக்கு எவ்விதமான உறவும் இருக்கவில்லை. எனவே அரசிடம் தீர்வை எதிர்பார்த்து நாம் அந்த முடிவைச் செய்ததாக கருதிக் கொண்டு இவ்வாறான கேள்வியை எழுப்பியிருக்கிறீர்கள் என நினைக்கிறேன்.

**சரிநிகர்:** *சரிநிகர் பற்றி........?*

**டக்ளஸ்:** புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்து இவ்வாறான ஒரு பத்திரிகை வெளிவர முடியுமா என்று நான் நினைத்ததுண்டு. நீங்கள் புலிகளைக் கடுமையாக விமர்சிக்காவிட்டாலும் கூட அவர்கள் உங்களை இவ்வாறு சுதந்திரமாக உங்கள் போக்கில் எழுத அனுமதித்திருக்க மாட்டார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்

# பலஸ்தீன- இஸ்ரேல் ஒப்

# பலஸ்தீனியரின் து

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது பலஸ்தீன- இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளிலிருந்து பலஸ்தீன விடுதலை இயக்கம் வெளியேறியிருப்பதாகச் செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. செப்டம்பர் 13ம் திகதி வாஷிங்டனில் வைத்துக் கைச்சாத்திடப்பட்ட உலகப் புகழ் பெற்ற 'இஸ்ரேலிய பலஸ்தீனிய உடன்படிக்கையின் பிரகாரம், ஒரு பலஸ்தீன சுயாட்சிக்கான அடிப்படைகளை தீர்மானிக்கவென நடந்து கொண்டிருந்த இப் பேச்சுவார்த்தையின் இடைநிறுத்தத்திற்குக் காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. இஸ்ரேலின் பிடியிலிருக்கும் காசாப் பள்ளத்தாக்கிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்ற உடன்பாட்டில் ஏற்பட்டுள்ள இழுபறியே இவ் இடைநிறுத்தத்திற்கான காரணம் என்று கூறப்படுகிறது. ஆயினும், இப் பேச்சுக்கள், இப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் இருதரப்புப் பிரதிநிதிகளும் தத்தம் தலைவர்களை சந்தித்துப் பேசிய பின் மீளத் தொடரலாம் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.



இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்ட அன்று உலகம் முழுவதும் ஆச்சரியம், அதிர்ச்சி, மகிழ்ச்சி போன்ற பலவிதமான அலைகள் எழுந்து கொண்டிருந்தன. அரபாத் துரோகம் செய்து விட்டார் என்றும், சமாதானத்திற்கான முயற்சிகள் தொடங்கியிருப்பது நல்ல அறிகுறியே என்றும் நம்பமுடியாத ஒரு நிகழ்ச்சி இது என்றும் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் பட்டன.

பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் தமது மூன்று தசாப்தகாலப் பகையை கைவிட்டு பரஸ்பர அங்கீகாரத்துடன் கைகுலுக்கிக் கொண்டதை நம்புவது கஸ்டமாகத்தான் இருந்தது.

உடன்படிக்கைக்கு சில நாட்கள் முன்னரே ப.வி.இயை ஒரு பயங்கரவாத இயக்கமாக வர்ணித்துக் கொண்டிருந்த இஸ்ரேலிடம் இப்படியொரு மாற்றம் ஏற்படும் என்று எப்படி நம்புவது அதுவும் பலஸ்தீன மக்களின் தலைகளை நொருக்குவதிலும், குழந்தைகளைச் சுட்டுக் கொள்வதிலும் தயக்கம் இன்றி ஈடுபட உத்தரவிட்ட ஒருவர், பேரூட் முற்றாக அழிக்கப்பட்டாலும் தான் கவலைப்படப் போவதில்லை எனக் கூறிய ஒரு யூத வெறியர், நானூற்றுக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களை மாதக்கணக்காக கடும் குளிரில் நடுங்க வைத்த இஸ்ரேலியப் பிரதமர் இவ்வாறு மாறுவார் என்பதை யாரால் தான் நம்பியிருக்க முடியும்?

ஆனால் அது நடந்தது

இஸ்ரேல், பலஸ்தீன விடுதலை இயக்கத்தை பலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக அங்கீகரித்தது; பலஸ்தீனர்களுக்கு காசாப் பள்ளத்தாக்கிலும் மேற்குக் கரையிலும் ஒரு சுயாட்சி அமைப்பை உருவாக்க ஒப்புக் கொண்டது. கைப்பற்றப்பட்ட பிதேசங்களிலிருந்து தனது படைகளை விலக்கிக் கொள்ள தயார் எனக் கூறியது!

இவை எல்லாம் நடக்குமா என்ற சந்தேகங்கள் உலகம் முழுவதும் எழுப்பப் பட்டுக் கொண்டிருக்கையில், ''எமது மக்கள் காலம் காலமாக அனுபவித்து வந்த துன்ப துயரங்களுக்கான முடிவைக் காண்பதற்கான ஒரு தொடக்கம் இது என்று கூறியபடி'' நம்பிக்கையுடன் இஸ்ரேலியப் பிரதமருடன் கைகுலுக்கிக் கொண்டார் யசீர் அரபாத்.

ஒப்பந்தம் கைச்சாத்தான செம்டம்பர் 13ம் திகதிக்கு சரியாக நான்கு நாட்களுக்கு முன், செம்டம்பர் 9ம் திகதி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் அவர்களின் கைச்சாத்திடப்பட்ட கடிதம் ஒன்றைச் சுமந்தபடி இஸ்ரேலை நோக்கிப் பறந்தார் திரு ஹோல்ஸ்ற் அவர்கள். நோர்வேஜிய வெளிநாட்டமைச்சரும் இன்று உலகப் புகழ் பெற்ற சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாவதற்குக் காரணமானவர் என அறியப்பட்டவருமான திரு ஜொகான் ஜோர்ஜென் ஹொல்ஸ்ற் அவர்கள் அன்று சுமந்து கொண்டு சென்ற கடிதம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகும். 8மாதங்களுக்கு மேலாக நடந்து வந்த இரகசிய பேச்சுவார்த்தையின் இறுதி வெற்றிச் சமிஞ்சையை தடை செய்யக் கூடியதாக இருந்த ஒரு விடயம் இக்கடிதத்தால் சமன் செய்யப்பட்டது. அக்கடிதத்தின் இரண்டாவது பந்தி இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. ''இஸ்ரேல் அரசின் சமாதானமும் பாதுகாப்பும் கொண்ட இருப்பை பலஸ்தீனிய விடுதலை இயக்கம் அங்கீகரிக்கிறது''.

அதன் இறுதிப்பகுதி மேலும் இவ்வாறு கூறியது:

'கைச்சாத்திடவிருக்கும் பிரகடனத்திற்கான அடிப்படைகளையும், எமது உறுதி மொழியினது பேரிலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 242வது 338வது தீர்மானங்களை அங்கீகரிக்கும் பலஸ்தீனிய முடிவின் படியும், பலஸ்தீன விடுதலை இயக்கமானது, இஸ்ரேலை அங்கீகரிக்க மறுக்கும் பலஸ்தீன தீர்மானத்தை மறுதலிக்கிறது. இக்கடிதத்தின் பிரகாரம் 'இஸ்ரேலின் இருப்பை' நிராகரிக்கும் அத்தீர்மானம் காலாவதியாகிறதாக அறிவிப்பதுடன் பலஸ்தீனிய தேசிய சபையில் இத்தீர்மானத்தை முறைப்படி கொண்டுவருவதற்கான பொறுப்பை பலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுக் கொள்கிறது.''

முக்கியமான முடிவுகள். இவை சரியானவையா தவறானவையா என்பவை விவாதத்திற்குரியவையாக இருக்கலாம். ஆனால் முடிவுகள் மிக முக்கியமானவை. இவற்றின் மீதுதான் இஸ்ரேல்-பலஸ்தீன விடுதலை இயக்க பரஸ்பர அங்கீகாரம் பிறந்தது. சமாதானத்திற்கான முயற்சிக்கான முதல் அடி எடுத்து வைக்கப்படுகின்றது என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் எந்தவிதமான மனித உரிமைகளுமற்று வாழ்கின்ற 8மில்லியன் மக்களுக்கு, 45 ஆண்டுகால யுத்த அனுபவங்களால் தவித்துப் போயிருக்கின்ற அவர்களுக்கு, அவர்களது சொந்தப் பூமியில் ஒரு சிறுதுண்டுதான் கிடைக்கப்போகிறது -இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருமாயின்- என்பதெல்லாம் உண்மையென்ற போதும் கிடைக்கிற சிறு துண்டும் சுதந்திரமான துண்டாகக் கிடைக்க வேண்டும் என்பதில் ப.வி.இ. மிகவும் கவனமாக இருந்திருக்கிறது. சர்வதேசிய ரீதியில், பொருளாதார ரீதியில், அரசியல்ரீதியில் உருவாகியுள்ள சூழலை கவனமெடுத்து ப.வி.இ. இந்த முடிவை நோக்கி வந்திருக்கிறது. இஸ்ரேலின் வாயால் 'பலஸ்தீன விடுதலை இயக்கம் பலஸ்தீன மக்களின் பிரதிநிதி' என்று சொல்ல வைத்த பின்னரே அது இஸ்ரேலுடன் கைகுலுக்கிக் கொண்டது; வாஷிங்டனில் கைச்சாத்திட்டது. இது சரியா தவறா என்ற சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. நடக்குமா, இஸ்ரேல் ஏமாற்றி விடாதா என்று ஐயங்கள் எழுப்பப்படுகின்றன.

ஆயினும் பலமிக்க சக்திகளின் எதிர்ப்புடன், சக அணிகளது முணுமுணுப்புடன் ப.வி.இ. இந்த ஒப்பந்தத்திற்கு துணிந்திருக்கிறது. நம்பமுடியாத இம் முடிவுக்கு அதுவரக் காரணம் என்ன? ஒரு முக்கியமான கேள்வி அது!

* * *

பலஸ்தீன மக்களின் வரலாறு துயர்நிறைந்தது.

சொந்த நிலத்திலே, விவசாயத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவிகள் அவர்கள். ஒரு அரசியல் அமைப்பு வடிவமோ, ஒரு ஸ்திரமான ஆட்சிப் பரப்போ அற்ற மிகச் சாதாரண வாழ்க்கையாக இருந்தது அவர்களது வாழ்க்கை.

பல நூற்றாண்டு காலங்களுக்கு முன் அங்கே யூதர்கள் வாழ்ந்தார்கள் என்பதோ, அவர்கள் ரோமானிய ஆக்கிரமிப்பினால் வெளியேற்றப்பட்டிருந்தார்கள் என்பதோ அவர்கள் அறியாத கதை.

நான்கு நூற்றாண்டுகட்கு மேலான கிறிஸ்தவ ஆட்சியின் போது மிகமிகச் சிறுபான்மையாக இருந்த பலஸ்தீன யூதர்கள், பலஸ்தீனிய மக்களின் நண்பர்கள்; உறவினர்கள் ; சக உழைப்பாளர்கள்.

சிரியாவிலும் எகிப்திலும் மற்றும் பிற அரபு நாடுகளிலும் ரோமானிய ஆதிக்கத்தால் வெளியேறி வாழ்ந்த அகதி யூதர்கள், மீளவும் ஜெருசலேம் முஸ்லீம்களின் கைகளில் (6ம் நூற்றாண்டளவில்) வீழ்ந்த போதே திரும்பி வர முடிந்தது!

கிட்டத்தட்ட பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலான அரபு-முஸ்லீம் மக்களின் தாயகமாகவே மாறிவிட்ட பலஸ்தீனத்தை நோக்கி யூதர்கள் பெருமளவில் மீளக் குடியேறத் தொடங்கியது 19ம் நூற்றாண்டளவில் மட்டும் தான். குடியேறத் தொடங்கினார்கள் என்பதை விட குடியேற்றப்படத் தொடங்கினார்கள் என்பது தான் மேலும் பொருத்தமாகும்.

குடியேறுபவர்களை, எதுவும் புரியாத அப்பாவிகளாக வரவேற்று மகிழ்ந்தனர் பலஸ்தீன மக்கள்.

ஆனால், சியோனிச யூத சக்திகள் 'மாபெரும் இஸ்ரேலை' உருவாக்கும் நோக்குடன் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. சொல்லப்போனால், இதற்கு அவர்கள் ஆதரவாயும் இருந்தார்கள்!.

1917ல் சியோனிஸ்ட்டுகள் பலஸ்தீனத்தை அங்கு 90%க்குமதிகமாக இருந்த அரபுமக்களைப் புறக்கணித்து விட்டு, யூதர்களின் தாயகமாக அறிவிக்க வேண்டுமென பேசத் தொடங்குகின்றனர்!

பலஸ்தீனத்தை விரைவிலேயே யூதர்களின் தாயகமாக்குவதற்கேற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டுமென்று கூறியதுடன் அதற்கென ஒரு அதிகார அமைப்பையும் அவர்கள் உருவாக்குகின்றனர். விளைவு, 10பலஸ்தீனர்களுக்கு ஒரு யூதர் என்று இருந்த நிலைமை மாறி இரண்டு பலஸ்தீனர்களுக்கு ஒரு யூதர் என்ற நிலைமை முப்பதே ஆண்டுகளில் உருவாகிவிட்டது.

1947ல் 1,913112 C
கொண்ட பலஸ்தீனத்
யூதர்களாகி விட்டன

ஐ.நா.சபை யூதர்கள
யர்களுக்குமென இ
சங்களை/வகுத்துக்
தப் பிரதேசமான ெ
தேசப் பிரதேசமாக

ஆனால், 1948ல் யூத
அரசை பிரகடனம்
அமெரிக்க, சோவிய
டன்! அரபு நாடுகள்
செய்கின்றனர்.

காசாப் பள்ளத்தாக்
கரையையும் தவிர்ந்
தையும் 'இஸ்ரேல்'

இறுதியில் ஜெருசே
காய்ப் போகிறது.
லேயே 850,000 பல
திகளாகின்றனர்.

ஒண்ட வந்த ஒட்
கொடுத்த கதையா
கதை.

*

## பலஸ்தீன - இஸ்ரேலிய நெருக்க

1947.நவம்.29 :
பிரித்தானியாவின் கீழிருந்த பலஸ்தீனத்தை சுதந்திர அரசு மற்றும் யூத அரசுப் பிரதேசங்களாக்கும் தீர்மானத்துக்கான திட்டம் ஒன்றை ஐ.நா.பொதுச் சபை சேர்த்துக் கொள்கிறது. ஜெருசலேம், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், யூதர்கள் ஆகியோருக்கான புனிதப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு சர்வதேச கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படுகிறது. 1700 பேரைப் பலிகொண்ட யூத - அரபு யுத்தம் வெடிக்கிறது.

1948 மே.14 :
பிரித்தானிய கட்டுப்பாடு காலாவதியாவதற்கு ஒரு சில மணிநேரத்திற்கு முன்பதாக 'டேவிட் பென்குரியன்' இஸ்ரேலை ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்துகிறார். இது உடனடியாக அமெரிக்காவாலும், பின்னர் சோவியத் யூனியனாலும் அங்கீகரிக்கப்படுகிறது. மறுநாள் அரபு இராணுவம் புதிய யூத அரசை ஆக்கிரமிக்கின்றது.

1949 ஜனவரி 7 :
முதலாவது அரபு - இஸ்ரேல் யுத்தம், ஐ.நா. திட்டத்தில் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகமான பகுதிகளை இஸ்ரேலுக்குப் பறிகொடுத்த பின் முடிவுக்கு வருகிறது. ஜெருசலேம் இரண்டு துண்டுகளாகிறது. யூத அரசுக்கு புதிய எல்லைகளை வகுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் றோட்ஸிலும், கிறிசிலும் பெப்ரவரிக்கும் ஜுலைக்கும் இடைப்பட்ட காலங்களில் கைச்சாத்தாகின்றன. இப்புதிய எல்லைகளின்படி 70% மான முன்னைய பலஸ்தீனத்தினதும், பிற அரபுக்களதும் மீதான கட்டுப்பாட்டை யூத அரசு எடுத்துக் கொள்கிறது. 850,000 பலஸ்தீனர்கள் நாடற்றவர்களானார்கள்.

1949 மே 11 :
இஸ்ரேல் ஐ.நாவின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்கிறது.

1949 டிசெ.13
இஸ்ரேலிய பாராளுமன்றம் மேற்கு ஜெருசலேமை இஸ்ரேலியத் தலைநகராக அறிவிக்கிறது.

1950 ஏப்.24 :
ட்ரான்ஸ் ஜோடானின் மேற்குக் கரையை இணைத்து அப்துல்லா மன்னர் ஜோர்தானின் ஹஸ்மைற் இராசதானியை (Hasmite Kingdom) உருவாக்குகிறார்.

1956 ஒக்.29 :
இரண்டாவது இஸ்ரேல் அரபு யுத்தம் ஒரு சர்வதேசப் பிரச்சினையாகத் தொடங்குகிறது. எகிப்திய கமால் அப்துல் நாசர் சுயஸ் கால்வாயை தேசியமயமாக்கிய மூன்றுமாதங்களின் பின் இஸ்ரேலிய இராணுவம் சினாய் குடாநாட்டுப் பகுதியை ஆக்கிரமிக்கிறது. பிரித்தானிய பிரஞ்சுப் படைகளுடன் சேர்ந்து செய்த தனது தாக்குதலை அமெரிக்க சோவியத் கண்டிப்பின் பின் இஸ்ரேல் கைவிடுகிறது. மார்ச் 1957 இல் ஐ.நா. பாதுகாப்புப் படைகளிடம் விட்டு விட்டு இஸ்ரேல் வெளியேறுகிறது. 1949ம் ஆண்டு எல்லைக்குத் திரும்பி வருகிறது இஸ்ரேல்.

1964 மே 28 :
பலஸ்தீன விடுதலை இயக்கம் உருவாக்கப்பட்டு ஒரு தேசியத் திட்டம் வரையப்படுகிறது. 1968 இல் திருத்தப் பட்ட இத் திட்டம் 'ஆயுதப் போராட்டமே பலஸ்தீனத்தை விடுவிக்க உள்ள ஒரே வழி' என அறிவிக்கிறது. 1969 இல் யஸீர் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகிறார்.

1967 ஜுன் 5 :
சினாய், எகிப்தின் வளைகுடா என்பவற்றிலிருந்து ஐ.நா. சமாதானப் படைகள் வெளியேறியதும் இஸ்ரேல் மத்திய கிழக்குக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பிக்கிறது. யுத்தத்தில் அது கிழக்கு ஜெருசலேம், சினாய்,காசா,கோலான் குன்றுகள் மற்றும் மேற்குக்கரை ஆகியவற்றைக் கைப்பற்றுகிறது. இப்போது இஸ்ரேலிடம் 1949 இல் இருந்ததை விட நான்கு மடங்கு பிரதேசங்கள் கைவசமாகியுள்ளன. அது கிழக்கு ஜெருசலேமை தன்னுடன் யூன் 27 இல் இணைக்கிறது.

1967 நவ 22 :
'அண்மைக் காலங்களில் கைப்பற்றப் பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேற வேண்டும்' என்ற 242வது தீர்மானத்தை ஐ.நா. எடுக்கிறது. அத்துடன் இத்தீர்மானம் 'எல்லைப்புற அங்கீகாரம் மற்றும் அப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு அரசினதும் அரசியல் சுதந்திரம் என்பவற்றை ஆயுதமேந்திய நடவடிக்கைகளற்ற பிரதேசமென ஆக்குவதுட்பட்ட வழிகளினூடாக உத்தரவாதம் செய்தல்' என்றும் தெரிவிக்கிறது.

1969:
அரபாத் , ப.வி.இ.இன் தலைவராகப் பொறுப்பேற்கிறார். அவரது சொந்த இயக்கமான ஃபற்றா இஸ்ரேல் மீதான கொமாண்டோ தாக்குதலை ஆரம்பிக்கிறது.

1970:
ஜோர்தானில் கொமாண்டோ குழுக்களின் பலம் அதிகரித்தமையும் விமானக் கடத்தல்கள் பலஸ்தீனிய இலட்சியத்தை பிரபல்யப்படுத்துவதும் ஜோர்தானிய இராணுவத்துடன் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு நெருக்கடிகளைத் தருகிறது. ஜோர்தானிலிருந்து கொமாண்டோக்கள் லெபனானுக்கு நகர்கின்றனர்.

1971 யூலை :
பலஸ்தீனத்தின் கடைசிப் ஃபெடாயீன்களும் (fedayeen)இராசதானிகளிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். லெபனான் அவர்களது பிரதான தளமாகிறது.

1973 ஒக்.6-25 :
எகிப்தும்,சிரியாவும் 1967 இல் இழந்த பிரதேசங்களை மீட்க ஒரு திடீர்த்தாக்குதலை சினாயிலும்,கோலானிலும் நடாத்துகின்றன. பலத்த யுத்தத்தின் பின் இது தோல்வியில் முடிகிறது. ஆனால் இஸ்ரேல் கோலான் தொடர்பாக ஒரு ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் (Disergagment Agreement) ஒன்றினை சிரியாவுடன் செய்து கொள்கிறது.

1973 ஒக் 22:
ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் 338வது தீர்மானத்தைக் கொண்டு வருகிறது. இத் தீர்மானம் உடனடி யுத்த நிறுத்தமும் 242வது தீர்மானம் நடைமுறைப்படுத்துதலும் ஒரு முடிவான தீர்மானத்திற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமெனவும் வலியுறுத்துகிறது.

1973 டிசெ 21-22 :
சிரியாவும்,பலஸ்தீனமும் தவிர்ந்த அரபு இஸ்ரேலியர்கள் தமது முதலாவது பேரம்பேசலை ஜெனீவாவில் ஆரம்பிக்கின்றனர்.

1974 நவ.13 :
நியூயோர்க்கில் நடந்த ஐ.நா.பொதுச் சபையில் யஸீர் அரபாத் உரையாற்றுகிறார். 'ஒரு கையில் ஒலிவ் மரக்கிளையுடனும், மறுகையில் ஒரு விடுதலை வீரனின் துப்பாக்கியுடனும் வந்துள்ளேன். எனது ஒலிவ் மாக்கிளையை கீமே
விழுந்து செய

1975 ஏப்.13
கிறிஸ்தவர்கட்கும்
தொடர்ச்சியான ச
யாக பேரூட்டின்
ஒரு கிறிஸ்தவ கிர
சில் பிரயாணம் செ
கள் சுட்டுக்
தொடர்ந்து லெபனா
வெடிக்கிறது.


1977 நவ.19:
எகிப்திய ஜனாதிப
ஜெருசலேம் சென்று
ளுமன்றத்தில் உரை

1978 செப்.17 :
சினாயைத் திரும்ப
படைக்கவும்,கைப்ப
சங்கட்கு சுயாதிபத்
மான காம்ப் டேவி
ரிக்க ஜனாதிபதி ஜி
ரணையுடன் அமெ
தாகிறது. சினாயில்
1982 இல் பிக்
சுயாட்சி விடயங்க
சொல்லவில்லை.

1979 மார்ச் 30 :
இஸ்ரேலுடன் மு
(இன்று வரை ஒப்
நாடாகவும்) எகிப்
வைத்து ஒப்பந்தம்
கொள்கிறது. ஒக்
சதாத் ஒரு முஸ்லீ
யால் கொல்லப்படு

1980 யூலை 30 :
இஸ்ரேலியப் பாரா
(Knesset)முழு ஜெ
ரேலின் மீள ஒன்ற
அறிவிக்கிறது. ஆ
தேச சமூகம் அங்கீ

1981 டிசெ 14 :
கோலான் குன்று
இணைத்துக் கொ
அறிவிக்கிறது.



நன்றி - நூலகத்திட்டம்



# ...ந்தம்: ...யரத்தின் முடிவு?

...சனத்தொகை
...608,225 பேர்

...ம் பலஸ்தீனி
...ட்சிப் பிரதே
...க்கிறது. புனி
...லேமை சர்வ
...விக்கின்றது.

...ா இஸ்ரேலிய
...செய்கின்றனர்.
...அனுசரணையு
...தப்பிரகடனம்

...யும், மேற்குக்
...முப்பிரதேசத்
...பற்றுகிறது.

...ம் இஸ்ரேலுக்
...ந்த மண்ணி
...னியர்கள் அக

...திற்கு இடம்
... இவர்களது

பலஸ்தீன விடுதலை இயக்கம் 1964ல் தோற்றம் பெறும் வரை அந்த மக்களுக்காக குரல் கொடுக்க யாரும் இருக்கவில்லை. அவர்களது வளங்கள் அனைத்தும் 'இஸ்ரேலியருக்கு ஆகிப் போவதை அவர்கள் பார்த்துக் கொண்டேயிருந்தனர்! அல்லது இஸ்ரேலியருடைய மலிவு உழைப்பாளிகளாப் போயினர்'.

1948களில் இருந்து பலஸ்தீனத்திற்கென ஒரு அரசியல் வாழ்விடமோ நிர்வாக ஒழுங்கமைப்போ இல்லாமல் ஆயிற்று. மேற்குக் கரைப் பிரதேசத்தை அயலில் உள்ள ஜோர்டான் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. அது பலஸ்தீனம் என்ற பெயரை ஒரு போதும் பாவிக்க அனுமதித்ததில்லை. பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இதனால் 'அரசற்ற'வர்களானார்கள். ஏனையோர் அயலில் உள்ள அரபு நாடுகளுக்கு கலைந்து போனார்கள். கிட்டத்தட்ட 40லட்சம் பலஸ்தீனியர்கள் இருந்த போதும், அவர்களுக்கு எங்கேயும் ஒரு நியாயமான அரசியல் உரிமை இல்லை என்ற நிலையே நிலவியது. அவர்களது வாழ்க்கை இஸ்ரேலிலோ, அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலோ அல்லது அகதி முகாம்களிலோ தான் கழிகிறது. சொல்லொனாத் துன்பங்களும் நெருக்கடிகளுமே அவர்கள் தினம் அனுபவிக்கும் விடயங்களாகி விட்டன. அவர்களுக்கு எதிரான இஸ்ரேலிய அடாவடித்தனங்களுக்கு ஒரு எல்லையே கிடையாது. சப்ரா, சடில்லா முகாம்களில் நடந்த தாக்குதல்கள் இவற்றின் உச்சம் எனலாம்.

1964இல் பலஸ்தீன விடுதலை இயக்கம் பலஸ்தீன மக்களின் தலைமையை ஏற்கவென உருவாக்கப்பட்ட பின்னரே அம் மக்களது அரசியல் உரிமைகளுக்கு ஒரு குரல் கிடைக்கின்றது. 1967 ஜூன் யுத்தத்துடன் மேற்குக் கரை, காசாப் பள்ளத்தாக்குப் பகுதிகள் முற்றாக இஸ்ரேலின் கைக்குள் போகின்றன. மேலும் 10லட்சம் பலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய கட்டுப்பாட்டுக்குள் உள்ளாகின்றனர்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து 1968இல் ப.வி.இ ஒரு சுதந்திரமான அமைப்பாக இயங்க முடிவு செய்கிறது. பலஸ்தீன தேசியக் கவுன்சில் அரபு நாடுகளதோ, பிற நாடுகளதோ கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான அமைப்பாக தன்னை அறிவித்துக் கொள்கிறது. அது பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உயர்மட்ட கொள்கைத் திட்டமிடல் அமைப்பாகும். இது ஒரு பலஸ்தீன அரசு உருவாக்கத்தின் அவசியத்தை முன்மொழியும் அதே வேளை அரபுத் தேசியவாதம் மற்றும் சியோனிசம் இரண்டுக்கும் எதிரான தனது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்கிறது. சியோனிசம் என்பதை அமெரிக்க-ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தொடர்ச்சியாகக் கண்ட பலஸ்தீன தேசியக் கவுன்சில் பலஸ்தீனியர்களுக்கான தாயகம் ஆயுதம் ஏந்திய யுத்தத்தின் மூலமே சாத்தியம் என அறிவிக்கிறது. அத்துடன் அது புதிய கெரில்லா, கமாண்டோ தாக்குதல்களைத் தொடங்குகிறது.

இந்த அறிவிப்பு இஸ்ரேலால் மட்டுமல்ல அரபு நாடுகளாலும் எதிர்க்கப்பட்ட போதும் ப.வி.இ. அசைந்து கொடுக்கவில்லை. ஜோர்டானால் நடாத்தப்பட்ட 'கறுப்பு செப்டெம்பர்' நிகழ்ச்சி, சிரியாவின் தொடர்ச்சியான ப.வி.இற்கு எதிரான நெருக்கடிகள் என்பன இதன் வெளிப்பாடுகளே ஆகும்.

இஸ்ரேலின் தொடர்சியான தாக்குதல்களைச் சமாளித்தபடி ப.வி.இ தனது நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டு வந்தது.

* * *

இன்று ஜெரிக்கோவிலும் காசாப் பள்ளத்தாக்கிலும் அமையவிருக்கும் சுயாட்சி அமைப்பு பலஸ்தீன விடுதலை இயக்கத்தால் இதுகாறும் கூறப்பட்டு வந்த 'பலஸ்தீன அரசு' கோரிக்கையை கைவிடுவதாகி விடுமா? அப்படியானால் அம் மக்களின் இத்தனை கால இரத்தம் சிந்திய யுத்தத்திற்கு என்ன அர்த்தம் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் பதிலளிப்பது போல செப் 13ம் திகதிய உரையில் அரபாத் அவர்கள் 'இது ஒரு தொடக்கம்' என்று தெரிவித்துள்ளார். உண்மையில் இப்போது கைச்சாத்தாகி இருக்கும் உடன்படிக்கை பலஸ்தீன மக்களின் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வந்து விட்ட ஒரு முழுமையான ஒப்பந்தம் அல்ல. அது பலஸ்தீனத்தில் ஒரு சுயாட்சிப் பிரதேசத்தை உருவாக்குவதற்கான அடிப்படைகளுக்கான பிரகடனம் மட்டுமேயாகும். அடுத்த வருடம் ஜனவரியில் நடாத்தப்படவுள்ள ஒரு தேர்தலைத் தொடர்ந்து உருவாக்கப்படப்போகும் ஒரு பலஸ்தீனியர் சபை பற்றிய அடிப்படைகளை தீர்மானிக்கவும் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுக்களை நடாத்தும் கால எல்லைகளை வகுக்கவுமான அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டதே அது.

இதை வைத்துக் கொண்டு பலஸ்தீனிய விடுதலை இயக்கம் பற்றியோ, இஸ்ரேல் பற்றியோ யாரும் எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது.

* * *

பதினைந்து அத்தியாயங்களையும் மூன்று பின்னிணைப்புகளையும் கொண்ட இந்த உடன்படிக்கை காசாப் பள்ளத்தாக்கு, ஜெரிக்கோ பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய படைகளும் அவர்களது இராணுவ சிவில் நிர்வாகமும் பலஸ்தீன இடைக்கால சபைக்கு மாற்றப்படல், கல்வி, கலாசாரம், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளும் பலஸ்தீனியரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகார அமைப்புகட்கு மாற்றப்படல், பொலிஸ்படை உருவாக்கம் என்பவை பற்றியும் அமையவிருக்கும் பலஸ்தீனியக் கவுன்சிலின் சட்டதிட்டங்கள் அதிகாரங்கள் பற்றியும் விவாதிப்பதற்கான கால எல்லைகளை வகுத்துள்ளது.

இதன்படி டிசம்பர் 13க்குள் காசா, ஜெரிக்கோ பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படைகளை அகற்றும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதுபற்றிய விபரங்கள் பேசப்பட்டதும் அது வெளியேறுதல் ஆரம்பமாகும்.


1994 ஏப்பிரலுக்கு முன் முழுப்படைகளும் வெளியேறிய பின் 1994 யூலையில் தேர்தல் நடாத்தப்பட்டு இடைக்கால ஐந்தாண்டுகால 'பலஸ்தீனிய சபை' உருவாக்கப்படும். இவ்வைந்தாண்டு' காலத்துள் அதாவது 1998 டிசம்பர் 13க்குள் ஒரு நிரந்தர தீர்வுக்கான முடிவு எடுக்கப்பட்டுவிடும்.

இவைதான் ஒப்பந்தம் தெரிவிக்கும் அம்சங்கள்.

பலஸ்தீனிய மக்களின் நிலை, இஸ்ரேல் அரசின் இருப்பு, தன்மை என்பன குறித்த தெளிவான புரிதலுடன் இவ்வுடன்படிக்கையை நோக்கும் ஒருவர் அதில் உள்ள விடயங்களை விளக்கிக் கொள்வது சாத்தியம். முழுக்க முழுக்க இருதரப்பாரினதும் ஒத்துழைப்பிலும் நல்லுறவிலும் தங்கியுள்ள இதன் வெற்றிகூட பலஸ்தீன மக்களுக்கு உடனடியாக ஒரு தனிநாட்டை உருவாக்கித் தந்துவிடப் போவதில்லை என்பது உண்மையே. ஆயினும் அதற்கான வாய்ப்புக்களை யாரும் மறுத்து விடவும் முடியாது!

* * *

1948இலேயே பலஸ்தீனிய தேசியக் கவுன்சில் இஸ்ரேலை மறைமுகமாக அங்கீகரித்திருந்தது. ஐ.நா.சபையின் 242வது தீர்மானத்தை அங்கீகரிப்பதாக கவுன்சில் அறிவித்ததன் மூலம் இதை அங்கீகரித்திருந்தது. இஸ்ரேல் ஒரு சட்டவிரோத அரசு என்ற அதுவரை கால பலஸ்தீனிய நிலைப்பாட்டை மறுபரிசீலனைக்குள்ளாக்கிய இந்தத் தீர்மானம் பலஸ்தீன இயக்க வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பமாகும். இந்தத் தீர்மானத்தின் தர்க்கரீதியான தொடர்ச்சியே இன்று காசாவையும் ஜெரிக்கோவையும் முதற்கட்டமாக வேனும் ஏற்றுக் கொள்கின்ற நிலைமைக்கு காரணம் என்று சொல்லலாம்.



இந்த முடிவை சமரசம் அல்லது சரணாகதி என்று விமர்சிப்பவர்கள் உண்மையில் கவனத்தில் எடுக்க வேண்டியது இன்றைய உடன்படிக்கையை அல்ல. 1988ம் ஆண்டுத் தீர்மானத்தையேயாகும்.

அத்துடன், பலஸ்தீனம் இன்று இந்த முடிவுக்கு வரக் காரணமாக இருந்த சர்வதேச நிலைமைகளையும் கணக்கிலெடுத்துத்தான் ஆக வேண்டும்.

1. அமெரிக்க புதிய உலக ஒழுங்கின் தொடர்ச்சியான வெற்றி.
2. ஐ.நா சபை ஒரு அமெரிக்க கருவியாக மாறியுள்ளமை.
3. சோவியத் இல்லாத நிலை.
4. வளைகுடா யுத்தத்தில் அரபுநாடுகள் எடுத்த நிலைப்பாடு.
5. இஸ்ரேல் என்பது ஒரு நாடாக இருக்கும் யதார்த்த நிலை.

எஸ்.கே.

அரபாத்திற்கும் அவரது ஃபற்றா அமைப்புக்கும் ப.வி.இ. யில் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்கின்றன. 'ஹேமாஸ்' இயக்கத்தின் எதிர்ப்பு கவனிக்கப்படவேண்டிய ஒன்று. சிறிய ஆதரவு சக்திகளின் எதிர்ப்பும் ப.வி.இ.க்குள் இருப்பதுவும் புறக்கணிக்க முடியாது. ஆயினும் இவையெல்லாவற்றையும் மீறி அரபாத்தின் முடிவுக்கு நியாயம் சேர்ப்பனவாக மேலுள்ள நிலைமைகள் இருக்கின்றன.

இப்போது உள்ள உண்மையான கேள்வி. இது சரியா தவறா என்பதை விட, இதாவது நடைமுறைக்கு வருமா என்பதே!

## ... வரலாற்றின் முக்கிய தேதிகள்:

...கள்.

...லீம்கட்குமான
...களின் இறுதி
...மையிலுள்ள
...னூடாக பஸ்
...30 பலஸ்தீனர்
...லப்பட்டதைத்
... சிவில் யுத்தம்

...அன்வர் சதாத்
...ரேலிய பாரா
...றுகிறார்.

...கிப்திடம் ஒப்
...பட்ட பிரதே
... வழங்குவது
...பந்தம் அமெ
...டரின் அனுச
...வில் கைச்சாத்
...நம் பகுதியை
... போதும்
...ற்றி எதுவும்

...து நாடாக
... செய்த ஒரே
...வாஷிங்டனில்
...றைச் செய்து
... 1981 இல்
...ப்படைவாதி

...றம் நெசெற்
...மையும் இஸ்
... தலைநகராக
... இதை சர்வ
...வில்லை.

... தன்னுடன்
...க இஸ்ரேல்

**1982 ஏப் 25 :**
எகிப்தின் டாபாகுடா தவிர்ந்த முழு சினாய் குடாநாட்டுப் பகுதியையும் எகிப்திடம் இஸ்ரேல் கையளிக்கிறது. டாபா பகுதி பின்னர் 1989 இல் கொடுக்கப்படுகிறது.

**1982 யூன் 6 :**
இஸ்ரேலியப் படைகள் லெபனானை ஆக்கிரமிக்கின்றன. 'ஒப்பிரேஷன் பீஸ் இன் கலிலி' இஸ்ரேலின் வடக்கு எல்லையைப் பாதுகாக்கச் செயற்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

**1982 ஒகஸ்ட் 31 :**
பேருட் இஸ்ரேலியரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதும் 15000 பலஸ்தீனக் கெரில்லாக்களுடன் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகம் இருந்து வந்த லெபனானின் தலைநகரில் இருந்து அரபாத் வெளியேறுகிறார்.

**1982 செப்.16-18 :**
1500 பலஸ்தீனப் பொதுமக்கள் பேருட்டுக்கு வெளியே இருந்த சப்ரா,சடில்லா அகதிமுகாம்களில் வைத்து லெபனானிய கிறிஸ்தவப் படைகளால் கொல்லப்படுகின்றனர். இப்படைகள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளவை. ஒரு இஸ்ரேலிய விசாரணைக் கொமிஷன் இஸ்ரேலின் 'மறைமுகமான பொறுப்பை' ஊர்ஜிதப்படுத்திற்று.

**1985 ஒக். :**
டுனிஸிலுள்ள பலஸ்தீன தலைமையக மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒன்றில் 170 க்கு மேற்பட்ட பலஸ்தீனர்களும்,டுனிஸியர்களும் கொல்லப்பட்டார்கள், காயமடைந்தார்கள். அரபாத்தின் அலுவலகம் முற்றாகச் சேதமுற்ற போதும் அரபாத் மயிரிழையில் உயிர் தப்புகிறார்.

**1987 டிசெ.9**
மேற்குக் கரை மற்றும் காசாப்பகுதிகளில் பலஸ்தீனர்களின் 'இன்டிபாடா' கிளர்ச்சி ஆரம்பமாகிறது.

**1988 நவ.15:**
பலஸ்தீன தேசிய சபை எனப்படும் இடம் பெயர்ந்த பாராளுமன்றம் அல்ஜியர்சில் ஒரு சுதந்திர பலஸ்தீனத்தைப் பிரகடனப்படுத்துகிறது. அத்துடன் ஐ.நா.சபையில் 242 வது தீர்மானத்தையும் பலஸ்தீனப் பிரிப்பையும் அங்கீகரிக்கிறது. இதன் மூலம் இஸ்ரேலின் இருப்பையும் மறைமுகமாக அது அங்கீகரித்ததுடன் அரசு பயங்கரவாதம் உள்ளிட்ட அனைத்து வகைப் பயங்கரவாதத்தையும் எதிர்க்கிறது.

**1989 மே 2 :**
பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தேசியத்திட்டம் காலாவதியாகிறதென அரபாத் அறிவிப்பு. இஸ்ரேலியப் பிரதமர் சமீர் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான 4அம்சத் திட்டமொன்றை அறிவிக்கிறார். ஆயினும் ப.வி.இ.துடனான நேரடிப் பேச்சுவார்த்தையையோ, மேற்குக் கரை, காஸாப் பள்ளத்தாக்கிலும் இருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெறுவதையோ ஏற்க மறுக்கிறார்.

**1989 ஒக்:**
அமெரிக்க அரசுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் ஒரு ஐந்து அம்சத் திட்டத்தை அறிவிக்கின்றார். ஆயினும் வலதுசாரிகளுடனான கூட்டொன்றை 1990 யூனில் ஏற்படுத்திக் கொண்ட சமீர் அதை நிராகரிக்கிறார்.

**1990 ஒக-1991 செப் :**
குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பினால் உருவான வளைகுடா யுத்தத்தில் ப.வி.இ. பாக்தாதைச் சார்ந்து நிற்கிறது.

**1991 ஒக்.30 :**
மாட்றிட்டில் இஸ்ரேலுக்கும் பிற அரபு நாடுகட்குமிடையிலான மத்திய கிழக்குப் பேச்சு வார்த்தை ஆரம்பமாகிறது. ஜோர்டான், சிரியா, லெபனான் மற்றும் பலஸ்தீனர்கள் கலந்து கொண்ட இப் பேச்சுவார்த்தையில் ப.வி.இயக்கத்தின் நேரடிப் பங்குபற்றலை எதிர்க்கிறது. ஆயினும் பலஸ்தீன பிரதிநிதிகட்கும் ப.வி.இயக்கத்துக்கும் இடையிலான தொடர்பைப்பற்றி அது அலட்டிக் கொள்ளவில்லை.

**1993 ஜன.19 :**
இஸ்ரேலிய நீதி பரிபாலன எல்லைக்குள் வாழ்பவர்கள் ஏதாவது 'பயங்கரவாத' இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தடை செய்யும் 1986ம் ஆண்டின் சட்டம் வாபஸ் பெறப்படுகிறது. ஆயினும் இஸ்ரேலிய அரசு ப.வி.இயக்கத்தை ஒரு பயங்கரவாதக் குழுவாகவே கருதுவதைத் தொடர்கிறது.


**1993 ஏப். :**
இஸ்ரேல் முதன்முதலாக பைசால் குசேனியை -இவர் ஒரு கைப்பற்றப்பட்ட பிரதேசத்தின் தலைமை தேசியவாதியும், அரபாத்திற்கு நெருக்கமானவருமாவர் - நேரடிப் பேச்சுவார்த்தைக்கான பலஸ்தீனக்குழுவில் சேர்ப்பதை அங்கீகரிக்கிறது.

**1993 ஒக.29 :**
காசா பள்ளத்தாக்கிற்கும் ஜெரிக்கோ பிரதேசத்திற்கும் சுயாதிக்கம் வழங்கும் அடிப்படை ஒப்பந்தம் ஒன்றைக் கொள்கையளவில் இஸ்ரேல் அறிவிக்கிறது.

**1993 ஒக.30 :**
இஸ்ரேல் மந்திரி சபையில் சுயாதிக்க ஒப்பந்தம் அங்கீகரிக்கப்படுகிறது.

**1993 செப்.9 :**
பிரதம மந்திரி ஜிற்சாக் றொபின் ப.வி.இ.தலைவர் அரபாத் ஆகிய இருவரும் தம்மைப் பரஸ்பரம் அங்கீகரிக்கும் கடிதங்களில் கைச்சாத்திடுகின்றனர்.

**1993 செப்.13 :**
சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பலஸ்தீன சுயாதிக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது.



நன்றி - நூலகத்திட்டம்



# 'பெண்கள்! பஸ் நிறைந்திருந்தது! அவனுக்கு 200 மார்க்குகள் கிடைத்தன!'

லீபா மல்ஜெனேவிக்
தமிழில்: அரவிந்தன்

**Third world Network ஜூலை இதழில் Rape in war The history of the universal soldier என்ற தலைப்பில் Lepa mladjenovic எழுதிய கட்டுரை இங்கே தமிழில் தரப்படுகிறது. ஆங்கிலத்தில் அவர் குறிப்பிடும் Rape என்ற சொல்லிற்கு தமிழில் 'கற்பழிப்பு' என்ற பதமே வழக்கிலுள்ளது. 'கற்பழிப்பு' என்ற சொல்லைத் தவிர்க்கும் பெண்ணிலைவாதிகள் பயன்படுத்தும் 'பாலியல் பலாத்காரம்' என்ற சொல் rape இற்கான சரியான அர்த்தத்தைத் தருவதில்லை. இதற்கான ஒரு சொல்லைக் கண்டுபிடிப்பது அல்லது உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். இதற்கான பொருத்தமான சொல் இல்லாததால் இக் கட்டுரையில் 'றேப்' என்ற ஆங்கிலப் பதமே பாவிக்கப்படுகிறது. இது தொடர்பான வாசகர்களது அபிப்பிராயங்களை சரிநிகர் எதிர்பார்க்கிறது.**

**ஆ-ர்**

சில மாதங்களுக்கு முன்.
யுத்த ஆயுதங்களைத் தோளில் சுமந்தபடி சீருடை அணிந்த ஆண்கள் பெல்கிறேட் வீதிகளில் பெருமையுடன் நடந்து கொண்டிருந்தனர். வெட்கத்தின் காரணமாகச் சிலர் தமது சீருடைகளை ஏற்கனவே களைந்து விட்டிருந்தனர். தெருக்களில் நாம் சந்தித்த மற்றையவர்கள் இறந்த சடலங்களையும் 'றேப்' பண்ணப்பட்ட பெண்களையும் பின்னால் மறைத்து விட்டு எம்மைப் பார்த்துப் புன்னகைத்தனர்.

ஒரு ஆயுதபாணி, அவன் க்ரோஷியாவுக்காகவோ பொஸ்னியாவுக்காகவோ சேர்பியாவுக்காகவோ இந்தோ-சீனாவுக்காகவோ அல்லது உஸ்பெஸ்கிஸ்தானுக்காகவோ எதற்காகப் போரிட்டாலும் சரி, எல்லா விதங்களிலும் அவன் விடுதலைப் போராளியாகவோ ஆக்கிரமிப்பாளனாகவோ எப்படி இருந்த போதும் பெண்களை 'றேப்' பண்ணவே செய்கிறான்.

நாகரீகத்தின் அனைத்துக் கண்டுபிடிப்புக்களும் அவனை, அவனது துப்பாக்கியை ஏன் அவனது பாலியல் உறுப்பைக்கூட அவ்வாறு செய்யுமாறு ஊக்குவிப்பதாக அவன் 'உணர்கிறான். நீட்சே பிறகு ஹிட்லர் என்று எல்லோரும் தெளிவாகத் தெரிவித்ததெல்லாம் ''ஆண் போருக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பெண் புதிய படையாளை மீள் உருவாக்க வேண்டும்.'' இதுதான் உண்மை என்றால் இதைத்தான் தலைவர்கள் செய்கிறார்கள் என்றால் 'றேப்' என்பது யுத்தத்திற்கான விதிகளில் ஒன்றாகிவிடுகிறது. அதாவது இது ஒரு தனிநபருடைய நடவடிக்கை அல்ல; முழுப்படையினதும் கூட்டுப்பொறுப்பாகி விடுகிறது. ஒரு படையினன் கொலை செய்யும் போதும் ''றேப்'' பண்ணும் போதும் தனது தலைவரது நல்லாசிகள் எப்போதும் கிடைப்பதாக நம்புகிறான். அந்த உள்ளுணர்வு அவனை வாழ வைக்கிறது. ஆண்டவனிடமிருந்தும் அதற்கு அமைதியான அனுமதி கிடைப்பதாக அவன் சொல்கிறான்.

இது ஒரு மீளுருவாக்கல் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல; ஒருவனுடைய ஆற்றலை நிரூபிக்கிற 'உண்மையான ஆண்' கும்பலை திருப்திப்படுத்திக் கொள்வதுக்குமான ஒரு பிரச்சினையுமாகும். இந்த 'உண்மையான ஆண்' என்ற கருத்துருவத்தை உலக யுத்தத்திற்குப் பின்வந்த பெண்நிலைவாதிகள் ஒரு சமூகநாகரீகத்தின் கண்டுபிடிப்பெனக் கருதுவர். இது ஒரு சமூக உருவாக்கம். ஆகவே இது என்றென்றைக்கும் நிலையானதல்ல. அழித்து விடப்படக் கூடிய ஒரு நடத்தையாகும் என்றும் அவர்கள் கூறுவர். எப்படியோ எந்தக் கணத்திலும் படையினன் தான் எந்தப் பாலைச் சேர்ந்தவன் என்பதை மறந்து விடுவதில்லை. ஏனென்றால் அதுதான் துப்பாக்கியின் பால்; அதுதான் வெற்றி பெறுபவர்களின் குரல்; அதுதான் மரணத்தின் ஓலம்! அவனுடைய காதுகளுக்கு மரணமடையும் ஒரு பெண்ணின் ஓலமும், மரணமடையும் ஒரு ஆணின் ஓலமும் ஒரேவிதமான பெறுமதியுடையனவல்ல; ஒரே விதமான சத்தங்கள் ஒரே விதமானவையல்ல; ஆணும் பெண்ணும் வேறு யதார்த்தங்கள்.

ஆண் தலைமைப் படையினர் ''றேப்'' பண்ண உத்தரவிடுகின்றனர். படையினனுக்கு அவன் தனது சிறுபராயத்தில் தனது சகோதரியுடன் மைதானத்தில் விளையாடித் திரிந்ததன் காரணமாகவோ அல்லது அவனது அம்மாவின் மீது அவன் கொண்ட அன்பு காரணமாகவோ இவ்வுத்தரவு குறித்து ஏதாவது சந்தேகங்கள் ஏற்படுமானால் இருக்கவே இருக்கிறார்கள் அவனது சகாக்கள். அவனைத் தட்டி நிமிர்த்திட.

யுத்தம் என்பது வேறு. அதன் முதலாவது விதி எதிரியின் பெண்களை ''றேப்' பண்ணு' என்பதாகும். அவமானப்படுத்துவதனூடாகவும், எதிரியின் சொத்துக்களை அழிப்பதனூடாகவும் படையினனின் ஆற்றல் நிரூபிக்கப்படுகிறது என்றால் அது உறுதிப்படுத்தப்படுவதோ படையினரின் 'ஆண்மைத் தன்மை'யாலும் அவனது ஆட்களின் மேலாதிக்கத்தாலுமேயாகும். அவனுக்கு முன்னுள்ள ஒவ்வொருவரும் இதையே செய்துள்ளார்கள். முடிவில் 'றேப்' என்பது எதிர்ப்பால் உறவுச் சமூகத்தில் மிகச் சாதாரணமான ஒன்றாகும். படையினன் இந்த இயக்கத்தின் ஒரு உறுப்பு மட்டுமே.

எதிரியின் பெண்கள் அவனுக்குக் கிடைக்காத போதோ அல்லது எல்லோரும் ஒரே மொழி பேசுகிறவர்களைக் கொண்ட ஓரிடத்தில் அவன் யுத்தம் புரிவதாக இருந்தாலோ அவனுடைய தாக்குதல் ஏதாவது ஒரு தேசிய இனத்தின் மீதானதாக இருக்கும். இந்த ஆண்டின் யூன் மாதத்தில் 'கிறீன் பரேற்'ஐச் சேர்ந்த (ஒரு முஸ்லீம் பரா இராணுவம்) படையினன் ஒருவன் தொலைக் காட்சியில் இவ்வாறு பேசினான்: ''பஸ் நிறைய பெண்களை ஏற்றிச் சென்று படையினருக்கு வழங்கும் ஒவ்வொரு தடவையும் எனக்கு இருநூறு டொச் மார்க்குகள் கிடைக்கும். சேர்பியப் பெண்களால் பஸ்ஸை நிறைக்க முடியாவிடின் முஸ்லீம் அல்லது க்ரோஷியர்களினத்தைச் சேர்ந்த பெண்களை ஏற்றிச் செல்லலாம்'' இதிலுள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், அவர்கள் பெண்கள்; பஸ் நிறைந்திருந்தது; அவனுக்கு இருநூறு டொச் மார்க்குகள் கிடைத்தன என்பதே!

1991 டிசம்பர் மாதத்தில் ஒரு பெடரல் இராணுவத்தான் இப்படிக் கூறினான்: ''எனக்கு ஞாபகமாக இருப்பதெல்லாம் நான் இருபதாவது ஆளாகவே போனேன். அவளது தலைமுடி அசிங்கமாக இருந்தது; அவள் நாற்றம் எடுப்பவளாயும் விந்துத் துளிகளால் குளிப்பாட்டப்பட்டவளாகவும் இருந்தாள்.... அவளை நான் இறுதியாக கொன்று போட்டேன் என்பவைகளே!

நாலு குண்டுகள் அவளது வயிற்றில். உலகத்தில் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. அவனை உலகின் எந்த நீதிமன்றமும் விசாரிக்க முற்படவில்லை! அவனது உள்ளார்ந்த கொடுமைகள் இந்த உலகின் உயர் விழுமியங்களின் வார்த்தைகட்கு அப்பாற்பட்டது.

யுத்தத்தில் கொல்லப்படும் ஆண்களுக்கு சிறப்பு மதிப்புகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் வீரத் தியாகிகளாக மரணிக்கின்றார்கள். அவர்கள் 'முகம் தெரியா வீரத் தியாகிகளுக்கான' நிகழ்ச்சிகளில் நினைவு கூரப்படுகின்றார்கள்-அவர்களில் எவரும் நூறு தடவைக்கு மேல் பெண்களை 'றேப்' செய்திருந்தாலும் கூட.

'றேப்' பண்ணப்பட்டு கொல்லப்பட்டவர்கள் வீரத் தியாகிகளாக (Heroines) கொள்ளப்படுவதில்லை. அவர்களுக்கு எந்த நினைவுகூரல்களும் கிடையாது. அவர்கள் தியாகிகளாகத் தெரிவது உலகை பெண்ணிலை நோக்கில் பார்க்கும் எங்களுக்கு மட்டுமே!; வேறு யாருக்குமல்ல.

பல லட்சக்கணக்கான பெண்கள் க்ரோஷியாவிலும் பொஸ்னியாவிலும் 'றேப்' பண்ணப்பட்டுள்ளனர். பலர் பலதடவைகள் 'றேப்' பண்ணப்பட்ட பின் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் எந்த வயதைச் சேர்ந்தவர்களாயினும் சரி, எந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி. ஆனால் யுத்தப் புள்ளிவிபரவியலாளர்களிடம் இவள் குறித்த எந்தப் பதிவுகளும் கிடையாது. பலர் இன்னமும் கட்டாய விபச்சாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சரஜிவோவிலும் மற்றும் நகர்ப்புறங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் ஹொட்டேல்களிலும் இது மிகச் சாதாரணம். இவர்களில் யாராவது தப்பிப் பிழைத்திருந்தால், அவள் எப்படித் தப்பிப் பிழைத்தாள், எப்படி அவள் துன்புறுத்தப்பட்டாள், எவ்வாறு அவள் ஒரு பாலியல் அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டாள், அவளது வாழ்க்கை நிலைமைகள் எவ்வாறு மாற்றப்பட முடியாதவையாக உள்ளன என்பவை பற்றி எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளுடைய கௌரவத்திற்கு என்ன நடக்கப் போகிறது? அவளுடைய சிதைக்கப்பட்ட உள்ளுணர்வுகளுக்கு என்ன நடக்கப் போகிறது? அவள் தன்னைத் தாக்குபவர்களது பல்லிளிப்புகளை காலமெலாம் சகித்துக் கொண்டு வாழமுடியுமா?

இன்று காலை நெஸ்மிகாட்யோவாவைச் சேர்ந்த அவன் திரும்பவும் சீருடைக்குள் புகுந்து கொள்கிறான். கண்ணாடியில் அவனது பிம்பம் இன்னமும் பெரிதாக காட்டப்படுகிறது. மக்கள் நியாயப்படுத்துவதற்காக புதிய வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.



## பெண்களின் மறைக்கப்பட்ட வரலாறு

வியட்னாம் யுத்தத்திற்குப் பிறகு பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வெளித்தெரியாத சான்றுகளை பெண்ணிலைவாத ஆய்வாளர்கள் ஆராயத் தொடங்கினார்கள். பெண்ணிலைவாத வரலாற்றாசிரியர்களும் கூட வரலாற்றுச் சான்றுகளை நாகரீக காலத்திற்குப் பிந்திய எல்லா யுத்தங்களிலும் பெண்கள் எவ்வாறு 'றேப்' பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக மீளப்படிக்கத் தொடங்கினார்கள்.

'வெற்றி பெற்றவன் அழிவுகளைச் சொந்தமாக்கிக் கொள்கிறான்' என்பது ஒரு கிரேக்க முதுமொழி. கிரேக்கப் போர்வீரர்களுக்கு ஒவ்வொரு யுத்தத்தின் பின்பும் வழங்கப்படும் பரிசாக பெண்களே இருந்து வந்திருக்கின்றனர். இங்கெல்லாம் உண்மையில் 'றேப்'பையும் விபச்சாரத்தையும் பிரித்தறிவது மிகக் கடினமாக இருப்பதை நாம் காண்கிறோம். உடல் ரீதியான பலத்தின் மூலமோ அல்லது பண ரீதியான பலத்தின் மூலமோ- பெண்கள் மீதான படையினரின் இராணுவ ரீதியான கோட்பாடு இதுவாகும்.

இங்கிலாந்துக்கும் பிரான்ஸ்க்குமான நூற்றாண்டுகால யுத்தத்தின் போதும் ஆறாம் நூற்றாண்டுகால ரோமானிய யுத்தத்தின் போதும் ஒவ்வொரு ஆங்கில மன்னர்களின் ஆட்சியின் போதும் ஆபிரிக்க சுதந்திர யுத்தங்களின் போதும் 'றேப்'புக்கள் நடந்துள்ளமை பற்றி தகவல்கள் பதியப்பட்டுள்ளன.

1942 ஜனவரியில் சோவியத் வெளிநாட்டு அமைச்சர் மொலட்டோவ் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் இரண்டு பக்கங்கள் பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிக் கூறுகின்றன; 'உக்ரேன் கிராமமான பொரோடாயெவ்ஸ்காவில் உள்ள ஒவ்வொரு பெண்ணையும் பாசிஸ்டுக்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கினார்கள். பெரசோவ்ஸ்கா பிரதேசத்தின் குடிகார ஜேர்மனியப் படையினர் 16வயதுக்கும் 30வயதுக்கும் இடைப்பட்ட அனைத்துப் பெண்களையும் அடித்துப் பலவந்தமாக தூக்கிச் சென்றார்கள்.

மறுபுறத்தில் அலெக்சாந்தர் ஸொல்சென் நைட்சின் தனது புத்தகமான 'குலாக் ஆச்சிபெலாகோ'வில் இவ்வாறு கூறுகிறார்: 'ஆம்! மூன்று வாரங்களாக ஜேர்மனிக்குள் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் அங்குள்ள பெண்கள் அனைவரும் ஜேர்மனியப் பெண்கள் எனவும் அவர்கள் யாரையும் 'றேப்' பண்ணி விட்டுக் கொன்று விடலாம் என்பதையும் நாம் அறிந்திருந்தோம்'. இது கிட்டத்தட்ட எமது யுத்தத்தின் அதி விஷேட அம்சமாக இருந்தது.

1992இல் பேர்லினில் நடந்த திரைப்படக் கண்காட்சி ஒன்றில் பெண்ணிலைவாத நெறியாளரான 'ஹெல்கா சாந்தாஸ்'இனால் வெளியிடப்பட்ட விபரணத் திரைப்படம் ஒன்று போலந்திலும் கிழக்கு ஜேர்மனியிலும் செம்படையினரால் இரண்டு மில்லியன் பெண்கள் 'றேப்' பண்ணப்பட்டமையைச் சித்திரிக்கிறது. கமெரா ஒரு வயதான பெண்மணியை மையப்படுத்திக் காட்டுகிறது. அவள் 15 அல்லது 16 வயதாக இருந்தபோது நூறுக்கு மேற்பட்ட தடவைகள் 'றேப்' பண்ணப்பட்டதை அது காட்டுகிறது.

ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் இடையில் 1930-40 வரை நடந்த யுத்தத்தில் பாலியல் அடிமைகளாக பசுபிக் தீவுகளுக்கு பலவந்தமாக கடத்தப்பட்ட ஒரு லட்சம் பெண்களை திருப்பி அழைக்குமாறு கொரியாவிலுள்ள ஒரு பெண்களின் குழு கோரியுள்ளது. அவர்கள் கடத்தப்பட்ட போது பெரும்பாலான பெண்கள் 16-18 வயதை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமது குடும்பங்களைச் சென்றடைய ஒரு போதும் அதற்கிடையில் அனுமதிக்கப்படவில்லை. படையினருடன் ஒருநாளைக்கு பதினைந்து தடவைகளாவது உடலுறவு கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டதாக அப் பெண்கள் கூறுகின்றனர்.

1990இல் ஈராக்கியப் படைகள் குவைத்தை ஆக்கிரமித்த போது வயது வேறுபாடின்றி குவைத் பெண்களை 'றேப்' பண்ணினார்கள். குவைத்தில் கருச்சிதைவுத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதால் இவர்களில் பெரும்பான்மையோர் குழந்தை பெறவேண்டியிருந்தது. பிறந்த பின் இக் குழந்தைகள் குவைத்தியர்களால் கொல்லப்பட்டன. 'இவர்கள் எதிரியின் குழந்தைகள்-'றேப்' பண்ணப்பட்டதால் பிறந்தவர்கள் அல்ல' இப் பெண்கள் தங்களுடைய சாதாரண வாழ்க்கையைத் தொடர முடியாமல் போய்விட்டது. அனேகமாக இவர்கள் விபச்சாரத்திற்குப் போக வேண்டியுள்ளது. ஒன்றில் தற்கொலை அல்லது சுயஅழிப்பு.

→11



சிங்கள மூலம்:
தயாசேன குணசிங்க.

மொழியாக்கம்:
மொகமட் ராசூக்

அவன் நினைத்தது போன்று அன்றைய இரவு மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது. அந்தி நேரம் தொட்டு ஆகாயம் பூராவும் பரவ ஆரம்பித்த சாம்பலும் கறுப்பு நிறமும் கலந்த மேகக் கூட்டம் அழுக்கு நிறம் கொண்ட ஒரு தட்டினைப் போன்று நீல நிறவானத்தின் ஒரு துளிகூட கண்களில் படாதவாறு நாற்திசைகளிலும் பரவ ஆரம்பித்தது. சந்திரனோ நட்சத்திரங்களோ என்ன, நம்பிக்கை ஒளியின் சாயலேனும் எங்கும் தென்படுவதற்கில்லை. அது ஆண்டவன் உலாவும் இரவன்றி பித்துப்பிடித்து அலையும் பயங்கரப் பிசாசுகளின் இரவாகக் காட்சி தந்தது.

இருள்படர ஆரம்பித்த நேரம்தொட்டு வீட்டுக்குப் பின்னாலுள்ள காட்டு வாழை மரப் பூவில் தொங்கி பாணி உறியும் வெளவால் வழுக்கிக் கீழே சரியும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அசைக்கும் ''சலசல'' என்ற சிறகின் ஓசை சூழலில் ஏற்படுத்துவது அசுபமான ஒரு பயங்கரத் தன்மையினையாகும். பாதி வேலை முடிந்த வீட்டின் ஒரு கதவினைத் திறந்து கொண்டு தாழ்வோரத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் அவனுக்கு இந்த இருளோடு இணைந்து திரியும் விபத்தும் அச்சமும் கண்களுக்குத் தென்படாவிட்டாலும் மனதுக்கு உணர்த்துகின்றது.

''இன்னும் தாழ்வோரத்திலா....? கதவை மூடிவிட்டு உள்ளே வாருங்களேன். இதுபோல இரவில் வெளியே தனியாக இருப்பது நல்லதல்ல ஆண்டவனே!''

மனைவியின் முணுகலான குரல் அவனுக்கு மெதுவாகக் கேட்டது. அவளது சிங்கள உச்சரிப்பில் பூரணமாகாத தன்மை இன்னும் கொஞ்சம் தொனித்தது.

முழங்காலில் வைத்திருந்த அவனது புறங்கையில் ஒரு சொட்டு மழைத்துளி விழுந்து. நரம்பின் வழியாகக் கீழே வடிந்தது. கொஞ்ச நேரம் சூழழுக்குச் செவிமடுத்திருந்த அவன் சட்டென்று எழுந்து கதவைச் தாழ்த்தி தாழ்ப்பாள் போட்டுக் கொண்டான். எண்ணிலடங்காக் கொடூரத்தன்மைகள் நிறைந்த சில சக்திகள் அந்தப் பயங்கரமான இரவின்போது ஒரு கிடாரத்தில் கொதித்துக் கொதித்துப் பொங்கி வடிய எத்தனிக்கும் எண்ணையைப் போன்று மனதுக்கு உணர்த்துகின்றது. எமனை முன்னிட்டுக் கொண்டு வரும் இந்தப் பொல்லாத சக்திகளை இந்தக் கதவினால் தடுத்து நிறுத்த முடியுமா? தாழ்த்தப்பட்ட கதவினைச் சற்று நேரம் உற்று நோக்கிய அவன் வீட்டினுள் நடந்தான்.

கண்களில் படும் தூரத்திலுள்ள ''ஹைலெவல்'' றோட்டில் ''ஓ'' வென்ற பேரிரைச்சலோடு பாரமான வாகனங்கள் பல ஒன்றாகப் போவது கேட்கின்றது. மாலை நேரம் தொட்டு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் இராணுவ வாகனங்களைத் தவிர வேறெந்த வாகனமும் அங்கு சென்றிருக்க முடியாது. கால்சத்தம் கேட்காமல் மெதுவாக அறைக்குள் சென்ற அவன் கட்டிலில் படுத்திருந்த குழந்தையையும் மனைவியையும் நோக்கியது பார்வையினாலேனும் அவர்களது தூக்கத்திற்குச் சங்கடங்கள் ஏற்படும் என்ற அச்சத்தோடு மூன்று நாள் வயதான மகனை அனைத்துக் கொண்டு மனைவி கட்டிலில் சாய்ந்திருந்தாள். மேசை மீது எறியும் தேங்காய் எண்ணை விளக்கின் கதிர்கள் இருவரினதும் முகங்களினும் இலேசாகப் பரவி இருந்தது.

கட்டிலில் அமர்ந்து கொண்ட அவன் மனைவியையும் குழந்தையையும் ஒன்றாகச் சேர்த்து அனைத்துக் கொண்டான். மனைவி கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் தூங்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டான். குழந்தை தூக்கத்திற்குள்ளேயே கைகளை நீட்டி சோம்பலை முறித்துவிட்டுச் சுகமாகப் புரண்டு படுத்துக் கொண்டது. முன் எப்போதும் அனுபவித்திராத ஒரு பாசத்தினால் அவனது உள்ளம் நிறைந்தது. அந்த இருவரையும் இறுக அனைத்துக் கொண்ட தனது கைகள் இந்தப் பயங்கர இரவு முடியும் வரை அவர்களுக்குச் சக்தி வாய்ந்த ஒரு வேலியாகாதா? என அவன் நினைத்துக் கொண்டான்.

''லட்சுமீ...தூங்கிரியா.....?'' காதுகளுக்குக் கேட்கும், கேட்காத அளவு மெதுவாக அவன் பேசினான்.

''இல்லீங்க தூக்கம் வர்ருதே இல்ல....... அவள் கூறினாள். அது ஏன் என அவன் வினாவவில்லை. விடை இல்லாத அந்தக் கேள்விக்குப் பதிலாக அவனிடமிருந்து வெளியானது காலம் பூராவும் எதிரொலிக்கக் கூடிய நீண்டதொரு பெருமூச்சாகும். பெற்றோரையும் சொந்தங்களையும், பிறந்த நாள் தொட்டுப் பழக்கமான பிறந்த ஊரையும் கடந்தகாலங்களையும் புறக்கணித்து விட்டு தன்னோடு வந்த இந்தப் பெண்ணுக்கு ஆறுதல் வழங்க முடியாத தன்னைப் பற்றி நினைத்து மனதினுள் அழுதான். அமைதி இல்லாத உள்ளத்தினால் இன்னொரு உள்ளத்தினுள் அமைதியை ஏற்படுத்த முடியுமா?

அவன் எதுவுமே பேசாது அவளது முகத்தை வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தான். மூன்று தினங்களுக்கு முன்பு அவள் அனுபவித்த தாங்க முடியாத வேதனையின் சாயல் அவள் முகத்திலிருந்து இன்னும் மறைந்திருக்கவில்லை. ஒரு பெண் குழந்தையொன்றினைப் பெற்றெடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மீண்டும் மீண்டும் ஏற்படுவது பூமி உருவாகும் போது ஏற்படும் அதே காரணங்களாக இருக்க வேண்டும் என அவன் நினைத்தான். நினைவுலகில் வாழும் அவனுக்கு அந்த உணர்வுகளினூடே தான் நித்தமும் உலாவும் ஆகாயத்தில் சஞ்சரிக்கச் சந்தர்ப்பம் இருந்தாலும் தற்போதைய சிந்தனை அவன் பூமியில் தள்ளியது.

''தனித்தனியாக இருக்குமட்டும் எந்த மனிதனும் நல்லவன் தான். ஒன்றாகச் சேர்ந்தால் எல்லோரும் மிருகங்கள். நல்லது கெட்டது தெரியாது. ஆண்டவன் பக்தன் இல்லை. பச்சையான மிருகங்கள்'' சென்ற மூன்று தினங்களுக்கு முன்பு தன்னையும் மனைவியையும் குழந்தையையும் வீட்டில் விட்டுச் சென்ற டாக்சிச் சாரதியின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தது. டாக்சி சாரதிகளின் சம்பிரதாய குணஇயல்புகளுக்கு எந்த விதத்திலும் பொருந்தாதவனாக அவன் மிகவும் நல்லவனாக இருந்தான் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரவுள்ள நேரத்திற்கு முன்பு சேதவத்தைக்குச் செல்ல வேண்டி இருந்தாலும் தாயினதும் குழந்தையினதும் நலன் கருதி குலுங்காமல்வாகனத்தைச் செலுத்தினான்.

''நகரத்துக்குப் போனாலும் நாங்க கிராமத்திலிருந்த வந்தவங்க மாத்தையா எனக்கு ஒரு தாய் இருந்தாங்க.........ராக்ஸி சாரதி மீண்டும் பேசியது தனது செயலை மேலும் விபரிப்பதாக இருந்தது.

''எனக்குத் தெரியும் பிள்ளை பெற்ற தாய்க்கு உள்ள சாத்து பக்குவமும் இலை குளிப்பாட்டு வாங்க. வேப்பெண்ணை புகை பிடிப்பாங்க. இடிகாயம் கொடுப்பாங்க. எதைச் செய்ய மாட்டாங்க ஆயிரம் சாத்துக்கள். இந்த ரவுனில எப்படி இவைகளைச் செய்ய முடியும்? எதுக்கும் வேப்பெண்ணை புகை கொஞ்சம் பிடியுங்க. அது தாய்க்கும் குழந்தைக்கும் நல்லது....சிறிது இடைவெளிக்குப் பின்பு டாக்சிச் சாரதி மீண்டும் சொன்னான். அவனது வாழ்க்கையோடு சந்தர்ப்ப வசத்தால் நெருங்கிய அந்தச் சாரதி அவனிடமிருந்து பிரிந்து சென்றது மீண்டும் சந்திக்கும் நோக்கில் இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும் தன்னோடு இருந்த அரை மணிக்கும் குறைவான அந்தச் சிறிய நேரத்தில் அர்த்தமுள்ள எதனையோ தன்னிடம் விட்டுச் சென்றான் அல்லவா என அவன் சிந்தித்தான்.

தாறுமாறாக வீசியடிக்கும் நீண்டவொரு சவுக்கினைப் போன்று பயங்கரமாக மின் வெட்டுகின்றது. வானம் குமுறுவது சவுக்கடிகளினால் வெருண்ட பயங்கரப் புலியினைப் போன்று இருந்தது. அடிக்கடி வெட்டும் மின்னல் ஜன்னல் கண்ணாடிக் கதவுகளில் நெருப்பைக் கொண்டு வந்து குவிக்கின்றது.

கரிய் மேகத்தின் வயிறு கிழிந்து பலத்த மழை கொட்டுவதற்கு ஆயத்தமாகும் வேலையில் அந்தக் கூட்டம் வீட்டருகே வந்தனர். இரத்தப் பிசாசு மொய்த்திருந்த அந்தக் கூட்டத்தினருள் முப்பது அல்லது நாற்பது பேர் இருப்பார்கள் என கூச்சலினால் உணர்ந்து கொண்டான்.

''ஒய் மத்தயா...! உம்மோடு எங்களுக்குக் கோபம் இல்லை. நீர் எங்க ஆள். ஆனால் உம்முடைய பெண்டாட்டி எங்கட ஆள் இல்ல. அவளை வெளியில் விடும்.

''ஆமாம். எங்களை கெட்டவங்க என்று சொல்லக் கூடாது. அவளை வெளியில் விடும்''

''அவசரப் படுத்தும் ஒய் எங்களுக்கு இன்னும் வேலை இருக்கு அவளை வெளியே விடும்.''

''மிருகங்கள் கேடுகெட்ட நாய்கள். அவனது உடம்பின் இரத்த ஒட்டம் இருபுரங்களையும் உடைத்துக் கொண்டு பாயும் ஆற்று வெள்ளத்தைப் போன்றானது. வானம் பூமி அதிரும் கொடுமை இது. உடன் மனைவியையும் குழந்தையையும் விட்டெழுந்த அவன் ஆத்திரத்தோடு பக்கத்து மூலையில் இருந்த கோடாறியைத் தூக்கியது சிலரைக் கொன்று விட்டுத் தானும் சாவதற்கு.

இந்த உலகவாழ்க்கையின்போது யுத்தங்கள் போன்ற பல முடிவில்லாத சமுதாயப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த மரணத்தைச் சந்திக்கும் அளவுக்கு பயிற்றப்பட்டிருந்தனாலோ என்னவோ பயந்தோடும் எண்ணம் துளிகூட மனதில் ஏற்படவில்லை. இருந்தாலும் மனைவியின் வற்புறுத்தலுக்கு முன்னமே தூக்கிய காலினை முன்னே வைக்காது இருந்த இடத்திலேயே நின்று கொண்டான். பின்னர் தனது பிஞ்சுக் குழந்தையை எடுத்து மார்போடு இறுக அனைத்துக் கொண்ட அவன் கொள்ளைப் புற வாயிலாக இருட்டோடு சேர்ந்து கொண்டான்.

''அடேய்... இந்த நாட்டில் எங்க பெண்கள் இல்லையடா உனக்கு...? ஒரு தமிழ்ப் பெண்ணா கிடைச்சுது... ஹு...அந்தக் கூக்கூரலோடு முன்புறக் கதவு தகர்க்கப்படுவது கேட்டது.

சில சந்தர்ப்பங்களில் தனது வீட்டுக்கு வந்து மனைவிக்கு உதவியாக இருந்து சிலவுக்கு இரண்டு மூன்று ரூபாய் பெற்றுப் செல்லும் ஜேன் அக்காவின் குடிசையினுள் எரியும் குப்பி விளக்கின் மங்கலான ஒளி ஓலைச்சுவாரங்களினூடே மின்மினிப் பூச்சிகளைப் போன்று தூரத்துக்குத் தெரிந்தது. அது ஆத்திரத்தோடு பொங்கும் எண்ணக்கடலில் மத்தியிலுள்ள ஒரு கற்பாறையின் மீது திசை விலகிப் பரிதவித்து நிற்கும் அவனுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாயிருந்தது.

''ஆண்டவனே....இது எங்க மத்தயா அல்லவா? ஏனய்யா இந்த இருட்டோடு? ஒலைக் கதவை அகற்றிப்பார்த்த ஜேன் அக்கா பதற்றத்தோடு கேட்டாள். அவன் கையிலிருந்த குழந்தையையும் மனைவியையும் பின்பு கண்டாள்.

''அய்யோ அம்மா... தன்னையறியாமலேயே அவளது உதடுகள் பேசின. அதிர்ச்சியிலிருந்து நொடியில் விடுபட்ட அவள்.

''உள்ளே வாங்க ஆண்டவனே உள்ளே வாங்க. தூறலுக்கு குழந்தை நடுங்குது.....'' குழந்தையை வாரி எடுத்து மீண்டும் பேசினாள்.

''அப்படி யெண்டா...நாய்கள் அங்கேயும் வந்தாங்களா....? அவளது கண்கள் சிவந்திருந்தது. பிள்ளையைத் தந்தையின் கையில் கொடுத்த ஜேன் அக்கா காய்ந்த மட்டைக் கொண்டு நெருப்பூற்றி குளிர்காய்வதற்கு மனைவியின் முன் ஒட்டைக் கொண்டு வந்து வைத்தாள்.

''இந்த மாடின் எங்க போனானோ தெரியாது. அவன் கெட்டவனல்ல. இருந்தாலும் சாராயத்த ஊத்திக் கொண்டா.......என்று கோப்பி ஊற்றிய வண்ணப் பேசினாள். ''மத்தயாட முகமே தான் '' என்றவாறு குழந்தையை அவனிடமிருந்து எடுத்துத் தாயிடம் கொடுத்து விட்டு ஒரு கம்பளத்தைக் கொண்டு வந்து குழந்தையைப் போர்த்தினாள். பின்பு அடுப்போரம் சாத்தியிருந்த பலாக்காய் வெட்டும் கத்தியைக் கையிலெடுத்துப் பக்கத்திலிருந்த ஒரு கம்பியை இழுத்து வாசலில் போட்டு அமர்ந்து கொண்டு.

''வரட்டும் நாய்கள் இந்தப் பக்கமாக வரட்டும்........'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள். ஜேன் அக்காவின் இந்தச் செயலை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு ஆயிரம் கஷ்டங்களுக்கு மத்தியில் கட்டி எழுப்பிய தனது வீடு வெடித்து வெடித்து நெருப்பில் எறியும் சப்தம் கேட்காமல் சென்றது.


---

## அடக்குதலும் ஒடுக்குதலும்

ஒரு
கருவூலத்தை எழுத
என் கை நடுங்குகிறது

தெருவோரங்களின் ஓலங்கள்
துவக்குகளினால் ஊமையாக்கப்படுவ
-தையும்
உள்வாங்கி எழுத
என் கை நடுங்குகிறது

பத்திரிகைச் செய்திகளைக் கூட
சிநேகிதத்திடத்தில் பகிர்ந்து கொள்ள
என் நாவு நடுங்குகிறது.



வீட்டில் கட்டிய உறியில்
வெண்ணெய் திருடும்
பூனையைக் கூட
விரட்டியடிப்பதற்கு
என் கை நடுங்குகிறது

வீட்டு வளவுக்குள்
குந்தி -எழும்பி
படுத்து -நிமிர்ந்து
துள்ளி -ஓடி,
கையை நீட்டி -மடக்கி,
யோகாசனம் செய்யவும்
என் கை நடுங்குகிறது.

ஒரு மூலையில் குந்தியிருந்து
ஒரு கருவூலத்தை எழுதவும்
என் கை நடுங்குகிறது.

- கதீர்

## தாலி அறுத்த தேசம்

இரவுகள்-
இப்போது இல்லை
மனிதக் கண்கள்
தினமும்
விழித்துக் கொண்டிருக்கின்றன

வானம்-
அகதியாய் கிடக்கிறது
நிலவும் இல்லை
நட்சத்திரங்களையும்
காணவுமில்லை

பூமரத்துக்குள்ளும்
இனப் போர்
அதனால்
பூக்களில்
மணமும் இல்லை
குணமும் இல்லை

நெருப்புக் காற்றும்
குண்டு மழையும்
அடிக்கடி-
மண்ணின் மேனியை
குளிப்பாட்டிக் கொள்கிறது

ஆயுத வாடை
காற்றில் கலப்பதால்
★இரண மலக்குகளும்
மண்ணில்
இறங்க மறுக்கிறார்கள்

தேசம்
ஒரு விதவைப் பெண்ணைப் போல்
தாலி அறுத்து திரிகிறது.

★-உணவு

முகமட் அபார்

நன்றி - நூலகத்திட்டம்

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும்: 2

# கோல்புறூக் திட்டம்: காலனித்துவ ஆட்சிக்கான பயிற்றுவிப்பே!

-செம்பாட்டான்.

1

இலங்கையின் அரசியல் திட்ட வரலாறு கோல்புறுக் சீர்திருத்தம் என அழைக்கப்படும் அரசியல் திட்டத்துடனேயே ஆரம்பமாகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கை பிரித்தானிய காலனித்துவ நாட்டுக்கு ஏற்றவகையில் மாறுவதற்கான சமூக பொருளாதார மாற்றங்கள் அனைத்தும் நடைமுறைக்கு வந்தன.

## கோல்புறூக் திட்டத்தின் பின்னணி

பிரித்தானியர்கள் 1796இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர். இக் கைப்பற்றலுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்ற போதும், பாதுகாப்பு, வர்த்தகம் என்பனவே முக்கியமானவையாக கூறப்படுகின்றன.

பிரித்தானியரால் ஏற்கனவே கைப்பற்றப்பட்டிருந்த பெருமளவு மூலவளங்களையும் சந்தைவாய்ப்பையும் கொண்டிருந்த இந்தியாவை பாதுகாப்பது என்பது இலங்கையைக் கைப்பற்றுவதற்கான பிரதான காரணியாகத் தொழிற்பட்டது எனலாம். பிரித்தானியாவின் வல்லரசாட்சிக்கு பிரதான பொருளாதார மூலமாக விளங்கிய இந்தியப் பேரரசை பாதுகாப்பது அவர்களுக்கு இன்றியமையாததாக இருநததில வியப்பில்லை. இதனால் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் இந்தியாவிலிருந்து 18மைல் தொலைவில் இருந்த இலங்கையை இந்தியப் பாதுகாப்புக்காக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பாதுகாப்பு விடயத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை உணர்த்திய முக்கியமான விடயம் இலங்கையில் அமைந்திருந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகமாகும். பல போர்க்கப்பல்கள் மறைந்திருந்து தாக்கக்கூடியளவுக்கு இயற்கையாகவே அமைந்திருந்த இத் துறைமுகம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கிய துறைமுகம் ஆகும். இந்தியாவைப் பாதுகாப்பதற்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது செல்வாக்கின் கீழ் வைத்திருப்பதற்கும் இத் துறைமுகம் இன்றியமையாததாக இருந்தது. (இவர்கள் கருதியதைப்போலவே பின்னர் முதலாம் உலகமகா யுத்தத்திலும் இரண்டாம் உலக மகா யுத்தத்திலும் பிரித்தானியரின் முக்கிய போர்த் துறைமுகமாக இத் துறைமுகவே விளங்கியிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பான் இதன் மீது குண்டுகளையும் வீசியிருந்தது.)

இதுதவிர வர்த்தக வாய்ப்புகளுக்கான காரணியாக இலங்கையின் கேந்திரஸ்தானம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. இலங்கை தூரகிழக்கு நாடுகளுக்கான போக்குவரத்துப் பாதையில் கேந்திர நிலையத்தில் இருந்தமையினால் இலங்கையைக் கைப்பற்றுவதன் மூலம் தூரகிழக்கிற்கான வர்த்தக போக்குவரத்துப் பாதையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதை அவர்கள் அறிந்திருந்தனர். கைத்தொழில் புரட்சியின் மூலம் பாரிய உற்பத்தியில் ஈடுபட்ட பிரித்தானியாவுக்குத் தனது உற்பத்திப் பண்டங்களைக் கொண்டு செல்வதற்கும், தூரகிழக்கு நாடுகளுடனான தனது வர்த்தகத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கும் இப் போக்குவரத்துப் பாதை மிக அவசியமானதாக இருந்தது.

கைப்பற்றலுக்கான வர்த்தகக் காரணிகளுள் இன்னொன்று ஒல்லாந்தரிடமிருந்த கறுவா, கராம்பு, யானைத்தந்த வர்த்தகத்தைக் கைப்பற்றுதலாகும். இது அதிக அளவில் முக்கியத்துவமுடைய ஒன்றாக இல்லாவிட்டாலும் பிரித்தானியர் இதனையும் கவனத்தில் கொண்டிருந்தனர். 1796இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினாலும் 1802ம் ஆண்டு வரை இலங்கையில் இரட்டையாட்சியையே ஏற்படுத்தினர். இதன்படி வருமானம், வர்த்தகம் போன்றவற்றுக்குப் பிரித்தானியாவின் கிழக்கிந்திய வர்த்தக கம்பனி பொறுப்பாக இருந்தது. பாதுகாப்பிற்கு பிரித்தானிய மன்னாரால் நியமிக்கப்பட்ட ஆள்பதி பொறுப்பாக இருந்தார். 1802ம் ஆண்டு இலங்கை பிரித்தானியப் பேரசின் முழுமையான குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது. இலங்கையின் அனைத்து நிர்வாக விடயங்களும் பிரித்தானிய மன்னரால் நியமிக்கப்பட்ட ஆள்பதியின் பொறுப்பில் விடப்பட்டது. இவ்வாறு முழுமையாகக் கொண்டு வருவதற்கு ஏற்கனவே இந்தியாவில் சில பகுதிகளைக் கைப்பற்றியிருந்த பிரான்ஸ் இந்தியாவை ஆக்கிரமிக்கலாம் என்ற அச்சமும் ஒரு காரணமாக இருந்தது. பிரான்ஸ் ஏற்கனவே எகிப்து மீது படையெடுத்தமை அவ்வச்சத்தை மேலும் தூண்டியிருந்தது.

## கண்டி கைப்பற்றப்படல்

பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினாலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தரைப் போலவே இவர்களாலும் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியவில்லை. இக் கண்டி இராச்சியம் இன்றைய மத்திய மாகாணம், ஊவா மாகாணம், வட மத்திய மாகாணம் என்பவற்றை உள்ளடக்கியிருந்ததோடு கிழக்கு மாகாணத்தின் ஒருசில பகுதிகளையும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது. அத்தோடு இலங்கையில் விளையும் பிரதான வர்த்தகப் பொருட்களான கறுவா, ஏலம், கராம்பு, பாக்கு போன்றவற்றையும் அதிக அளவில் உற்பத்தி செய்யும் பிரதேசமாகவும் விளங்கியது.

இதனால் இலங்கையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமாயினும், வர்த்தக ஆதிக்கத்தைப் பெற வேண்டுமாயினும் கண்டியைக் கைப்பற்றுவது பிரித்தானியருக்கு அவசியமாக இருந்தது. இவ் அவசியத்தின் பொருட்டு 1803இல் இவர்கள் கண்டி மீது படையெடுத்தனர். எனினும் இப் படையெடுப்பு படுதோல்வியில் முடிந்தது. படைவீரர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர்கள் அனைவரும் கண்டியப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

சூரியனே அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராச்சியத்தின் வல்லரசுப் படை கண்டியப் படையால் தோற்கடிக்கப்பட்டமை பிரித்தானியர்களை அவமானமடையச் செய்தது. அவர்கள் சூழ்ச்சியில் இறங்கத் தொடங்கினார்கள். கண்டியில் பிரதானிகளுக்கும் அரசனுக்கும் இடையில் காணப்படும் முரண்பாட்டை இதற்கு நன்கு பயன்படுத்தினார்கள். ஈற்றில் 19வருடங்களாக முயன்று 1815இல் கண்டியைக் கைப்பற்றினர்.

> சூரியனே அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராச்சியத்தின் வல்லரசுப் படை கண்டியப் படையால் தோற்கடிக்கப்பட்டமை பிரித்தானியர்களை அவமானமடையச் செய்தது. அவர்கள் சூழ்ச்சியில் இறங்கத் தொடங்கினார்கள். கண்டியில் பிரதானிகளுக்கும் அரசனுக்கும் இடையில் காணப்படும் முரண்பாட்டை இதற்கு நன்கு பயன்படுத்தினார்கள். ஈற்றில் 19வருடங்களாக முயன்று 1815இல் கண்டியைக் கைப்பற்றினர்.

கண்டியைக் கைப்பற்றும் போது கண்டி மாகாணங்கள் தனியாக நிர்வகிக்கப்படும் என்றும் கண்டியர்களின் உரிமைகள், கலாசாரங்கள் பேணப்படும் என்றும் கண்டிய மக்களுக்கு உறுதி கூறினார்கள். ஆனால் நடைமுறையில் அதன்படி ஒழுகாமல் இருக்கவே 1818இல் கண்டிய மக்கள் பிரித்தானியருக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வெள்ளையனே வெளியேறு என்ற கோசம் கண்டியப் பிரதேசம் முழுவதும் எழுப்பப்பட்டது. 1818 ஜனவரியில் ஆரம்பித்த கண்டிய மக்களின் இப் போராட்டம் ஏப்பிரல் வரை தொடர்ந்த போது பிரித்தானியர் இராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்தனர். சென்னையில் இருந்தும் வங்காளத்தில் இருந்தும் இராணுவத்தினை வரவழைத்துக் கோரமாக நசுக்கி வெற்றி கண்டனர். பிரித்தானியர்களுக்கு எதிரான இலங்கை மக்களின் முதற் சுதந்திரப் போராட்டம் கோரமாக நசுக்கப்பட்டு படுதோல்வியில் முடிந்தது.

> கண்டியைக் கைப்பற்றும் போது கண்டி மாகாணங்கள் தனியாக நிர்வகிக்கப்படும் என்றும் கண்டியர்களின் உரிமைகள், கலாசாரங்கள் பேணப்படும் என்றும் கண்டிய• மக்களுக்கு உறுதி கூறினார்கள். ஆனால் நடைமுறையில் அதன்படி ஒழுகாமல் இருக்கவே 1818இல் கண்டிய மக்கள் பிரித்தானியருக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பெருந்தோட்டத் துறையின் அறிமுகம்

19ம் நூற்றாண்டின் முதற் தசாப்பதம் வரை சர்வதேசச் சந்தைக்கு அதிகளவில் கோப்பியை உற்பத்தி செய்த நாடாக பிரேசில் விளங்கியிருந்தது. அங்கு கறுப்பின நீக்ரோ மக்களை அடிமைகளாக வைத்தே கோப்பிச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் 19ம் நூற்றாண்டில் உலகரீதியாக அடிமை முறை ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டதால் பிரேசிலிலும் அடிமைகளை வைத்து வேலைகளை வாங்குதில் தடைகள் ஏற்பட்டன. இதனால் பிரேசிலில் கோப்பிச் செய்கை வீழ்ச்சி அடைந்தது. அதேவேளை பிரித்தானியச் சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தது.

கோப்பிக்கு ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பு பிரித்தானிய ஆட்சியாளரை இலங்கையில் கோப்பிச் செய்கையை ஆரம்பிக்கலாமா எனச் சிந்திக்க வைத்தது. இலங்கையில் ஏற்கனவே கண்டிய மக்களின் வீட்டுப் பயிராக கோப்பிச் செய்கை பண்ணப்பட்டிருந்தமையும் அவர்களைக் கவர்ந்திருந்தது. விளைவு, கண்டியப் பிதேசங்களில் கோப்பிச் செய்கையை ஆரம்பித்தார்கள். 1823இல் அப்போதைய ஆள்பதியான பான்ஸ் தேசாதிபதியின் நண்பர் 'ஜோர்ஜ் பெட்' கண்டியப் பிரதேசத்தில் பெருந்தோட்ட அடிப்படையிலான கோப்பிச் செய்கையை அறிமுகப்படுத்தி வைத்தார். தொடர்ந்து பான்ஸ் தேசாதிபதியே 1825இல் பேராதனையில் 'கன்னெருவா' என்ற இடத்தில் கோப்பிச் செய்கையை ஆரம்பித்தார். இவர்களைத் தொடர்ந்து பலர் கோப்பிச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

## கோல்புறூக் திட்டம் அறிமுகத்திற்கான காரணங்கள்

கோப்பிச் செய்கையில் முதலிட முன் வந்தவர்கள் தமக்கு அரசியல் நிறுவன ரீதியான சலுகைகளை கோரினார்கள். ஏற்கனவே இருந்த நிர்வாக முறையில் அதற்கான வசதிகள் இருக்கவில்லை. அங்கு ஆள்பதியின் ஏகபோகமே நிலவியிருந்தது. எனவே முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டுமானால் அரசியல் நிர்வாக ரீதியான மாற்றம் அவசியமாக இருந்தது.

இதை விட அக்காலகட்டத்தில் இலங்கைக்கான செலவு அதன் வருமானத்திலும் பார்க்க அதிகமானதாக இருந்தது. இப் பிரச்சினை பிரித்தானியப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்திருந்தது. அங்கு உறுப்பினர்கள் பிரித்தானிய மக்களின் வரிப்பணத்தில் தான் இலங்கையை நிர்வகிக்கின்றீர்கள் என்ற குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்தியிருந்தார்கள். இதனால் செலவைக் குறைத்து வருமானத்தைப் பெருக்க வேண்டுமாயின் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டியது அவசியமாக இருந்தது. இக் காலத்தில் கண்டி, கரையோரம், தமிழ்ப் பிரதேசம் என்பவற்றில் மூன்று வகையான நிர்வாக முறை இருந்ததினால் செலவு அதிகமாக இருந்தது. இதனை நீக்கி ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதானால் அதற்கு அர்சியல், நிர்வாக ரீதியான மாற்றம் அவசியமாக இருந்தது.


மேற்கூறிய இரு காரணிகளை விட கண்டியில் நடைபெற்றது போன்ற எதிர்ப்புப் போராட்டம் இன்னோர் தடவையும் ஏற்படலாம் என்ற பிரித்தானியரின் அச்சமும் ஒரு காரணமாகும். அத்தகைய போராட்டங்கள் வரவிடாமல் தடுப்பதற்கும் அரசியல் நிர்வாக ரீதியான மாற்றம் அவசியமாக இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அன்றைக்கு இருந்த ஆட்சி முறை பிரித்தானிய காலனித்துவ சுரண்டலுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. நடைமுறையில் இருந்த ஆட்சி முறையில் இருந்து மக்களை விடுவித்து காலனித்துவ ஆட்சிக்கு ஏற்றவகையில் அவர்களைப் பயிற்றுவிப்பது அவசிய தேவையாக இருந்தது.

இத் தேவைகளின் அடிப்படையிலேயே கோல்புறூக் அரசியல் சட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

---

## வண்ணாத்துப் பூச்சியும் நானும்



வண்ணாத்துப் பூச்சியே...!
நம்மிருவருக்கும் பொதுவான ஒன்று
முடிவில்லாத பயணம் மட்டும் தான்....
நாமிருவரும் சிறகால் பாவம்செய்தோர்...!

உன்னைப் போலவே வாழ்வில்-
பஞ்சைப் போலா னேன்.
என்னை யாருமே கையால் பிடிக்கலாம்...
வாலில் நூலைக் கட்டலாம்...
கண்களுக்குள்ளால் தோடைமுள் ஏற்றலாம்...
வெறும் காற்றும் தடுத்துப் பார்க்கின்றது...!

திடீரெனப் பிறக்கும் ஒவ்வொரு இரவிலும்
பாழடைந்து போன மைதானத்தின் நடுவே
நாம் தூங்குகிறோம்...
பூமி போல் நீயும்-
கிழியாத குடைபோன்ற வானமாய் நானும்
சேர்ந்து கிடக்கிறோம்...!

இரண்டும் ஒன்றெனக் கூறி
நான் குருடாகின்றேன்
உலகம் அழுகுகின்றது
காடு முள்முளைத்து இருளாகின்றது....

வண்ணாத்துப் பூச்சியே எனக்கு வானம் தா
அதில் முழுக்க மேகம் வை
சந்திரனைச் சொட்டுக் கிள்ளி வை
நிலவொளியில் சிறிது ஊற்று
என் முகத்தில் குந்தியிருந்து நடை பழகு
முடிவில்-

என் மரணக் குழியின் கட்டையிலிருந்து
சவக்காலைப் பூவில் தேன்குடித்தபடி
கிளிகளுடன் ஓடிப் போ...
அலைமோதி அலைக்கழியும் முகங்களின் மேல்
பட்டுவிடாமல்...
நீலவானம் நிறைந்துள்ள மேகங்களில் ஒன்றாக....!

நற்பிட்டிமுனை பளீல்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆரையம்பதி பற்றி ஒரு விளக்கம்!

சரிநிகர் 33வது வெளியீட்டில் ஜோ.ச ஆரையம்பதி என்னும் குறும் கையொப்பத்துடன் காட்டுக் கந்தோருக்குப் பயமா? என்னும் தலையங்கத்தில் வந்த கட்டுரையில் ஆரையம்பதியைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தவைகளின் விளக்கத்தை இத்தால் கீழ்க் கையொப்பமிடும் நாங்கள் அறியத் தருகின்றோம்.

உண்மையில் ''ரெலோ''வும், கருணாகரம் எம்.பியும் எமது பகுதியில் இருப்பது எமக்கு ஓர் வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். இவர்களால் எமது பகுதி மக்களுக்குக் கிடைக்கும் சேவைகளோ சொல்லிலடங்காது. 1990 ஜுன் மாதத்துடன் மட்டக்களப்பில் பெரும்பாலும் முஸ்லீம் கிராமங்களை அண்டியிருந்த கிராம மக்கள் அனைவருமே அகதிகளாக தங்களது வீடு, வாசல்களை, உடமைகளை இழந்து நிர்க்கதியான போது ஊர் மக்கள் காப்பாற்றப்பட்டது இவர்களால்தான். சில பகுதிகளில் வீடுகள் இருந்த இடமே இல்லாமல் தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால், எமது ஊரில் அப்படி எதுவுமே நடக்காமல் பாதுகாக்கப்பட்டதும் இவர்களால்தான். இதில் 'ரெலோ'வில் இருந்து இறந்த 'கிழவி ரவி'யின் பங்கு கூடுதலானது.

'கிழவி ரவி' இறந்த அன்று 41 இளைஞர்கள் ஒரே இரவில் போட்டு எரிக்கப்பட்டனர் என எழுதியிருந்தார். அப்படி எதுவுமே எமது ஊரில் நடக்கவில்லை. தற்போதும் அதிரடிப் படையுடன் 'ரெலோ'வினர் இருக்கிறார்கள். அவர்கள் ஆட்களைப் பிடித்துக் கொண்டு கப்பம் கேட்கின்றார்கள் என எழுதியிருந்தார். நாங்கள் நினைக்கிறோம் ஜோ.ச என்பவர் இருக்கின்றாரா? அல்லது இது ஓர் வேண்டாதவரின் புனைபெயரா? என்று. ஏனெனில் 'தற்போது' ஆரையம்பதியில் 'ரெலோ'வின் அலுவலகம் இருப்பதால் தான் மக்கள் நிம்மதியாக நடமாடுகின்றார்கள். தங்களைப் புலிப் பயங்கரவாதிகள் என்று சந்தேகத்தில் யாராவது பிடித்தால் நமது பையன்கள் இருக்கின்றார்கள் உடனடியாக விடுவித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் தான் மக்கள் இருக்கின்றார்கள்.

மற்றும், சவக்காலை வீதியில் உள்ள ஒருவரின் கடையில் ஒரு லட்சம் பெறுமதியான பொருட்களை இவர்கள் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொண்டதாகவும் எழுதியிருந்தார். இதை வைத்தே கூறலாம் இந்த ஜோ.சவுக்கும் ஆரையம்பதிக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்று. ஏனெனில், கடையை உடைத்து பொருட்களை ஏற்றி மட்டக்களப்பு நகரத்துக்கு கொண்டு சென்றவர்களிடம் இருந்து அவ்வளவு பொருட்களையும், (ஒரு மீன் ரின்னும் குறையாமல்) மீட்டு கடைச் சொந்தக்காரர்களிடம் கொடுத்ததே கருணாகரம் எம்.பியும், ராபட்டும், அவரது நண்பர்களுமே. இதற்குச் சான்றாக எம்முடன் கடைச் சொந்தக்காரரும் ஒப்பமிட்டுள்ளார். இவைகளை வைத்துப் பார்க்கும் போது கருணாகரம் எம்.பியினதும் 'ரெலோ'வினதும் சேவைகளைப் பார்த்துப் பொறுக்க முடியாத ஒரு நபரே இப்படி எழுதியுளளார் எனத் தெரிகிறது. கருணாகரம் எம்.பி தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து பிரதான வீதியில் மாடிக் கட்டிடம் இல்லாதிருந்த ஒரேயொரு மகாவித்தியாலயமான ஆரையம்பதி மகாவித்தியாலயத்துக்கு மாடிக் கட்டிடத்தை அமைத்துத் தந்துள்ளார். ஆரையம்பதி ஆஸ்பத்திரிக்கு குழந்தைகள் விடுதி அமைத்துத் தந்துள்ளார். பல வீதிகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தந்துள்ளார். பொது விளையாட்டு மைதானம் அமைக்க உதவி புரிந்துள்ளார். வீதிகள் அனைத்தும் புனரமைக்கப்பட வேலைகள் நடைபெற்றுக் கொண்டது மட்டுமல்ல. மட்டக்களப்பில் உள்ள 'ரெலோ'வினர் ராபட்டின் முயற்சியுடன் தமது சொந்தப் பணத்தில் பேச்சியம்மன் கோவிலுக்கு ஒலிபெருக்கி எடுத்துக் கொடுத்துள்ளார். செல்வாநகர் சிவனேஸ்வரர் கோவிலுக்கு சுற்றும்தில், மணித்தூண், இன்னும் பல வேலைகள் தங்களது சொந்தப் பணத்தில் செய்து கொடுத்துள்ளார். இங்குள்ள விளையாட்டுக் கழகங்களை ஊக்குவிக்கப் பலவகையான உபகரணங்களையும் சொந்தமாகவே வாங்கிக் கொடுத்துள்ளார்கள்.

இப்படிப்பட்டவர்களைப் பற்றி அவதூறாக எழுதி அவர்களது மனதைப் புண்படுத்தவே இந்தச் சதி நடக்கிறது என நாம் நினைக்கின்றோம். இதற்கு கருணாகரம் எம்.பியும், 'ரெலோ'வும் மசியாமல் அவர்கள் தொடர்ந்தும் சேவை புரிவார்கள் எனவும் திடமாக நம்புகின்றோம்.

நாங்கள் எந்தக் கட்சியையோ, அல்லது எந்த இயக்கத்தினரைச் சார்ந்தவர்களும் அல்ல. இருந்தும் உண்மைகள் மறைக்கப்படுவதை விரும்பாமலேயே இதை எழுதுகின்றோம். ஆரையம்பதியில் நடந்ததாக கூறப்பட்டதை வைத்துப் பார்க்கும்போது ஜோ.சவின் கடிதமே ஒரு கற்பனை எனத் தெரிகிறது. எனவே ஜோ.சவின் கடிதத்தைப் பிரசுரித்த சரிநிகர் ஒரு பக்கம் சாராமல் சரிநிகராகவே இருந்து இதையும் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றோம்.

**ஆரையம்பதி நன்னோக்கு கூட்டுறவுச் சங்கம் உட்பட ஆரையம்பதியைச் சேர்ந்த ஏழு நிறுவனங்கள் ஒப்பமிட்டுள்ளன.**

**(பி.கு:**
**மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. கோ.கருணாகரம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட இருவர் நேரில் கொண்டு வந்து தந்த கடிதம் இது)**

## பத்திரிகை...

கைகள் வெளிவருகின்றன என்றும், பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் பொதுமக்கள் விரும்புவதை அறிந்து கொள்ள அனைத்து வகையான கருத்துகளையும் கொண்ட பத்திரிகைகள் வெளிவர தாம் அனுமதித்து வருவதாகவும் ஜனாதிபதியும் பிரதமரும் பேசி வருகிறார்கள்.

ஆனால் வெறுமனே கிளாலி இராணுவத் தாக்குதலின் திட்டமிடலிலிருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய ஒரே காரணத்திற்காக ஒரு பத்திரிகையாளன் மீதான கொலை மிரட்டலை அரசாங்கத்தின் உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவரே விடுப்பதென்பது அரசின் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய கோட்பாடுகளையும் பேச்சுக்களையும் நகைப்புக்கிடமாக்கி விடுகிறது.

சிலவேளைகளில் அரசு குறிப்பிடுகிற சுதந்திரம் என்பதை பத்திரிகையாளர்களைத் தாக்குவதற்கான/பத்திரிகையாளர்களை மிரட்டுவதற்கான சுதந்திரம் என்று புரிந்து கொண்டால்; அது அரசுக்கும் அதன் இராணுவ மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் மட்டுமான சுதந்திரம் என்று புரிந்து கொண்டாற் சரியோ என்று எண்ண வைக்கிறது!.

## அரசு...

வரே மீறி நடந்து கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

அரச இயந்திரம், அரச சார்புக் காடையர்கள், மற்றும் அரச படைகள் என்பவற்றுக்கு அஞ்சியபடியே பத்திரிகையாளர்கள் வாழவேண்டியிருந்த முன்னைய யுகத்தினை மீள உயிர்ப்பிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இதனை சுதந்திரப் பத்திரிகை இயக்கம் கருதுகிறது.

ஜனாதிபதி, பிரதமர், மற்றும் அரசாங்கத்தின் முன்னணித் தலைவர்கள் தாம் அடிக்கடி கூறும் பத்திரிகைச் சுதந்திரத்தின் பெறுமதிகளை முற்றாகவே மறுதலிக்கும் நடவடிக்கையாகவும் இது உள்ளது.

ஒரு தனிப்பட்டவருக்கோ அல்லது ஒரு நிறுவனத்துக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ ஏன் அரசாங்கத்தின் பாதுகாப்புக் படையினருக்கோ ஒவ்வாத ஒரு செய்தியையோ, கட்டுரையையோ வெளியிட்ட ஒரே காரணத்திற்காகப் பத்திரிகையாளர் மீது கொலைப் பயமுறுத்தலோ அல்லது வேறெந்தப் பயமுறுத்தலோ விடப்படுவது மிகவும் அநாகரீகமான ஒன்றாகும் என்பது வெளிப்படை.

இத்தகைய பயமுறுத்தல்களின் ஊடாக பத்திரிகையாளர்களின் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை நசுக்கி விட முனையும் அனைத்து நடவடிக்கைளையும் எப்போதும் போலவே சுத்ந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் தொடர்ந்தும் எதிர்த்து வருமென உறுதி கூறுகிறது.

இத்தகைய பயமுறுத்தல்களுக்குக் காரணமான நபர் அவர் எத்தகைய உயர்பதவியில் இருந்த போதும் அவர் மீது உடனடியாகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சுதந்திரப் பத்திரிகை இயக்கம் அரசைக் கோருகிறது.

பத்திரிகைச் சுதந்திரம், வெளிப்பாட்டுச் சுதந்திரம் போன்றவை மீது தனக்கு அக்கறை இருப்பதாகப் பிரகடனப்படுத்தி வரும் அரசு இப்படிச் செய்வதன் மூலமே தன்னை நம்ப வைக்க முடியும்; பத்திரிகையாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம்,பீதியையும் போக்கவும் முடியும்.

## பெண்கள்.....

க்ரோஷியா பொஸ்னியா யுத்த முனைகளில் மட்டுமல்ல முன்னைநாள் யூகோஸ்லாவியாவில் கூட படையினர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இடையில் வந்த நகரங்களிலும் கூட நடைபெற்ற 'றேப்'புகளுக்கு அளவுகணக்கில்லை.

பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான அவசரகாலத் தொலைபேசி (SOS) அழைப்புகள் பெல்கிறேட்டிலும் சாகிரேபிலும் 100% அதிகரித்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவை எல்லாவற்றிற்கும் காரணமாக அனுபவம் வாய்ந்த படையினரே இருந்துள்ளனர். குறிப்பாக நெஸ்மிகாட்யோவா, இலிக்கா, வோர்ஸ்மிஸ்கினா, ஆகிய இடங்களிலிருந்து திரும்பிய இவர்கள் எப்போதும் கிளாஷ்நிக்கோவுடனே (AK47) படுப்பார்கள். இவர்கள் எதிரிப்படையணியைச் சார்ந்தவர்கள் அல்லவாயினும் தமது சட்டபூர்வ மனைவிகளையே தமது 'றேப்'புக்கும் சித்திரவதைக்குமான தீனிகளாகப் பயன்படுத்தினர்.

க்ரோஷிய யுத்தத்தைப் பற்றிய தனது முதலாவது அறிக்கையில் 'ஹெல்சிங்கி வொச்' ஹொசோவைச் சேர்ந்த ஒரு அல்பேனியப் பெண்ணின் ஒப்புதலை வெளியிட்டுள்ளது. 'பெடரல் இராணுவத்தின் வுக்கோவர் விடுவிப்பின் போது இவள் க்ரோஷியர்களைக் கொண்ட சிறைக்குள் இருக்கக் காணப்பட்டால் ஆண்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பின் இவள் 12மணித்தியாலங்களாக 'றேப்' பண்ணப்பட்டு விசாரிக்கப்பட்டபின் · விடுவிக்கப்பட்டிருந்தாள். (1992 ஜனவரி) இவள் எப்போதாவது தனது மௌனத்தை வெளியிலோ அல்லது செயலிலோ காட்டிவிட முடியுமா?

எப்படியோ அவன் இன்னமும் எங்கள் மத்தியில் உள்ளான். உனது வீட்டுக்கருகாமையிலுள்ள ஹொட்டேலில் அவன் உணவு பரிமாறும் வேலையைப் பெற்றுக் கொள்ளும் போது நீ அவனைப் பார்த்துப் புன்னகைப்பாய். நீ அவனுக்கு 'ரிப்ஸ்'கொடுப்பாய். ஆனால் அதேகணம் அவள் உனக்கு மிகவும் நெருக்கமானவளாக இருக்கக்கூடும். சுவரின் மறுபுறத்தில் களஞ்சிய அறைக்குள், குளியல் அறைக்குள் அல்லது சமையல் அறைக்குள்- எங்கெல்லாமோ அதிகாலை முதல் நள்ளிரவு வரை ஜன்னல்கள் இல்லாத காற்றோட்டமற்ற இடத்தில் உனக்குப் புன்னகையோ அல்லது 'ரிப்ஸோ' இல்லாது மிகக் குறைந்தளவு பணத்துக்காக அவள் உழைத்துக் கொண்டிருப்பாள். நாங்கள் அவளைத் தேடிக் கொண்டிருக்கிறோம். சில வேளைகளில் அவளை நாம் காணவும் கூடும்.

### ஒரு பகிரங்க விடயம்

பெண்ணியல் ஆய்வுகள் பொதுவாக 'றேப்'புகள் மூன்று விதமான போக்குகளைக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றன.

முதலாவதாக யுத்தகால 'றேப்' என்பது ஒரு பகிரங்க விடயம். எதிரி தனது சொத்துகளுக்கு என்ன நடந்திருக்கிறது என்பதைக் காண வேண்டும். அதற்காக அனேகமான சித்திரவதைகள் அல்லது 'றேப்'புகள் அவளது வீட்டில் வைத்தே செய்யப்படுகின்றன. ஆகவே இது அவளது கணவனுக்கெதிரானது அல்லது தகப்பனுக்கெதிரானது. அவளது இனத்துக்கெதிரானது. அவளது தேசத்திற்கெதிரானது. அவளது உடம்புக்கெதிரானது அல்ல.

பெண்ணை அவமானப்படுத்துவது எதிரியை வெற்றி கொண்டதற்கான ஒரு குறியீடாக இருக்குமென்றால் இந்த அவமானப்படுத்தல் ஒரு பயங்கரத் திரைப்படத்தில் வருவது போல பயங்கரமாக அமைவது சாத்தியமே. அவளது தலைமுடிக்குத் தீயிடல். அவளது உடலுறுப்புகளை வெட்டித் துண்டாடல் சங்கிலிகளாலோ கயிறாலோ அவளைக் கட்டிப் போடுதல்- ரத்தம் சிந்தச் சிந்த.

யுத்த வெற்றிகள் ஆண்களுடையவை. அவை எப்போதும் அவர்களுடைய உரிமைகள். அவை திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டே ஆக வேண்டும்.

'றேப்' பண்ணப்பட்ட பெண் ஆக்கிரமிப்பாளனின் அதே தேசிய இனத்தைச் சேர்ந்தவளாயினும் கூட இது வெற்றி கொள்ளலின் ஒரு அம்சமாகவே கருதப்படுகிறது. இது 'ஆண்மையின் வெற்றி'.

இரண்டாவது யுத்த 'றேப்' என்பது பொதுப்படையானது. இளைஞர்கள் ஒருவரை ஒருவர் மெய்ச்சிக் கொள்ளும் உணர்வுடன் கூட்டாக இதில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு இளைஞனும் மற்றவர்களைப் போலிருத்தல் வேண்டும். அவர்கள் குழுவாக இதில் ஈடுபடும் போது அங்கே ஒரு யுத்த ஒழுங்குவிதி நடைமுறை இருப்பதனை அவதானிக்கலாம். சுடுவதும் 'றேப்' பண்ணுவதும் படையினரின் வாழ்க்கையின் மரபு ஆயின் சாவும் 'றேப்' பண்ணப்படலும் போர்க்காலப் பெண்ணின் வாழ்வென விளங்கிக் கொள்ளலாம்.

மூன்றாவதாக 'றேப்' செய்த உடனேயே பெண்ணைக் கொன்றுவிடுவது. நாங்கள் முன்பே பார்த்தது போல கொல்வதன் மூலம் ஒரு படையினன் அவளை ஒன்றும் ஒரு தியாகியாக்கி விடுவதில்லை. மேலும் அவனது எதிர்காலத்திற்கும் அதன் மலர்ச்சிக்கும் கொலை எத்தகைய இலாபத்தையும் பெற்றுக் கொடுப்பதில்லை. 'றேப்'பே போதுமானது. ஆயினும் அவன் கொல்கிறான். ஏனெனில் ஒன்றில் அவள் 'நாற்றமெடுப்பவளாக' இருக்கிறாள். அல்லது சுடுவது அவனுக்கு இன்பமளிக்கிறது. அல்லது போனால் ஏன் சுடக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. அவளை உயிருடன் விடுவதா இல்லையா என்பது அவனது சொந்தத் தீர்மானம்.

யுத்த விதிமுறைகளின் படி பெண் ஒரு மதிப்புக்குரிய எதிரி அல்ல. அவள் வெறுமனே பயன்படுத்தப்படவும் கட்டுப்படுத்தப்படவும் தேவையில்லை என்றால் அழித்து விடப்படவும் வேண்டியவள். ஆனால் கடந்த 20ஆண்டு கால பெண்ணிலை ஆய்வுகள் பெண்களை 'றேப்' பண்ணுவதற்கும் கொல்வதற்குமாக யுத்தத்தைப் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் ஆண்களுக்கு இல்லை. அதை அவர்கள் தொடக்கத்திலிருந்தே செய்துவருகிறார்கள் என்று தெரிவிக்கின்றன. யுத்த காலத்தில் நடப்பதெல்லாம் தாமே பிரகடனப்படுத்திக் கொண்ட உரிமையும் அதிகாரமும் இவற்றைச் சற்று அதிகமாகச் செய்ய ஆண்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. அவ்வளவுதான்.

நெஸ்மிகாட்யோவாத் தெருக்களில் நடந்து கொண்டிருக்கும் ஆண்களுக்கு பெண்கள் மீதான பாலியல் அவமானமூட்டலும், கொலையும் அவர்களது அதிகாரத்துக்கான கருவியாகவே இருக்கக் கூடும். அவர்களுக்காக இக் கட்டுரை எழுதப்படவில்லை. பெண்களை மதிக்கின்ற 'றேப்' பண்ணப்பட்ட பெண்கள் குற்றவாளிகள் அல்ல எனக் கருதுகின்றவர்களுக்காகவே இது எழுதப்பட்டுள்ளது. இக் கட்டுரை அவர்கள் ஒவ்வொருவருக்கும் காணிக்கையாகும்.

## நொச்சிமோட்டை...

''உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கிளாலிக் கடலேரியைக் கடந்து முடிந்ததும் இனிப் பயமில்லை என்று மனதிற்கு ஓர் ஆறுதல் ஏற்படுகிறது. ஆனால் -இந்த நொச்சிமோட்டைச் சேற்று வயல் நடையில் வழுக்கி விழுந்து'' கொண்டு வரும் பேக்குகளை சேற்றில் நனையாமல் பாதுகாப்பது என்பது ஒரு பகீரதப் பிரயத்தனம் தான்'' என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சீரான-பிரதான நேர்ப்பாதை இருந்த போதிலும் பொதுமக்களோடு புலிகளும் கலந்து வந்து எம்மைத் தாக்க முயற்சிக்கின்றார்கள். இதனால் ஒரு பாதுகாப்பு முன்னேற்பாடாகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

களிமண் நிறைந்த வயல் நிலமாகிய இந்த சேற்றுப் பாதையில் வழுக்கி விழாத பயணிகள் எவரும் இல்லை. அதிலும் வயோதிபர்கள் குழந்தைகளோடு பிரயாணம் செய்யும் தாய்மார்கள், நோயாளிகளின் நிலைமை பற்றிச் சொல்லவே தேவையில்லை.

வடபகுதியிலிருந்து வவுனியாவினுட் பிரவேசிக்கும் பொதுமக்கள் நொச்சிமோட்டையின் இப்பகுதியில் உள்ள படையினரின் முதலாவது காவலரண் சோதனையில் புதிய கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளார்கள்.

இளைஞர்கள், யுவதிகளும், இளமைத் தோற்றம் கொண்ட நடுத்தர வயதினரும் உடல்ரீதியான சோதனையின் பின்னர் சந்தேகத்திற்கு இடமானோர் எனக் கூறி இரவு விசாரணைக்காக படையினரால் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இரவு விசாரணையின் போது தமது பூர்வீகம், வரலாறு என்பவற்றையும் பிரயாணத்தின் நோக்கம் உட்பட பல விடயங்கள் தொடர்பான வினாக்களுக்கு இவர்கள் விடையளிக்க வேண்டுமாம். திருப்திகரமான விடைகள் இல்லாவிட்டாலும் உரிய ஆள்அடையாளப் பத்திரங்கள் இல்லாதவர்களும் மேல் விசாரணைக்கென தடுத்துவைக்கப்படுகின்றார்கள். ஏனையோர் நேரம் காலமற்ற இரவு விசாரணையின் பின்னர் காலையில் விடுவிக்கப்படுகின்றார்கள்.

இரவில் இவர்கள் தங்கவைக்கப்படும் கொட்டிலுக்கு அருகில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் உள்ளோரின் அரச உபசரணைக்குக் குறைவில்லை. கேட்பதெல்லாம் கிடைக்கும். விடிந்ததும் நீண்டதொரு 'பில்'லோடு கடை ஊழியர்கள் இவர்களை வழியனுப்பக் காத்து நிற்பார்களாம்.

இரவு உபசரணை முழுதும் படையினரது உபசரணை தான் என்று எண்ணியவர்களுக்கு இது ஒரு ''ஷொக் ட்ரீட்மென்ட்''டாகவே இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

விசாரணைக்காக இவ்வாறு தடுத்து வைக்கப்படும் பெண்கள் மாலையில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அங்கு பெண் பொலிஸாரின் பாதுகாப்பில் விசாரணை செய்யப்பட்டதன் பின் மறுநாட்காலை விடுதலை செய்யப்படுவார்கள்.

கிளாலி படகுச் சேவை நடைபெற்று குடாநாட்டிலிருந்து பெருந்தொகையான பயணிகள் வவுனியாவுக்குள் பிரவேசிக்கும் தினங்களில், இவ்வாறு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்படுவோரின் எண்ணிக்கை சில வேளைகளில் நூறையும் தாண்டிவிடுவதுண்டு.

இவ்வாறு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்படுபவர்களுடன் சேர்ந்து வரும் உறவினர், நண்பர்கள், தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலையை எதிர்பார்த்து தமது பிரயாணத்தை இடைநிறுத்தி வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இரவைக் கழிப்பது ஒரு சாதாரண நிகழ்வாகும்.

## 23 பேர்...

படையினரில் 23 பேர் தற்கொலை செய்துள்ளதாக பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. மிக அவசர அவசரமாகச் சேர்க்கப்பட்ட இவர்களுக்கான பயிற்சி வடக்கின் யுத்த முனையில் வைத்தே வழங்கப்படுவதாகவும், யுத்தத்தின் கொடூரத்தைச் சகிக்க முடியாத இவர்கள் பயத்தின் காரணமாக இவ்வாறு தற்கொலை செய்வதாகவும் அக்குறிப்பு தெரிவிக்கிறது!

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்


# தொடரும் கடத்தல்கள்

## புதிய தகவல்கள்

கடந்த மாதம் 30ம் திகதி ஞாயிறு அன்று வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த யாழ்தேவிப் புகையிரத மானது இரவு 7.10 மணிக்கு ராகம புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற போது அதிலிருந்த 20இளைஞர்களும் 15யுவதிகளும் ராகம பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே தினத்தன்று கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக 10இளைஞர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற் குச் சில நாட்களின் பின் மீண்டும் ராகம வில் வைத்து புகையிரதத்தில் வந்தவர் களில் பலர் கைது செய்யப்பட்டுள்ள னர். இவர்களில் எத்தனை பேர் விடு விக்கப்பட்டனர், யார் யார் விடுவிக்கப் படவில்லை என்பது எவருக்கும் தெரி யாது. இவர்களைக் கைது செய்யச் சென்ற பொலிஸாருடன் 'நல்ல தமிழ்' பேசும் தமிழ் இளைஞர்களும் சென் றுள்ளனர். அவர்களே குறுக்கு விசார ணைகளிலும் ஈடுபட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.

ஏற்கனவே சரிநிகரில் குறிப்பிட்டவாறு கொழும்பில் கடத்தப்பட்ட இளைஞர், யுவதிகளில் விடுதலை செய்யப்பட்ட வர்கள் தவிர இன்னும் பலருக்கு என்ன நடந்ததென இதுவரை யாருக்கும் தெரி யாது. இவை யாவும் இலங்கை அரசின் தலைநகரிலும் அதனை அண்டிய பகுதி களிலும் அனைத்துப் பாதுகாப்பு வலைப்பின்னல்களுக்கு மத்தியில் நடப்பவை.

ஏறத்தாள இரண்டு மாதங்களுக்கு முன்பு, மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்கள் சமூக சேவைகள நிறுவனம் ஒன்று கண்டியில் நடைபெற்ற வெளிநா டொன்றின் பயிற்சி முகாமில் கலந்து கொண்டது. இப் பயிற்சி முகாமில் பங் குபற்றவென பத்துப் பேர் கொண்ட குழுவொன்று மட்டக்களப்பிலிருந்து சென்றிருந்தது. இவர்களில் ஒருவர் தனது நண்பி ஒருவருக்கு எழுதிய கடி தத்தில் முதற்கட்டப் பயிற்சி முடிவ டைந்து அடுத்தகட்டப் பயிற்சி ஆரம்ப மாகியுள்ளது என எழுதியிருந்தார் ஏற் கனவே மட்டக்களப்பிற்கு வரும் கடி தங்கள் உடைக்கப்படுவது போல் இக் கடிதமும் உளவுப் பிரிவால் உடைக்கப் பட்டு, வாசிக்கப்பட்டு கடிதத்திற்கு உரிய பெண் கைது செய்யப்பட்டார். இவருடன் சேர்த்து கல்லாற்றில் உள்ள இரண்டு பெண்களும் கைது செய்யப் பட்டனர். இவர்கள் மூவரையும் பயிற்சி நடக்கும் கண்டிக்கு அழைத்துச் செல்வதற்குப் பொறுப்பாக காட்டுக் கந் தோர்(மட்டக்களப்பு) உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நிய மிக்கப்பட்டார். இரவு வேளையில் பெண்களை அழைத்துச் சென்றமை யால் பெண் ரிசேவ் பொலிஸ் கான்ஸ்ட பிள் ஒருவரும் இவர்களுடன் அனுப் பப்பட்டிருந்தார். இவர்கள் கண்டிக்குச் செல்லும் வழியில் இரவு நேரம் ஆகி விட்டதனால் பொலனறுவையில் தங்கி யிருந்தனர். அந்த இரவுப் பொழுதில் பெண் ரிசேவ் பொலிஸ் கான்ஸ்டபி ளும், கைதான பெண்களில் ஒருவரும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரின் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டுள் ளனர் எனத் தெரியவருகிறது.



இதே போன்று கண்டிக்குச் சென்ற இவர்கள் அங்கு பயிற்சியில் ஈடுபட்டி ருந்த பத்துப் பெண்களையும் கைது செய்து மட்டக்களப்புக்கு கொண்டு வரும் வழியிலும் பொலிஸாரினால் காம சேட்டைக்குட்படுத்தப்பட்டதாக வும் அறிய வருகின்றது.

இது இவ்வாறிருக்க, களுவாஞ்சிக்குடி யைச் சேர்ந்த இரு பெண்கள் தொடர்ந்து ஆட்கடத்தல்களில் ஈடுபட் டுவரும் இனந்தெரியாதோரால் கடத் தப்பட்டுள்ளனர். பின்பு அவர்களில் ஒருவர் கொழும்பிலும் மற்றையவர் கண்டியில் அநாதரவாக விடப்பட்ட னர். இவர்களும் பாலியல் பலாத்காரத் திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ் வாறு பயங்கரவாத சந்தேக நபர்கள் என்ற போர்வையில் பெண்கள் கடத் தப்படுவதும் பாலியல் சேட்டைக ளுக்கு உள்ளாக்கப்படுவதும் சர்வசா தாரணமாகி விட்டது.

**புலனாய்வுப்பணியக முக்கியஸ்தரான ''கப்டன் முனாஸ்'' முன்பு கிழக்கு மாகாணத்தில் சாதா ரண மக்கள் மத்தியில் கூட பிரபல்யமானவர். 1990.9.05ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக முகாமில் கைது செய்யப்பட்டு காணாமல் போன 158பேரின் சம்பவத்திலும் இவருக்குத் தொடர்பு உண்டு என H.R.T.F 10 August 1992-10 August 1993 வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது.**

### கரன்

அண்மையில் மன்னாரி லும் பலர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர். உப்புக்குளத் தைச் சேர்ந்த ராஜா என்பவர் இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் ஒருவர். இவ ரது நிலைமை என்னவென்று இதுவரை யாருக்கும் தெரியாதுள்ளது. இதே போல் திருமலையைச் சேர்ந்த ஆறுமு கம் அரசரத்தினம், இளையதம்பி சித்தி லிங்கம் ஆகியோரும் தலைமன்னா ரைச் சேர்ந்த அருளானந்தம் என்பவ ரும் 93.07.04இல் நகரத்திற்கு உட்பட்ட பொலிஸ் நிலையத்தில் வைத்து இறக் கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் என்ன நடந்தது என இதுவரை தெரியா துள்ளது. மன்னாரில் இத்தகைய கடத் தல்கள் நடைபெறுவதனை 'ரெலோ' இயக்கம் கூட ஏற்றுக் கொண்டுள்ளது டன் இதன் மர்மத்தை கண்டுபிடிக்குமா றும் அரசாங்கத்தை வேண்டியுள்ளது.

உண்மையில் இவை யாவற்றுக்கும் பின்னால் இருக்கும் மர்மம் என்ன வென யாரும் மண்டையைப் போட் டுக் குழப்பத் தேவையில்லை.ஏனெ னில் அரசாங்கத்தால் உருவாக்கப்பட் டுள்ள இராணுவ உயர் புலனாய்வுப் பணியகமே (Directorate of Military Intelligence) இவற்றுக்குப் பின்னால் இருப்பதாக தெரிய வருகிறது. இப் பணியகமே 1989 காலப்பகுதியில் ஜே.வி.பி. ஒழிப்பு நடவடிக்கைக்கு பொறுப்பாக செயற்பட்டது எனவும் கூறப்படுகிறது.

ஆனால் இன்று இப் புலனாய்வுப் பணி யகம் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக் கைகளுக்கான எதிர்ப்ப அணியாக மாற்றப்பட்டுள்ளது. இலங்கை இராணு வத் தளபதி சிசில் வைத்தியரட்னாவின் நேரடிப் பொறுப்பில் பிரிகேடியர் பல கல்லவின் தலைமையில் இது இயங்கு கின்றது.

இந்தப் பணியகத்தின் கீழ் விசேடமா கப் பயிற்றப்பட்ட எதிர்ப்பு இணை யணி (Oppose Combine Group) ஒன் றும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் 'கப் டன் முகமட் முனாஸ்', 'கப்டன் நிலாம்', முன்னாள் புளொட் பொறுப் பாளர் மோகன் முதலானவர்கள் இதில் செயற்படுவதாகவும் தெரியவருகிறது. இவர்களின் இரகசிய நடவடிக்கைக ளுக்கு இலக்கத்தகடில்லாத வாகனங்க ளும், பயங்கரவாத எதிர்ப்பு தேடுதல் நடவடிக்கைப் பிரிவு (Anti Terrorist Opperation Search wing) என எழுதப் பட்ட சிகப்பு நிற வாகனமும் பயன்ப டுத்தப்படுவதாகவும் அறிய வருகின் றது.

இவர்களுடன் அண்மையில் இந்தியா விலிருந்து அழைத்து வரப்பட்ட தமிழ்க் குழுவொன்றும் செயற்படுவதா கவும், ஏற்கனவே உள்ள தமிழ்க் குழு ஒன்றிலிருந்து பிரிந்த இவர்களுக்கு N.I.B யோடு தொடர்புடைய A.S.P ஒருவரே கட்டளைகளைப் பிறப்பிப்ப தாகவும் தெரிய வருகிறது.

# மணிவாசகம்

### மாகாணசபைகள் வழக்காட அல்ல

''மாகாணசபைகள் தேசியக் கொள்கைகள் அமைக்கும் இடமல்ல. தேசியக் கொள்கைகளை அமைப்பது மத்திய அரசாங்கமாகும். நாம் மாகாண சபை களை ஏற்படுத்தியது வழக்காட அல்ல. சட்டப்படி வழக்காடும் மாகாணசபை யொன்றை அமைக்க முடியாது. நாம் மாகாண, பிரதேச சபைகளை ஏற்படுத்தி யது மத்திய அரசாங்கத்தின் தேசியக் கொள்கைகள், தேசிய வேலைத்திட்டங் களை மாகாண மட்டத்தில் செயற்படுவதை வசதியாக்கவே.''

**ஸ்ரீ லங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க -திவயினவில்- 25.10.1993**

### தாயகக் கோட்பாடு என்கிற நச்சு விதை

''இப்போது இந்நாட்டில் எழுந்துள்ள வட-கிழக்குப் பயங்கரவாதம் பயங்கர மானதொன்றாகும். இப் பயங்கரவாதிகளுக்கு உற்சாகம் கொடுப்பவர்கள் தேசிய மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேசிய ரீதியிலும் உள்ளனர். இந்தத் தாயகக் கோட்பாடு என்ற நச்சு விதையைப் பரப்பியது ஏன் என அறிவாற்றல் உள்ள வரலாறு தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்களுக்கு மறைக்க முடியாது. அதிகாரத்தைப் பேணுவதற்காக இனம், மொழி, மதம் ஆகியவற்றைக் காட்டிக் கொடுப்பவர்கள் யார்? என மக்களுக்குத் தெரியும்.''

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட வரலாற்று விரிவுரையா ளர் விமல விஜயசூரிய -திவயினவில்- 25.10.1993.**

### யாழ்ப்பாணம் சிங்களவர்களுடையதே!

''நான் யாழ்ப்பாணம் முழுவதும் நடந்து திரிந்த ஒருவன். அன்று வடக்கு முழுமையாக சிங்களவர்களுக்கானதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டும் பௌத்த புனிதத் தலங்கள் 21 இருந்தன. ஆனால் இன்று அவற்றில் இருப்பது ஒரு புனிதத் தலத்தின் அழிவுச்சின்னங்கள் மட்டுமேயாகும்.''

**அகில இலங்கை அமரபுர மஹா சங்கச் சபையின் அதியுயர் மஹா நாயக்கர் மடிகே பஞ்ஞாசீஹதேரர் -லங்காதீபவில்- 26.10.1993**

### மலையகத்தவருக்கெதிராக....

''இன்னும் சில நாட்கள் செல்லும் போது மத்திய மலைநாட்டிலுள்ள பௌத்த புனிதத் தலங்கள் எல்லாம் அழிவுச் சின்னங்களாகி விடும். அவ்வாறு ஆகும் போது அழிவுச் சின்னங்களைப் பார்க்க நாம் அனுராதபுரம், பொலன்நறுவை போன்ற இடங்களுக்குச் செல்லத் தேவையில்லை.

**மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யூ.எம்.பீ.பீ.திசாநாயக்க- லங்காதீபவில்- 26.10.1993.**

### நாட்டை அழிக்கிற சதி!

''இந்நாட்டை அழிக்கும் பயங்கரமான சதிகள் பல உள்ளன. முதலாவதானது வடக்கின் இனவாதிகள் இந்நாட்டில் வேறாக தமிழ் இராச்சியமொன்றைக் கோருவது. மற்றையது தேசியத்தை அழித்து நாட்டை வேகமாக மேல்நாட்டு மயப்படுத்துவதுமாகும்.''

**புலத்சிங்ஹல கிளையின் ஸ்ரீ ஞானாலோக்க மஹா பிரிவெனாதிபதி சத் தர்ம கீர்த்தி ஸ்ரீ கர்மாசார்ய யட்டகம்பிட்டியே ஞானாலோக்க தேரர் - திவயினவில்- 26.10.1993**

### சர்வமும் நானே!

''எமது நாட்டிற்கு நல்ல அரசாங்கமொன்று தேவை. அதனை ஏற்படுத்த நாம் செயற்பட்டு வருகிறோம். அதனை விடுத்து நாட்டை அழிக்கும் கட்சிக்கு அரசாங்கமொன்றைக் கொடுக்க இயலாது. வடக்கில் யுத்தமொன்று இருப்பது உண்மையே. அதனை இல்லாதொழிக்க வேண்டுமென்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த யுத்தத்திற்குத் தேசிய வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கு செலவழிகிறது. தலைகீழாக நின்று யார் எது கூறினாலும் அவர்களால் இதனை நிறுத்த முடியாது இந்த யுத்தத்தை இல்லாதொழிக்கவும், யுத்தத்தை நடத்தவும் நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் முடிவெடுப்பது நான்.''

**ஸ்ரீ லங்கா ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க -லங்காதீபவில்- 26.10.1993.**

### இணைப்புக்கு எதிர் சிங்கள இனத்துக்கு ஆதரவு

''நான் ஐ.தே.க.யின் உறுப்பினராக 30 வருடமளவில் இருந்தேன். அதில் 10 வருடங்களாகக் கட்சியின் செயலாளராகச் செயற்பட்டேன். அக் காலப்பகுதி யில் டட்லி சேனாநாயகக்காவுடனும், ஜே.ஆர்.ஜயவர்த்தன வுடனும் வட-கிழக்குத் தமிழ்ப் பிரச்சினை பற்றி நான் பேசியுள்ளேன்.

இம்மாகாணங்கள் இரண்டையும் இணைத்தால் அது நாட்டிற்கும், சிங்கள மக்களுக்கும் பாரிய அழிவு என அக்காலத்தில் இத்தலைவர்கள் இருவரும் எனக்குக் கூறியிருந்தார்கள்.ஆனால் ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்த போது இம் மாகாணங்கள் இரண்டையும் இணைத்ததால் நான் அமைச் சர் பதவியிலிருந்து மட்டுமல்ல அரசியலிலிருந்தும் விலகிக் கொண்டேன்.

அன்று வட-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதற்கு எதிராகவும், சிங்கள, பௌத்த மக்களை மீண்டும் எழுச்சியுறச் செய்யும் பணிக்காகவும் மக்களை அறிவூட்டியபடி நான் கிராமம் கிராமமாகச் செல்கிறேன். எனக்குக் கிடைக்கும் மேடை பௌத்த கோவில்களாகும் (பன்சல) தற்போது பயமின்றிப் பேசமுடி யும்.

நாடு.இனம் பற்றிய உணர்வுடன் செயற்பட வேண்டும். சிங்கள மக்களுக் குள்ள நியாயமான உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டு அநியாயமான உரி மைகள் வேறு இனப் பிரிவுகளுக்கு வழங்கப்படுவது குறித்து நாம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.''

**ஸ்ரீ லங்கா மஹா போதி நிறுவனத்தினதும், சிங்களப் பாதுகாப்பு அமைப்பி னதும் தலைவர் காமனீ ஜயசூரிய -லங்காதீபவில்- 26.10.1993.**

### கடமையும் பொறுப்பும்

''ஜனநாயக ஆட்சி முறை, தேசிய் ஒருமைப்பாடு, புவியியல் தொடர்ச்சி ஆகியனவற்றை அழிப்பதற்காக நடத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைக ளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பொதுநலவாய அரசுகளின் அமைப்பு போன்ற சர்வதேசிய அமைப்புகளின் கடமையும் பொறுப்புமாகும். அது தொடர்பான தேவையான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினைகளுக்குள் ஈடுபட்டு அவற்றைச் சிக்கல் ஆக்க வேண்டிய தில்லை. ஜனநாயகத்தை அழிக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும், அவ் இயக்கங்களுக்கும் எதிராகச் சர்வதேச எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டா வது நடவடிக்கை எடுக்காதது அநியாயமானதாகும்.''

**ஆசிரியர் தலையங்கத்தில் -லங்காதீபவில்- 28.10.1993**

### முதுகு சொறிதல்

ஸ்ரீ லங்கா தொடர்பாக வெளிநாடுகளில் பரவியிருந்த தவறான கருத்துக்களை இல்லாது செய்ய என்னால் முடிந்தது. ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க ஜனநாயகக் கொள்கைகளுக்காக அர்ப்பண உணர்வுடன் செயற்படுகிறார். எல்.ரீ.ரீ.ஈ. இயக்கம் மட்டுமே வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேசமயம் அவ் வியக்கமும் ஜனநாயக வழிமுறைக்குள் வருவதற்கு அரசு இடங் கொடுத்தா லும் அவர்கள் உரிய பதில் தெரிவிக்கவில்லை.

**ஸ்ரீ லங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ- லங்காதீபவில் - 28.10.1993.**

### ஏன்

''தற்போது வட-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துமாறு எமக்கு மட் டுமே கூறுகிறார்கள். அவர்கள் தமிழ்ப் போராளிகளுக்கு யுத்தத்தை நிறுத்து மாறு கூறாதது ஏன்?''

**குணதாச அமரசேகர -லங்காதீபவில் - 1.11.1993.**

**- சீ.சாத்தனார்**

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச. பாலகிருஷ்ணன். 12/11/1993

அச்சுப்பதிவு: 334,காலி வீதி இரத்மலானை நவகம அச்சகம்.